# இந்து ஒளி

HINDU OLI

தீபம் 21 சுடர் 8



தீபாவளிச் சிறப்பிதழ்

ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 1ம் நாள்
October 18th 2017

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

## கடந்த 16-09-2017 அன்று நடைபெற்ற "Some Aspects of Hinduism", "இராவண தேசம்" ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவின் பதிவுகள் சில...



சக்தி இல்ல மாணவியர் வழங்கிய இறைவணக்கம்.





பிரதம விருந்தினர் - மேல்மாகாண ஆளுநர் மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் மற்றும் திரு.வே.கந்தசாமிஆகியோரிடமிருந்து சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வலர்கள்.



மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் அவர்களிடமிருந்து திரு.சி.தனபாலா அவர்கள் சிறப்புப்பிரதியை பெற்றுக்கொள்கிறார்.





கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய திரு.கனக-ஈஸ்வரன் அவர்களிடமிருந்து சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வலர்கள்.



ஜனாதிபதி சட்டத்தரணி திரு.கனக-ஈஸ்வரன் அவர்களை கௌரவிக்கும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்.



திருமதி திலகா விஜயரட்ணம் அவர்கள் மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் அவர்களுக்கு தனது நூலின் சிறப்புப் பிரதியினை வழங்குகிறார்.





மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் அவர்களுக்கு மாமன்ற பொதுச்செயலாளர் திரு.வே.கந்தசாமி அவர்கள் பொன்னாடையையும் திரு சி.தனபாலா அவர்கள் சந்தனமாலையையும் அணிவித்து கௌரவித்தனர்.



நூலாசிரியர் திருமலை நவம் அவர்களை மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் அவர்கள் கௌரவித்தார்





நூலாசிரியை திருமதி திலகா விஜயரட்ணம் அவர்களை மாமன்றப் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் பொன்னாடை அணிவித்தும் திருமதி வனஜா தவயோகராஜா அவர்கள் சந்தனமாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

உ
சிவமயம்
# இந்து ஒளி
தீபம் - 21 சுடர் - 08
ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 01ஆம் நாள் (18.10.2017)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

தாயினும் நல்ல தலைவர் என்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே

### திருவாசகம்

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்களத்தனை யுந்துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புனையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ

### திருவிசைப்பா

திருநெடு மால்இந் திரன்அயன் வானோர்
திருக்கடைக் காவலின் நெருக்கிப்
பெருமுடி மோதி உருமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றுப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லன்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்காது அமலச்செங் கமல
மலர்முகம் கலந்ததுஎன் கருத்தே

### திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
சுரந்துங் சுரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

களவுபொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமஞ் சாற்றும் அவ்வொழுக லாற்றார்

திருச்சிற்றம்பலம்

## அறம் வெல்லும் பாவம் தோற்கும்!

எமது சமயம் அறத்தை வலியுறுத்தும் ஆதிச்சமயமாகும். அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பதற்கு அடையாளமாகவே தீபத்திருநாளாகிய தீபாவளி கொண்டாடப்படுகிறது.

நரகாசுரன் என்னும் அசுரன் பல கொடுமைகளைச் செய்து பலரைத் துன்புறுத்தியவன். அவனால் பாதிக்கப்பட்டவர்கள் கிருஷ்ணபரமாத்மாவுக்கு முறையிட்டனர். அதன் விளைவாக நரகாசுரவதம் இடம்பெற்றது. உயிர்பிரியும் வேளையில் நரகாசுரன், தான் செய்த தவறை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்டான். ஆணவத்தினால் அழிவைப் பெற்றுக்கொண்ட யான், இறக்கும் இத்தினத்தை அனைவரும் விளக்கேற்றி ஆணவ இருளால் அழிவே நேரும் என்பதை நினைவுகூர தீபங்கள் ஏற்றி இருளை அகற்றி நினைவுக்கூர்ந்து கொண்டாட அருளும்படி என வேண்டுதல் விடுத்தான். அந்நாளே தீபாவளி திருநாளாக கொண்டாடப்படுகிறது.

அதர்மம் அழிவைத் தந்துவிடும். ஆட்சி பீடங்களில் ஏறுபவர்கள் தர்மத்தின் வழியில் மக்களை நேசிக்காவிட்டால், தர்மம் தண்டித்துவிடும். புராணங்கள், இதிகாசங்கள், அறக்காப்பியங்கள் இச்செய்தியை சிறப்பாக எடுத்துக்காட்டியிருக்கின்றன. இந்த வகையில் தீபாவளித் திருநாள் உலகத்துக்கு உன்னதமான தத்துவத்தை சொல்வதாக அமைந்துள்ளது.

பிறரை துன்புறுத்துதல், பிறருக்கு கேடு விளைவித்தல், நீதியான ஆட்சி செய்யாமை, நலிந்தவர்களுக்கு உதவாமை போன்றவை ஆபத்தானவை. அரியாசனத்தில் வீற்றிருக்கும் மன்னன் எவ்வாறு அறத்தை பின்பற்ற வேண்டும் என பெரியபுராணத்தில் சேக்கிழார் எடுத்துச் சொல்கிறார்.

மாநிலம் காவலன் ஆவான்
மன்னுயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு
தன்னால் தன் பரிசனத்தால்
ஊனம் மிகுபகைத் திறத்தால்
கள்வரால் உயிர்கள் தம்மால்
ஆன பயம்ஐந்தும் தீர்த்து
அறம் காப்பான் அல்லனோ?

மனுநீதிகண்ட சோழன் பேணிய மனுதர்மத்தை மேற்குறித்த பாடலில் சேக்கிழார் விளக்குகிறார். ஆட்சி

மறுபக்கம் பார்க்க...

## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண் புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரண் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

அதிகாரங்களுக்குள் வருபவர்கள் மனுதர்மங்களை பேணவேண்டும். எல்லோருக்குமுள்ள உரிமைகளை வழங்கவேண்டும். அப்பாவி மக்களின் துன்பங்களை தீர்க்காத மன்னர்கள் என்றோ ஒருநாள் அறத்துக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

சூரபத்மன், கஜமுகாசுரன், மகுடாசுரன், நரகாசுரன் அனைவரும் அரியாசனத்தில் வீற்றிருந்து ஆட்சி செய்தார்கள். அவர்கள் பிற உயிர்களுக்கு செய்த கொடுமை காரணமாக அனைத்தையும் இழந்து அழிவை சந்தித்தனர். இறைவன் அப்பாவி மக்களின் இன்னலைப் போக்குவதற்கு, காலத்துக்குக் காலம் தோற்றம் பெறுவது வழக்கம். எனவே, அதர்மவழியில் மக்களை துன்புறுத்துபவர்கள் அறத்தை உணர்ந்து, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ வழிசெய்தல் வேண்டும்.

இலங்கையில் அப்பாவி தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் அனைவரும் அக்கறை கொள்ளுதல் வேண்டும். உரிமைகளை கொடுக்கக்கூடாது என அறத்துக்கு மாறாக நிற்பவர்கள் என்றாவது ஒருநாள் அறத்தை உணர்வார்கள். அறம் வெல்வதும் பாவம் தோற்பதும் நாம் அறிந்ததே. எம்மண்ணில் அறம்வாழ தீபாவளி திருநாளிலே அனைவரும் பிரார்த்திப்போமாக!

"யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர்-பவதி பாரத
அப்யுத்தானம் அதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்"

அர்ஜுனா! உலகில் தர்மம் குறைந்து, அதர்மம் மேலோங்கும் போதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்.

"பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம-ஸம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே!"

நல்லவர்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் நான் யுகங்கள் தோறும் அவதரிக்கிறேன்.


**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

ஐப்பசி 2017
தீபாவளிச் சிறப்பிதழ்



**ஆசிரியர் குழு :** திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| *ஒரு பிரதியின் விலை* | ரூபா 50.00 |
| *வருடாந்தச் சந்தா (உள்நாடு)* | ரூபா 300.00 (தபால் செலவு தனி) |
| *வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* | US டொலர் 15 |

**அகில இலங்கை இந்து மாமன்றம்**



**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை :** 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk



*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*



**HINDU OLI** | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

October 2017
**Special Issue for Deepavali**



**Editorial Board :** Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |

**ALL CEYLON HINDU CONGRESS**



**Head Office:** 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com


**Jaffna Office :** 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**



# ஆன்மீகச் சுடரின் அருள்மடல்



## இளமையில் அறப்பண்பை வளர்க்க வேண்டும்!



பாரதத்திலே உள்ள புண்ணிய நதிகளில் தலையாய நதியாக கருதப்படுவது கங்கைநதி. கங்கை நதி செல்லும் இடமெல்லாம் அமைந்திருக்கும் புண்ணிய நகரங்களிலுள்ள மக்கள் கங்கைக் கரையிலே கூடி கங்காதேவிக்கு பூசை வழிபாடு செய்வார்கள்.

ஒருநாள் ஒரு வயதான மூதாட்டி ஒருவர் கங்கைக் கரையில் அமர்ந்திருந்து கங்காதேவியை வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியால் ஒரு வழிப்போக்கன் சென்று கொண்டிருந்தான். அவனுக்கு மிகவும் பசியாக இருந்தது. அந்த மூதாட்டியின் தோள்பையிலிருந்த ரொட்டியை அந்த வழிப்போக்கன் கண்டுவிட்டான். அவன் அந்த மூதாட்டியை அணுகி, "அம்மா எனக்குப் பசியாக இருக்கிறது. இந்த ரொட்டித் துண்டை தருகிறீர்களா?" என்று கேட்டான். அந்த மூதாட்டியும் தயங்காமல் ரொட்டியை அவனிடம் கொடுத்தார். அந்த ரொட்டித் துண்டை மூதாட்டி எடுக்கும் பொழுது அந்த பையுக்குள் ஒரு விலையுயர்ந்த இரத்தினக்கல் இருப்பதை வழிப்போக்கன் கண்டுவிட்டான். அந்த வழிப்போக்கன் சிந்தித்தான். இந்த ரொட்டியைச் சாப்பிட்டால் ஒரு நேர பசியாறும். இந்த இரத்தினக்கல் தனக்கு கிடைத்துவிட்டால் வாழ்நாள் முழுதும் பசியில்லாமல் வாழலாம் எனக் கருதியவனாக அந்த மூதாட்டியிடம் "அம்மா எனக்கு இந்த ரொட்டி வேண்டாம். உங்களிடமுள்ள இரத்தினக்கல்லை தருகிறீர்களா?" எனக் கேட்டான். மூதாட்டி எந்தவித தயக்கமும் இன்றி அந்த இரத்தினக்கல்லை அவனிடம் கொடுத்தார். இரத்தினக்கல்லோடு சென்ற வழிப்போக்கன் மீண்டும் மறுநாள் அந்த மூதாட்டியைத் தேடி வந்தான். அந்த இரத்தினக்கல்லை மூதாட்டியிடம் கொடுத்து, "அம்மா இந்த இரத்தினக்கல்லை விட பெறுமதியான ஒரு பொருள் உங்களிடம் உள்ளது. அதனை தருகிறீர்களா?" என்று கேட்டான். மூதாட்டி ஆச்சரியத்துடன் அவனைப் பார்க்க, அதற்கு வழிப்போக்கன் "இந்த இரத்தினக்கல்லை கொடுக்கின்ற நல்ல மனம் உங்களிடம் இருக்கின்றது. அந்த மனத்தினை எனக்குத் தாருங்கள்" என்று கேட்டான்.

இதனையே ஔவைப் பிராட்டியார் "அறம் செய்ய விரும்பு" என்று கூறியுள்ளார். தருமம் செய்வதிலும் மேலாக எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராது மனமகிழ்வோடு அதனை செய்யவேண்டும். தரும சிந்தை இயல்பாகவே எங்களிடம் வளரவேண்டும். தருமம் செய்வதற்கு நாங்கள் செல்வந்தர்களாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. எங்களிடம் இருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதுதான் அறம். பெயர் புகழுக்காக தரும காரியங்களைச் செய்வது உண்மையான அறம் அன்று. தரும சிந்தையையும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கையும் இளைய சமுதாயத்திற்கு நாம் ஊட்டவேண்டும். பாடசாலைகளிலும், அறநெறிப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களை அறம் செய்ய விரும்பு என்கின்ற ஆத்திசூடியை மனனம் செய்து கொள்ளுவதோடு நின்றுவிடாமல் மாணவர்கள் அன்றாட வாழ்வில் அறச் செயல்கள் செய்வதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஆவன செய்யவேண்டும்.

அமெரிக்காவில் பல்வேறு மாநிலங்களிலும் எம்மிடம் சமயபாடம் படிக்கும் மாணவர்கள் பல சேவைத்திட்டங்களை தாமாகவே உருவாக்கி வறியவர்களுக்கும் வலுவிழந்தவர்களுக்கும் பெரிதும் உதவி வருகிறார்கள். பணம் பொருள் கொடுப்பது மட்டும் தானம் அல்ல, சிரமதானமும் ஒரு பெரும் தானமே. இன்று இளைய தலைமுறையினர் பொன்னான நேரத்தை வீணடிக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே சிரமதானப்பணிகள் செய்து தாம் வாழும் சமூகத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம்.

இன்று சமூகத்திலுள்ள பல பிரச்சினைகளுக்கு மூலகாரணம் சுயநலம், பதவிஆசை, தற்பெருமை போன்றவைகளாகும். சிறுவயதில் இருந்தே சிரமதானம் செய்தல், மற்றவர்களுக்கு உதவுதல், பெரியவர்களை மதித்தல், பண்பாகப் பேசுதல் போன்ற நல்ல குணவியல்புகளை எமது இளைய தலைமுறையினர் மத்தியில் நாம் வளர்க்கவேண்டும். புத்தகக்கல்வி மட்டும் வாழ்க்கைக்கு உதவும் என நினைப்பது மடமைத்தனம்.

மலரும் இந்த தீபாவளித் திருநாளில் எமது உள்ளங்களில் விளக்கேற்றி அறவழியில் மற்றவர்களுக்கு உதவி செய்கின்ற மனநிலையை எங்களுக்கு அருளுமாறு இறைவனை வேண்டுவோமாக!

ரிஷி தொண்டுநாதன்



# ஸ்ரீ லக்ஷ்மீ சமேத ஸ்ரீமந் நாராயணர் அருள்பொழியும் தீபாவளித் திருநாள்!

தீபாவளி , ஐப்பசி மாதம் அமாவாசை அன்று கொண்டாடப்படும் ஓர் இந்துப் பண்டிகையாகும். இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும், சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர். மலேசியா , சிங்கையில் வாழும் தமிழர்களும் தீபாவளியைக் கோலாகலமாகக் கொண்டாடச் செய்கின்றனர் .

' தீபம் ' என்றால் ஒளி , விளக்கு .' ஆவளி ' என்றால் வரிசை . வரிசையாய்

விளக்கேற்றி , இருள் நீக்கி , ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கணம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண்டும். ஒரு தீயகுணத்தை எரித்துவிட வேண்டும் .

**தோற்ற மரபு:**
**இந்துக்களின் தீபாவளி**

இந்துக்கள் திபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங்களை, புராணக் கதைகளின் வழியாகக் கூறுகின்றனர்.

**புராணக் கதைகளின் படி**

விஷ்ணு புராணத்தில் தீபாவளியன்று விடியற்காலையில் நீராடி மகாலட்சுமியை பூஜை செய்து தீபங்களை வீட்டில் பல இடங்களில் வைத்தால் லட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இராமாயண இதிகாசத்தில், இராமர், இராவணனை அழித்து விட்டு, தனது பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்து, மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும்பிய நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நாளே தீபாவளியாக கொண்டாடப்படுவதாக கருதப்படுகிறது.

நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குத் தோன்றியவன். அசுர வதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர சுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்து விட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இந்த தீபாவளி எப்படி வந்தது என்று பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான்.

இதை அறிந்த மகா விஷ்ணு அவனை வதம் செய்ய நினைத்தார். ஆனால் அவன் பூமாதேவியிடமிருந்து தோன்றியவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகா விஷ்ணு ஒரு யுக்தி செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார்.

அவன் மகா விஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்தியபாமா கோபம் அடைந்து நரகாசுரனுடன் போர் புரிந்தார். சத்தியபாமா பூமாதேவியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி விழுந்தான்.

அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது. அப்போது அவரிடம், அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை நினைந்து மகிழ்வுடன் கொண்டாட வேண்டும் என்று வேண்டினான்.

மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. வடமாநிலங்களில் ராவணனை வென்று சீதாப்பிராட்டியை மீட்ட ராமர், அயோத்தி திரும்பிய நாள் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது. வால்மீகி ராமாயணத்தில் முதன் முதலாக தீபாவளி பற்றிய குறிப்புகள் உள்ளன.

கந்தபுராணத்தின் படி , சிவனோடு ஒரு சந்தர்ப்பத்தில் கோபம் கொண்ட சக்தி, சிவனின் அருளை உணர்ந்து 21 நாள் கேதாரகௌரி விரதம் இருந்து சிவனில் பாதியாய் ஒன்றிணைகிறார். இவ்வாறான விரதம் முடிவுற்ற அத்தினத்தில் சிவன் தன்னில் ஒரு பாதி சக்தி என்பதை ஏற்று அர்த்தநாரீஸ்வரர் உருவ மெடுக்கின்றார். இவ்வாறு ஆணில் பெண் சரிபாதியாக இணையும் நன் நாளினை நினைவுபடுத்துவதாகவும் தீபாவளி அமைகின்றமை சிறப்பானது.

**தீபாவளியின் பெருமை:**

வெளிச்சத்தின் அருமை இருட்டில் தான் தெரியும். இருட்டில் தடுமாறும்போது, எங்கிருந்தாவது ஒளிராதா என தவிக்கிறோம். மனம் கவலையில் மூழ்கி சோகத்தால் இருண்டிருக்கும். அப்போது தீப ஒளி என்னும் நல்வழி தோன்றாதா! அதன் நடுவே நாம் குதூகலத்துடன் இருக்கமாட்டோமா என எண்ணுகிறோம். இதே போன்ற சிக்கல் தீர்க்கதமஸ் என்ற முனிவருக்கும் ஏற்பட்டது. அவர் இருண்ட காட்டில் தனது மனைவி, மக்களுடன் வசித்தார். இருட்டினால் மட்டுமல்ல, துஷ்ட மிருகங்கள், விஷ ஜந்துக்கள், அரக்கர்களாலும் அவர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். எனவே அந்த இடம் ஒளிமயமாக

வேண்டும் என விஷ்ணுவை நினைத்து பிரார்த்தித்தார். ஒருமுறை சனாதன முனிவர் அங்கு வந்தார்.

அவரிடம் தீர்க்கதமஸ் சந்தேகம் ஒன்றை கேட்டார். மனிதன் துன்பமாகிய இருளிலிருந்து விடுபட விரதங்களை அனுஷ்டிக்கிறான். இந்த விரதங்களும் பட்டினி, உடலை வருத்தும் தவம், நேர்ச்சை ஆகியவையாகத் தான் உள்ளன. இவை மேலும் மனிதனை துன்பப்படுத்துகின்றன. மனமகிழ்ச்சிக்கு சுலபமான வழி ஏதும் இல்லையா? என கேட்டார்.

இதற்கு பதிலளித்த சனாதனர், தீவிர விரதங்களால் மட்டும் தான் ஒளிமயமான பரம்பொருளைக் காணமுடியும் என நமது வேதங்கள் வழி ஏதும் வகுக்கவில்லை. தீர்த்தமாடி, புத்தாடை உடுத்தி, இனிப்பு பண்டங்களை சாப்பிட்டு, ஏழை எளியோர்க்கும் கொடுத்து, தீபங்கள் ஏற்றி, மனம் மகிழ்ந்து கொண்டாடுவதாலும் நாம் துன்பமாகிய இருளிலிருந்து சுலபமாக விடுபடலாம் என போதித்தார்.

இந்த விரதத்தை எப்படி பின்பற்றுவது என்று தீர்க்கதமஸ் கேட்கவே, சனாதன முனிவர் மிகவும் விரிவாக விளக்கினார். துலா (ஐப்பசி) மாதம் தேய்பிறையில் திரயோதசி அன்று மகாபிரதோஷ பூஜை செய்து, யமதீபம் ஏற்ற வேண்டும். எமதர்ம ராஜாவை மனதால் பிரார்த்தனை செய்து, அகாலமரணம் சம்பவிக்காமல் காக்கும்படி பிரார்த்திக்க வேண்டும்.

மறுநாள் நரக சதுர்த்தசி அன்று, நரகத்திற்கு செல்லாமல் இருக்கவும், ஏற்கனவே நரகத்தில் துன்பப்படுபவர்கள் அங்கிருந்து விடுபடவும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். எண்ணெய், அரப்புத்தூள், சந்தனம், குங்குமம், மலர்கள், தண்ணீர், புத்தாடை, இனிப்புப்பண்டங்கள், தீபம், இனிப்பு மருந்து, நெருப்புப்பொறி ஆகியவற்றிற்கு பூஜை செய்ய வேண்டும்.

எண்ணெயில் லட்சுமிதேவியும், அரப்புப்பொடியில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமிதேவியும், குங்குமத்தில் கவுரியும், புஷ்பத்தில் மோகினிகளும், தண்ணீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும், இனிப்பு பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்புப் பொறிகளில் ஜீவாத்மாவும் நமக்கு அருள்பாலிப்பார்கள். இவற்றிற்கு கற்பூர ஆரத்தி காட்டி வணங்கினால் அனைவரும் மனம் குளிர்ந்து ஆசி வழங்கி, நம் குடும்பத்தாரை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துவருவார்கள் என்றார்.

**கொண்டாடும் முறை**

தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் துயில் எழுவர். இல்லத்தின் மூத்த உறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு (மஞ்சளும் சந்தனமும் கலந்த கலவை) இட்டுமகிழ்வர். தீபாவளி அன்று வெந்நீரில் குளிக்க வேண்டும்.

வெந்நீரில் கங்கை யிருப்பதாக நம்பிக்கை. கங்கை நம் பாவங்களை போக்குவாள். தீபாவளி அன்று எண்ணை தேய்த்து தான் குளிக்க வேண்டும். நல்லெண்ணெயில் ஓமம் மற்றும் மிளகு போட்டுக் காய்ச்சுவது சிலரது வழக்கம் . மக்கள் புத்தாடை உடுத்தியும் பட்டாசுகள் வெடித்தும் மகிழ்வர்.

**சகோதரிகளுக்கு பரிசு:**

தமிழகத்தில், சிறுவீட்டுப் பொங்கலின் போது, நீர்நிலைகளில் தீபம் விடும் வழக்கம் இருக்கிறது. வெற்றிலையில் கற்பூரம் ஏற்றி வைத்து மிதக்க விடுவார்கள். வடமாநிலங்களில் தீபாவளியை ஐந்து நாட்கள் கொண்டாடுகின்றனர். இதில் ஐந்தாவது நாள் எமதர்ம வழிபாடு நடக்கும். எமனுக்கு யமுனை என்ற தங்கை இருந்தாள். எமன் தன் தங்கைக்கு தீபாவளியன்று பரிசுப் பொருள்களை வழங்கி மகிழ்ந்தான்.

தங்கை யமுனையும் தன் அண்ணனுக்கு விருந்து உபசரித்து நன்றி தெரிவித்தாள். இவ்வழக்கம் இன்றும் தொடர்கிறது. வடமாநிலங்களில் தங்கள் சகோதரிகளுக்கு தீபாவளிப் பரிசுப் பொருட்களை சகோதரர்கள் வழங்குவார்கள். பெண்களும் சகோதரர்களுக்கு விருந்து அளித்து மரியாதை செய்கிறார்கள். அன்றைய தினம் பெண்கள் தீபங்களை ஆற்றில் மிதக்க விடுவார்கள். அந்த தீபங்கள் எரிந்து முடியும் வரை நீரில் அமிழ்ந்து விடாமலும், அணைந்து போகாமலும் பார்த்துக் கொள்வார்கள். தீபங்கள் நன்கு பிரகாசித்தால் அந்த வருடம் முழுவதும் சுபிட்சமாக அமையும் என்று நம்புகிறார்கள்.

பொதுவாக தீபாவளி அன்று பாரம்பரிய உடைகளை அணியவே பெரும்பாலான தென்னிந்திய மக்கள் விரும்புகின்றனர் . அன்று அநேக பெண்கள் புடவையும் (குறிப்பாக பட்டுப்புடவை) ஆண்கள் வேட்டியும் அணிவர். தீபாவளி அன்று ஒவ்வொரு இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிக்கும். அன்று இனிப்புக்கள் நிறைய செய்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர்.பரிசுகள் தந்து மகிழ்வர். பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவர்.தீபாவளி இலேகியம் (செரிமானத்திற்கு உகந்தது) அருந்துவதும் மரபு. தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம், அன்றைய தினம், அதிகாலையில் எல்லா இடங்களிலும், தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமிதேவியும் அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுவதேயாகும் .

அன்றைய தினம் , எல்லா நதிகள் , ஏரிகள் , குளங்கள் , கிணறுகளிலும் , நீர்நிலைகளும் " கங்கா தேவி " வியாபித்து இருப்பதாக ஐதீகம் . அடிப்படையில் இந்துப் பண்டிகையாய் இருந்தாலும், சாதி மத வேறுபாடின்றி அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகை தீபாவளி.

இந்து மக்கள் அனைவருக்கும்
உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

- அகில இலங்கை இந்து மாமன்றம்

# சஷ்டியில் ஷண்முகன் தரிசனம் !



ஆறு என்ற எண், முருகப்பெருமானுடன் மிகவும் தொடர்புடையது. அவனது திருமுகங்கள் ஆறு, கார்த்திகை மாதர் அறுவரால் வளர்க்கப்பட்டவன் அவனது மந்திரம் ஆறெழுத்து - நம: குமாராய அல்லது சரவண பவ் அவனது இருப்பிடம் அறுபடை வீடுகள், அவனுக்குரிய விரத நாட்களில் சஷ்டி விரதம், மஹா ஸ்கந்த சஷ்டியின் ஆறாம் நாள் சூரசம்ஹாரம் என இப்படியாகப் பல விஷயங்கள் ஆறுமுகனுடன் தொடர்புடையன.

சஷ்டி என்பது வளர்பிறை அல்லது தேய்பிறையின் ஆறாம் நாள். இதற்கு சஷ்டி திதி என்று பெயர். இத்திதிக்கு நாயகனாகவும், இத்திதியைக் குறித்த விரதத்துக்கு முக்கிய தெய்வமாகவும் விளங்குபவன் குகப் பெருமான். சுப்ரமணியருடைய மாலா மந்திரத்தில், சஷ்டி ப்ரியாய என்னும் மந்திரம் இடம் பெறுகிறது. சஷ்டி எனும் திதியில் விருப்பமுள்ளவன் என்றும், சஷ்டிதேவியை விரும்புபவன் என்றும் இதற்குப் பொருள். ஒரு நாளைக்கு உரிய ஆறுகால வழிபாடுகளுள் ஆறாவதாக விளங்குவது அர்த்தஜாம பூஜையாகும். சஷ்டிபதி என்றால் இந்த வேளையில் (அர்த்தசாமத்தில்) செய்யப்பெறும் வழிபாட்டில் மிகவும் விருப்பம் கொள்பவன் என்றும் பொருள். திருவிடைக்கழி திருத்தலத்தில், குரா மரத்தடியில் முருகன் பூஜித்த பத்ரலிங்கத்துக்கு, தினமும் அர்த்தஜாமத்தில் முதலில் பூஜை நடைபெற்று, பின்னரே, மூலஸ்தானத்தில் வழிபாடு செய்வர்.

**சரவணபவ தத்துவம்**

"சேனானீனாம் அஹம் ஸ்கந்த:" - படைத்தலைவர்களுள் நான் ஸ்கந்தன் என்றார் கண்ணன் கீதையில். சூரபத்மாதியர், சிங்கமுகாசுரன், தாரகாசுரன், கிரௌஞ்சாசுரன் ஆகியோர் பரம சிவபக்தர்களே, அவர்கள் சாகாவரம் வேண்டினர். அந்த வரம் கிடைக்காமல் போகவே சிவனின் மறு அவதாரத்தால் அழிவை வேண்டினர். அது கிடைத்தது. சிவன் தங்களை அழிக்க மாட்டான் என நம்பி, அகங்காரம் மேலிட, அவர்கள் தேவர்கள் அனைவரையும் பணியாளர்களாக்கினர். பிரம்மா, விஷ்ணு முதல், யாவரும் மோன நிலையிலிருந்த சிவபெருமானை வேண்டினர், அவரும் இசைந்து பார்வதியை பங்குனி உத்திரத்தன்று மணம் புரிந்தார். சூரபத்மாதியரின் அட்டூழியத்தை அடக்க, சிவ மறு அவதாரம் வேண்ட, சிவன் தமது ஐந்து முகங்களுடன் அதோமுக்தினின்றும் ஜோதியை எழுப்பி, வாயுவையும் அக்னியையும் அதை ஏந்தி கங்கையில் இடச் செய்தார். கங்கை, சரவணப் பொய்கையில் 6 தாமரைகளில் இட்டாள். அங்கு 6 ஜோதியும் 6 குழந்தைகளாக மாறின. அவர்கள் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டனர். அதனால் முருகன், காங்கேயன், சரவணபவன், கார்த்திகேயன், என்றும் துதிக்கப்படுகிறான்.

உமை, குழந்தைகளை அழைத்து அணைக்க ஆறு குழந்தைகள், ஆறுமுகம், பன்னிருகை, இருகால், ஒருடலாகக் கந்தனாக (ஸ்கந்தன் ஸ்ரீ ஒன்று சேர்ந்தவன்) மாறினான். கந்தன் உதித்த தினம் வைகாசி மாத - விசாக பௌர்ணமி. அதனால் அவன் பெயர் விசாகன். சிவஜோதியின் மறுஉருவம். வேதசொரூபன் அதனால் சுப்ரமண்யன், என்றும் இளையவன் அதனால் குமாரன், மிக அழகானவன் ஆகவே முருகன் (முருக என்றால் அழகு).

மு - முகுந்தன் என்கிற விஷ்ணு
ரு - ருத்ரன் என்கிற சிவன்
க - கமலத்தில் உதித்த பிரம்மன்.

ஆக, முருகன் மும்மூர்த்திகள் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்து மக்களுக்கு அருளும் கருணை வடிவமானவன்.

ஆறுமுகமான - சண்முக தத்துவம் என்ன ?

ஒரு முகம் - மஹாவிஷ்ணுவுக்கு,
இரு முகம் - அக்னிக்கு,
மூன்று முகம் - தத்தாத்ரேயருக்கு,
நான்முகம் - பிரம்மனுக்கு,
ஐந்து முகம் - சிவனுக்கு, அனுமனுக்கு, காயத்ரி தேவிக்கு, ஹேரம்ப கணபதிக்கு
ஆறு முகம் - கந்தனுக்கு.

நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் இவ்வாறு கூறுவார்

1. உலகைப் பிரகாசிக்கச் செய்ய ஒரு முகம்,
2. பக்தர்களுக்கு அருள ஒரு முகம்,
3. வேள்விகளைக் காக்க ஒரு முகம்,
4. உபதேசம் புரிய ஒரு முகம்,
5. தீயோரை அழிக்க ஒரு முகம்,
6. பிரபஞ்ச நன்மைக்காக வள்ளியுடன் குலவ ஒரு முகம்.

**சரவணபவ** - என்பது சடாட்சர மகாமந்திரம் (6 எழுத்துகள்). இதன் மகிமை என்ன?

ச - லக்ஷ்மி கடாட்சம்
ர - சரஸ்வதி கடாட்சம்
வ - போகம் - மோட்சம்
ண - சத்ருஜயம்
ப - ம்ருத்யுஜயம்
வ - நோயற்ற வாழ்வு

ஆக, பிரணவ சடாட்சரம் கூறி இவ்வாறு பயன்களும் பெறலாம். ஆறுபடை வீடுகளும் ஆறு குண்டலினிகளாக விளங்குகின்றன.

திருப்பரங்குன்றம் - மூலாதாரம்
திருச்செந்தூர் - ஸ்வாதிஷ்டானம்
பழனி - மணிபூரகம்
சுவாமிமலை - அனாஹதம்
திருத்தணிகை - விசுத்தி
பழமுதிர்சோலை - ஆக்ஞை.

ஆக ஆறுமுகனான திருமுருகனை, விசாக, கார்த்திகை, பௌர்ணமி நாட்களில் ஸ்கந்த ஷஷ்டியில் துதித்து வழிபட்டு குகானந்த அனுபூதி வாரிதியில் மூழ்குவோம். முருகனுக்கு மூன்று மயில்கள் உண்டு. மாங்கனி வேண்டி உலகைச்

சுற்றி வர உதவிய மயில் மந்திர மயில். சூரசங்காரத்தின்போது இந்திரன் மயிலாகி முருகனைத் தாங்கினான். இது தேவ மயில். பின் சூரனை இருகூறாக்கியதில் வந்த மயில்தான் அசுர மயில்.

ஆறுமுகமும் 12 கரங்களும் கொண்ட முருகனின் திருக்கோலத்தை சஷ்டி விழாவின்போது மட்டுமே திருச்செந்தூரில் முழுதாகத் தரிசிக்கலாம். மற்ற நாட்களில் அங்கவஸ்திரத்தால் மூடி விடுவார்கள். வியாசர் எழுதிய 18 புராணங்களில் ஸ்காந்தம் என்னும் கந்தபுராணமே மிகப்பெரியது. ஒரு லட்சம் சுலோகங்கள் கொண்டது. மற்ற எல்லா புராணங்களும் சேர்ந்தே மூன்று லட்சம் சுலோகங்கள்தான். கந்தன் பல பெயர்களால் போற்றப்படுகிறான்.

**விரதம் இருப்பது எப்படி?**

கந்தசஷ்டி விரதம் இருப்பவர்கள் பிரதமைக்கு முதல்நாள், ஒரு நேரம் மட்டும் உணவு உட்கொள்ள வேண்டும். பின் விரத நாளான பிரதமை அன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சுத்தமான ஆடைகளை அணிந்து, முருகன் கோவிலுக்கு சென்று வழிபட்டு காப்பு அணிந்து விரதம் இருக்கத் தொடங்க வேண்டும். தொடர்ந்து 6 நாட்கள் விரதம் இருக்க வேண்டும். முடிந்தவரை கோவிலிலேயே தங்கி இருந்து இறைவனை தரிசனம் செய்ய வேண்டும்.

விரத நாட்களில் சிறிது தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் இருப்பது சிறந்தது. அவ்வாறு இருக்க முடியாதவர்கள் சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு வழிபாடுகளை முடித்து, இறைவனுக்கு நிவேதனமாக வைத்த பால், பழம் ஆகியவற்றை சாப்பிடலாம். ஆறாம் நாளன்று உபவாசம் இருக்கலாம். உடல் நலமின்றி இருப்பவர்கள் இறைவனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட சர்க்கரை சாதத்தினை சாப்பிடலாம்.

பகலில் உறங்குவது கூடாது. சஷ்டியன்று இரவிலும் விழித்திருக்க வேண்டும். ஆறு காலங்களிலும் பூஜை செய்ய வேண்டும். முருக பக்தர்களுடன் உரையாடுவது, கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது நல்லது. கந்தனுடைய வரலாற்றை கேட்க வேண்டும்.

மறுநாள் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன் எழுந்து நீராடி முருகனை வழிபட்டு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கி, பின் தானும் உண்டு விரதத்தினை சிறப்புடன் முடிக்க வேண்டும்.

மாதந்தோறும் வரும் சுக்கிலபட்ச சஷ்டி விரதம் இருப்பவர்களின் வினைகள் வெந்து சாம்பலாகும். அனைத்து நலன்களும் கிடைக்கப்பெறுவர். கந்தசஷ்டி கவசத்தினை உளமார ஒன்றித்து பாராயணம் செய்தால் மக்கட்செல்வமும், பொருட்செல்வமும் கிடைக்கும். கடன் தொல்லை நீங்கும். வேலைவாய்ப்பு கிடைக்கும். மற்ற நபர்களால் செய்யப்பட்ட தீய செய்வினைகளில் இருந்து காப்பாற்றப்படுவோம். நாம் செய்த தீயவினைகளிலும் இருந்து விடுபட்டு உய்யலாம்.

**கந்த சஷ்டி கவசப் பாராயணம்**

சிவபெருமானே உருவாய் அமைந்த அருள்நிறை திருமுருகப் பெருமானின் தவ வடிவத்தைக் கண்டு மகிழ்ந்த அருட்செல்வர் திருப்பெருந்திரு தேவராய சுவாமிகள், கந்தப் பெருமான் கோயில் கொண்டுள்ள ஆறுபடை வீடுகளுக்கும் தனித்தனியாக ஆறு கந்தர் கவசங்களை அருமையாகப் பாடி அருளியுள்ளார். அவற்றில் மிகவும் அருமையானது திருச்செந்தூர் மேவிய திருக்குமரன் கவசம்.

கவசம் என்றால் .. காப்பு, இரும்பால் செய்யப்பட்ட சட்டை, காவல் செய்யும் மந்திரம், உடம்புக்கூடு, காப்பை உண்டாக்கும் மந்திரம் என்று சொல்லுவார்கள். அந்த முறையில் திருப்பெருந்திரு தேவராய சுவாமிகள் அருள்மிகு திருச்செந்திலாண்டவனான கந்தப் பெருமான் மீது பாடியுள்ள இந்தக் கவசம் இரும்புச் சட்டையைப்போன்று நம்மைக் காக்கும் காவல் மந்திரமாகும். அதனால்தான் அவர் அருள்தரும் திருமுருகனை அழைத்து, மனித உடம்பின் உறுப்புகளை எல்லாம், "காக்க காக்க" என்று 39 முறைகள் சொல்லிப் பாடியுள்ளார்.

கந்த சஷ்டி கவசத்தை ஆறுமுகப் பெருமான் திருமுன் அமர்ந்து நாள்தோறும் படிப்பது நல்லது. அதற்கு அவகாசம் இல்லாதோர் செவ்வாய்க்கிழமை தோறும் படிப்பது நல்லது. அதற்கும் இயலாதவர்கள் கந்தர் சஷ்டி ஆறு நாட்களிலுமாவது படிப்பது நல்லது.

இதனைப் படிப்பதால் வம்சவிருத்தி, காரிய வெற்றி, நோய் நீக்கம், கிரக தோஷ நிவர்த்தி, அறிவு செல்வ வளர்ச்சி, திருமணம் கைகூடுதல், பிள்ளைச் செல்வம் போன்ற நன்மைகள் ஏற்படும். அத்தோடு பேய் பிசாசு பயம் நீங்கும். பில்லி சூனியங்கள் அண்டாது.

"கந்த சஷ்டி கவசத்தை எப்படிப் பாடினால் பயன் கிடைக்கும் ?" என்ற கேள்விக்கு தேவராய சுவாமிகளே அவரது கவசப்பாடலின் பிற்பகுதியில் சொல்லியுள்ளார். அதாவது தூய்மையான மனத்தோடும் உடலோடும், சந்தேகம் சிறிதுமில்லாத உண்மையான நம்பிக்கையோடும், கந்தன் கருணையால் எந்தவித சந்தேகமும் இல்லாமல் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விடாமல் பாடிவருவோர்க்கு

கந்தனின் கருணை .. அருள் .. எளிதில் கிடைக்கும் என்று தேவராயரே தெளிவாக அவரது கவசப்பாடலின் 205ம் அடிமுதல் 210ம் அடி வரையுள்ள 6 வரிகளில் குறிப்பிடுகிறார். அதில் வரும்" ஒருநாள் முப்பத்து ஆறு உருக்கொண்டு, ஓதியே செபித்து" என்னும் ஒற்றை வரியே ஒருசில இறையன்பர்கள் குறைகாணும் சந்தேகத்துக்கு உரியதாகும். "அப்படியானால் ஒரு நாளைக்கு 36 முறை இந்தக் கந்தர் சஷ்டிக் கவசத்தைப் பாட வேண்டுமா? அப்படி பாடினால்தான் பலன் (அவனது அருள்) கிடைக்குமா?" என்பதே அவர்களது சந்தேகம்.

இதுவரையில் கந்தர் சஷ்டிக் கவசத்தைப் பாடி பயன் பெற்றவர்கள் யாரும் அதை 36 முறைகள் ஓதியதாக (பாடியதாக)ச் சொல்லவில்லை அல்லது தெரியவில்லை. அப்படி அன்றாடம் 36 முறைகள்மூ ஓதுவது இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையில் எல்லோருக்கும் சாத்தியமில்லை என்பதை மறுக்க முடியாது. ஆகையால் எல்லாரும் 36 முறைகள் கந்தர் சஷ்டிக் கவசத்தை ஒவ்வொரு நாளும் ஓத வேண்டும் என்பது கட்டாயமில்லை. இறையன்பர்கள் அப்படி 36 முறைகள் ஓத முடிந்தால் ஓதலாம். இல்லையேல் காலை, மாலை இரு வேளைகளும் மனத்தூய்மையோடு கண் மாறாமல் மனம் சிதறாமல் மாமுருகனிடம் மனம் தோய்ந்து உருகியவாறு ஓதித் திருநீறு அணிந்தால் போதும். எத்தனை முறை எந்தக் கவசத்தை ஓதினோம் என்பதைவிட எப்படி உண்மையான பக்தியோடு ஓதினோம் என்பதே மிகவும் முக்கியம். இறைவன் கந்தன் நீங்கள் ஓதும் கவசப் பாடலை மட்டுமல்ல, உங்கள் பண்பையும், அவரிடம் நீங்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த உண்மையான பக்தியையும், உங்கள் மனதின் தூய்மையையும் கூடப் பார்த்துத்தான் அவன் உங்களுக்கு அருள்புரிய வருவான் என்பதை நீங்கள் மனமார உணர வேண்டும்.

*தொடர்ச்சி 18ம் பக்கம்..*

# கந்தன் அருள்பொழியும் கார்த்திகை விரதம்



பன்னிரண்டு ஆண்டுகள் கார்த்திகை விரதமிருந்துதான் நாரதர், சப்த ரிஷிகளுக்கு மேலான பதவியை அடைந்தார். மகாபலிச் சக்கரவர்த்தி, திருக்கார்த்திகை விரதமிருந்தே தனது உடலின் வெப்பத்தைத் தணித்துக் கொண்டான். திரிசங்குவும், பகீரதனும் கார்த்திகை விரதமிருந்தே பேரரசர் ஆனார்கள். மகிஷனை வதம் செய்ததால் ஏற்பட்ட பாவம் நீங்க, பார்வதி திருக்கார்த்திகை விரதம் இருந்ததாகச் சொல்கிறது புராணம்.

**முருகனுக்கு உகந்த கார்த்திகை விரதம்**

முருகப்பெருமானுக்குரிய விரதங்களில் கார்த்திகை விரதம் நட்சத்திர அடிப்படையில் அனுஷ்டிக்கப்படுகிறது. மாதக் கார்த்திகைகளே சிறப்புடையது என்றால், கார்த்திகை தீபத்திருவிழா கொண்டாடப்படும் திருக்கார்த்திகை குமரனுக்கு மிக மிக முக்கியமானது. இதற்கு அடுத்த நிலையை ஆடிக்கிருத்திகை பெறும். இவ்விரதத்தை மேற்கொள்வோர் மேலான பதவிகளை அடைவர். இவ்விரதநாளில் முருகனுக்குரிய பாராயண நூல்களான கந்தசஷ்டிகவசம், சண்முககவசம் படிக்க வேண்டும். கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய கந்தபுராணபடனம் கேட்பதும் மிகநல்லது.

**கார்த்திகை பெண்களின் பிள்ளை**

சிவபெருமான் தன் ஐந்து முகங்களோடு ஆறாவது முகமான அதோமுகத்தையும் சேர்த்து ஆறு கண்களில் இருந்து நெருப்புப்பொறியை தோற்றுவித்தார். அப்பொறிகளை வாயுவும், அக்னியும்கங்கையில்சேர்த்தனர். ஆறுகுழந்தைகள் உருவாயின. அவர்களை வளர்க்கும் பொறுப்பை, கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரிடம் ஒப்படைத்தார். அவர்கள் பாலூட்டி சீராட்டி வளர்த்தனர். பிள்ளைகள் ஆறுபேரையும் காணவந்த பார்வதி ஆறுமுகத்தையும் ஒருமுகமாக்கினாள். அப்பிள்ளைக்கு கந்தன் என்ற திருநாமம் உண்டானது. கந்தன் என்றால் ஒன்று சேர்ந்தவன் எனப்பொருள். சிவபெருமான் முருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்களிடம், நம் பிள்ளையை நல்லமுறையில் வளர்த்த நீங்கள் அனைவரும் நட்சத்திர மண்டலத்தில் என்றென்றும் நிலைத்து வாழ்வீர்கள். உங்களை நினைவுபடுத்தும் வகையில் முருகனுக்கு கார்த்திகேயன் என்ற பெயரும் வழங்கும். கார்த்திகை நாளில் முருகனுக்கு விரதமிருந்து வழிபடுவோர் எல்லா சௌபாக்கியங்களையும் பெறுவார்கள் என்று அருள்புரிந்தார். காளிதாசர் இயற்றிய குமாரசம்பவத்தில் இந்த வரலாறு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பார்வதி இமவான் மகளாகப் பிறந்தது முதல் குமாரக்கடவுளான முருகனின் பிறப்பு வரை எட்டு சருக்கங்கள் இதில் அமைந்துள்ளன. குமார சம்பவத்தில் முருகப்பெருமான் தாரகாசுரனை வதம் செய்ததாக கூறப்பட்டுள்ளது. தமிழ் புராணங்களில், பத்மாசுரனை ஆட்கொண்ட தகவல் உள்ளது.

குன்று இருக்கும் இடம் எல்லாம் குமரன் இருக்குமிடம் என்பர். மலையும் மலைசார்ந்த இடம் குறிஞ்சி. குறிஞ்சிக்கடவுளாகக் குமரன் முருகனே மலைகளின் மீது ஆட்சி செய்கிறார். தெய்வங்களின் உயர்ந்தவராகத் திகழ்வதால் அவரைத் தெய்வசிகாமணி என்று போற்றுவர். கந்தனைக் கரம் குவித்து வணங்குவோருக்கு கலியின் கொடுமையும், காலபயமும் கிடையாது என்று வடமொழி ஸ்காந்தம் குறிப்பிடுகிறது. நாம் அறியாமல் செய்த பிழைகளை முருகன் பொறுத்துக் கொள்வார். பிள்ளை போல பிரியம் காட்டுவார், என்று கந்தசஷ்டிகவசம் கூறுகிறது. என்னைப் பெற்றவன் நீயே! என் பிழைகளைப் பொறுத்துக் கொள்வது உன் கடமை! என்று, கந்தசஷ்டி கவசம் எழுதிய தேவராய சுவாமிகள் முருகனிடம் வேண்டுகிறார். நாமும் கார்த்திகை நன்னாளில் முருகப்பெருமானை வணங்கி நற்பலன்கள் பெறுவோம்.

"பரமசிவனின் நேத்ராக்னியில் இருந்து வந்தவரே குமாரசுவாமி. அவர் ஞானாக்னியானாலும் இதயத்தில் குளிர்ந்தவர். ஏனென்றால் நீருடன் மிகவும் சம்பந்தம் உள்ளவர். சரவணம் என்ற பொய்கையில் தான், சிவதேஜஸ் முருகனாக ரூபம் கொண்டது. அம்பாளே சரவணப் பொய்கை. தந்தை நெருப்பாக இருக்க, அம்மா நீராக இருந்தாள். நீருருவான கங்கையும் அவருக்கு இன்னொரு தாய்க்கு இணையானவள். அதனால் முருகனை காங்கேயன் என்று அழைத்து வழிபடுகிறோம். சஷ்டிப் பெண்களுக்கு அவர் பாலன் ஆனார். கார்த்திகைப் பெண்டிருக்குப் பிள்ளையாகக் கார்த்திகேயர் ஆனார். நட்சத்திரத்தில் ஆறாக இருப்பது கார்த்திகை. திதியில் ஆறாவது சஷ்டி. இவருக்கு ஆறுமுகம். ஆறு அட்சரம் கொண்ட சடாக்ஷரி (சரவணபவ) இவருடைய மந்திரம். மனிதர்களிடமுள்ள காமம் (பெண்ணாசை), குரோதம் (கோபம்), லோபம் ( பற்று), மோகம் (பிற ஆசை), மதம் (ஆணவம்), மாச்சர்யம் (வெறுப்பு) என்ற ஆறு பகைவர்களைக் கொன்று ஞானம் அருளும் ஆறுபடை வீரர் அவரே. ஜொலிக்கிற ஞானாக்னியான வேலாயுதத்தை சக்தி சக்தி என்றே சொல்லுகிறோம். வேதமே முக்கியமாக அக்கினி வழிபாட்டு மதம் தான். அக்கினி என்ற வார்த்தையோடு தான் வேதம் ஆரம்பமாகிறது. உபாசனையில் (இறைவனை வழிபடும் முறை) ஔபாசனம் என்னும் அக்கினி முறையே முக்கியமானது. இதற்கு சுப்பிரமணியரே அதிதேவதையாக இருக்கிறார்."

-காஞ்சிப் பெரியவர்

### கார்த்திகை விளக்கின் தத்துவம்

எண்ணெய் கரைகிறது, திரி கரிகிறது. ஆம்...தீபம் என்பது தன்னை கரைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஒளி வழங்குகிறது. பிறர்நலம் பேணுவதற்காக தன் உயிரையே தியாகம் செய்ய வேண்டும் என்பது கார்த்திகை விளக்கின் தத்துவம். அது மட்டுமல்ல! தீபத்தின் ஒளி மனிதர்களுக்கு மட்டுமல்ல, பிற உயிரினங்களின் மீதும், உயிரற்ற பொருட்கள் மீதும் படுகிறது. புழு, கொசு, நிலம், நீர்வாழ் பிராணிகள் மீதெல்லாம் படுகிறது. தீபஒளி எப்படி எல்லார் மீதும் பரவுகிறதோ, அதுபோல் மனிதனின் மனதில் எழும் அன்பு ஒளி எல்லார் மீதும் பட வேண்டும் என்பதையே கார்த்திகை தீபம் நமக்கு உணர்த்துகிறது.

### திருக்கார்த்திகை

கார்த்திகை விளக்கு திருவிழா தமிழர்களின் சிறப்பான வழிபாடுகளில் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டாடப்படுகிறது. கார்த்திகை தீப வழிபாட்டிற்கு அகல் விளக்குகளே அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த மாதம் முழுவதும் மாலை நேரத்தில் வீடுகளின் வாசலில் விளக்கேற்றி வழிபடுகின்றனர். கார்த்திகை தீபத்தின் முதல்நாள் ஏற்றப்படும் தீபம் பரணி தீபமாகும். இது முருகனுக்குரிய வழிபாடு. மறுநாள் திருக்கார்த்திகை தீபம் சிவனுக்காக ஏற்றப்படுகிறது. கார்த்திகை மாத வளர்பிறை கிருத்திகை நட்சத்திரத்தில் இந்த விழா கொண்டாடப்படுகிறது. அன்று விரதம் இருந்து மாவிளக்கு ஏற்றி வழிபடுவதே முறையான வழிபாடாகும். மாலை மாவிளக்கு ஏற்றி அந்த விளக்கிற்கு பூஜை செய்து அதன்பிறகே உணவு உண்ண வேண்டும். கார்த்திகை அன்று பகலில் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். கார்த்திகை அன்று மாலையில் வீட்டிலிருக்கும் எல்லா திருவிளக்குகளையும் ஏற்ற வேண்டும். வாசலில் சிறு விளக்குகளை ஏற்றிவைக்க வேண்டும். இந்த தீபச்சுடர்கள் எங்கும் பிரகாசிப்பதைக் காணும்போது மகிழ்ச்சி பெருகுவதுடன் பக்தியும் சுரக்கும்.

### திருக்கார்த்திகையில் தீபமேற்றுவது ஏன்?

கிருதயுகத்தில் ஒரு கார்த்திகை மாத பௌர்ணமி நாளில், முக்கண்ணன், தன் முறுவலாலேயே முப்புரங்களையும் எரித்து திரிபுரதகனம் நடத்தினார். திரிபுரதகனத்தின் போது, சிவனின் சிரிப்பொலி உலகெங்கும் பரவி, ஜோதியாகப் பிரகாசித்து உலகையே ஒளிவெள்ளத்தில் ஆழ்த்தியது. தீய சக்திகளுக்கு அக்னி பிழம்பாகவும், உலகிற்கு வெளிச்சமாகவும் விளங்கிய சிவனின் அந்த பிரகாசத்தினை வழிபடும் விதத்தில் தான் கார்த்திகை தீப உற்சவம் கொண்டாடப்படுகின்றது என்கிறது.

### கார்த்திகை திருவிளக்கு பூஜை

கார்த்திகையன்று வீட்டிலோ அல்லது கோயில்களிலோ திருவிளக்கு பூஜை நடத்தினால், லட்சுமி கடாட்சம் நிலைத்திருக்கும். எல்லா இடங்களிலும் இருக்கும் இறைவனை நம் இல்லத்திலோ, ஊரிலோ எழுந்தருளச் செய்வதே விளக்கு வழிபாடு. ஆதியில் வேதரிஷிகள் ஹோமம் செய்து இறைவனை வழிபட்டனர். அப்போது, யாககுண்டங்களில் அக்னி எரியும். இதுவே எளிமையாக்கப்பட்டு தீப வழிபாடாக மாறியது. விளக்கு வழிபாடு சுற்றுப்புற இருளை அகற்றுவதோடு, மனதின் இருளையும் அகற்றுகிறது. பூஜையறையில் வெள்ளிக்கிழமைகளில் வாசலில் மாக்கோலம் இட்டு, அதன் மத்தியில் விளக்கை ஏற்றிவைத்து, அதனை வீட்டு பூஜையறைக்குள் கொண்டு வந்து வைத்தால் விளக்குடன் மகாலட்சுமியும் இல்லத்திற்குள் வருவாள் என்பது ஐதீகம்.

### ஆறுதீபம் ஏற்றுங்கள்!

திருக்கார்த்திகை திருநாளில் திருவண்ணாமலையில் ஏற்றப்படும் மலை தீபம் சிவாம்சமாகும். யாராலும் அணுக முடியாத ஞான மலை அண்ணாமலை. தேவர்களாலும் அறிந்து கொள்ளமுடியாத பரம்பொருள் இறைவன். ஆனால், நம் மீது கொண்ட கருணையினால் தன்னை எளிமைப்படுத்திக் கொண்டு அருள்புரியும் நாளே திருக்கார்த்திகை. சூரபத்மனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டபோது, ஈசனே முருகனாக அவதரித்து அருள்புரிந்தார். அவரது நெற்றிக்கண்ணிலிருந்து தீப்பொறிகள் கிளம்பின. ஆறுதீப்பொறிகளும் சரவணப்பொய்கையில் சிறுகுழந்தைகளாக உருவெடுத்தன. அதுபோல,பெருஞ்சுடரான அண்ணாமலை தீபமே நம் வீட்டு சிறுஅகல்களில் குட்டிக்குழந்தையாக முருகனாக ஒளிவீசுகிறது. வீடுகளில், கார்த்திகை தீபம் ஏற்றும்போது குறைந்த பட்சம் ஆறுதீபங்களை வாசலில் வைக்க வேண்டும். அண்ணாமலை தீபம் வேறு, நம் வீட்டு அகல்தீபம் வேறு என நினைக்க வேண்டாம். இரண்டும் ஒன்றே.

### முற்பிறவி பாவம் நீக்கும் தீபம்

தீபத்தைப் பெருமைப்படுத்தும் விதத்தில் தீபமங்களஜோதீ நமோநம என்று திருப்புகழில் அருணகிரியார் பாடுகிறார். முருகப்பெருமானை அனர் தீபமாக வர்ணிக்கிறார். வேதாரண்யம் கோயிலில் எலி ஒன்று, விளக்கில் கிடந்த நெய்யைக் குடிப்பதற்காக வந்தபோது, தவறுதலாக அதன் மூக்கு பட்டு அணைய இருந்த தீபம் தூண்டப்பெற்றது. அதன் பயனாக அந்த எலி மறுபிறவியில் மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்தது. கோயிலில் ஏற்றப்படும் தீபத்திற்கு செல்வவிருத்திதரும் அளவுக்கு மகத்துவம் உண்டு. நாம் முற்பிறவியில் அறியாமல் செய்த பாவங்கள் கூட கோயில் தீபம் ஏற்றுவதாலும், தீபத்தை தரிசிப்பதாலும் விலகிவிடும். அதனால், திருக்கார்த்திகையன்று கோயில்களில் தீபஸ்தம்பம், அணையாதீபம், லட்சதீபம், கோடி தீபம் என்று பலவிதங்களிலும் விளக்கேற்றிவைப்பர். கோயிலின் முன்னால் சொக்கப்பனை கொளுத்துவர்.

### எல்லாருக்கும் பாவ விமோசனம்

கார்த்திகை தீபத்தின் நோக்கம் பாவம் போக்குதல் என்பது தான். அகல் விளக்கில் தீபம் ஏற்றும் போது, அதன் பிரகாசம் குறிப்பிட்ட தூரத்துக்கு தான் தெரியும். அதையே மலை உச்சியிலோ, தரையில் சொக்கப்பனையாகவோ ஏற்றினால் அதன் பிரகாசம் நீண்ட தூரம் தெரியும். மலையில் ஏற்றும் தீபம், ஏற்றும் ஊரில் மட்டுமின்றி பக்கத்திலுள்ள பல ஊர்களுக்கும் கூட தெரியும். அத்தனை ஊர்களிலும் இருக்கும் சிறு சிறு ஜந்துக்களின் உடலில் கூட அதன் பிரகாசம் படும். மனிதர் மட்டுமின்றி, சிறு ஜீவன்களும் செய்த பாவம் தீரும். இந்த நல்ல நோக்கத்தில் தான் அண்ணாமலை, பழநி, திருப்பரங்குன்றம் இன்னும் பல ஸ்தலங்களில் மலை தீபமாகவும், மற்ற தலங்களில் சொக்கப்பனையும் கொளுத்துகின்றனர்.

### கார்த்திகை பொரி

திருக்கார்த்திகைத் திருநாளில் இறைவனுக்கு கார்த்திகைப் பொரி சமர்ப்பித்து வழிபடுவது விசேஷம். வெண்ணீறு பூசிய சிவபெருமானைக் குறிக்கும் வெண்மையான நெற்பொரி, வள்ளல் தன்மை கொண்ட மாவலியைக் குறிக்கும் தேங்காய்த் துருவல், தூய்மையின் அடையாளமாக வெல்லம் ஆகிய மூன்றும் சேர்ந்ததே கார்த்திகைப்பொரி. இதை தூய பக்தியுடன் இறைவனுக்குச் சமர்ப்பித்து வழிபட, நம் வாழ்வு ஒளிமயமாகும்!


*(நன்றி: தினமலர்)*



# ஸ்ரீரங்கம்

## காலவெளியில் ஒரு பயணம்


- ஜடாயு -





"இந்தக் கோபுரத்திலிருந்துதான் வெள்ளையம்மாள் கீழே குதித்தாள்," என்றார் பெரியவர். கழுத்து வலிக்க மேலே நிமிர்ந்து அந்தக் கோபுரத்தைப் பார்த்தோம். கிழக்கு வெள்ளை கோபுரம் என்று பெயர் எழுதியிருந்தது. 12-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீரங்க நகர் மீது படையெடுத்து அதைச் சூறையாடினான் உலூக்கான் என்ற இஸ்லாமிய தளபதி. அப்போது கோயிலையும் நகரத்தையும் காக்க வேண்டி இஸ்லாமிய தளபதியைத் தள்ளிவிட்டு தானும் கோபுரத்திலிருந்து விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள் அந்தக் குடியானவர் சமூகப் பெண். அவள்தான் வெள்ளையம்மாள். வர்ணத் தீற்றல்களால் நிரம்பி பல வண்ணங்களில் தோற்றமளிக்கும் பெரும்பாலான கோபுரங்களுக்கு மாறாக அந்தக் கோபுரம் தூய வெண்ணிறத்தில் துலங்கியது. அந்த மாதரசியின் மாசற்ற தியாகம் போல. ஏழு திருச்சுற்றுகள். ஒவ்வொன்றிலும் கோபுர வாசல்கள். வீதிகள். பெரு மதிள்கள் (எல்லா மதில்களையும் சேர்த்தால் அவற்றின் மொத்த நீளம் 9 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும்!). பெரிய பெருமாள் சன்னிதி போக இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சன்னிதிகள், தனிக்கோயில்கள், மண்டபங்கள். நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள். இவை அனைத்தையும் தன்னுள் அடக்கியிருக்கும் பிரம்மாண்டமான பேராலயம் இது. பூலோக வைகுண்டம். மாபெரும் பண்பாட்டு, கலை, கலாசார, வரலாற்றுப் பெட்டகம். தென்னிந்திய வரலாற்றின் ஒவ்வொரு சகாப்தத்தின் சுவடுகளும் அடுக்கடுக்காக இக்கோயிலில் பதிந்துள்ளன. சோழர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை பல காலகட்டங்களைச் சேர்ந்த சிற்ப மரபுகளும், அவற்றின் பல வகைமாதிரிகளும் இந்த ஒரே கோயிலில் காணக்கிடைப்பது கலை, வரலாற்று ஆர்வலர்களுக்கு ஒரு பெருவரம்.



குழலூதும் பிள்ளை திருக்கோயில் என்று அழகுத் தமிழில் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஸ்ரீ வேணுகோபால சுவாமி சன்னிதி ஹொய்சளர் சிற்பக் கலை மரபுப்படி அமைக்கப்பட்டது. கர்நாடகத்தின் பேளூர், ஹளேபீடு ஆகிய ஹொய்சளர் கோயில்கள் அந்தப் பகுதிகளில் கிடைக்கும் மென்மையான மாக்கல் கொண்டு கட்டப்பட்டதால் இன்றும் வழவழப்புடன்







திகழ்கின்றன. அதே காலகட்டத்தில்தான் இக்கோயிலும் உள்ளூரில் கிடைக்கும் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கல்லின் முரட்டுத் தன்மை காரணமாக சுற்றுச் சுவரில் உள்ள கோஷ்ட சிற்பங்களின் மேற்பகுதி பூச்சு உதிர்ந்து காட்சியளிக்கிறது. ஆயினும் சிற்பங்களில் அழகு கொஞ்சுகிறது.

குதிரை வீரர்களும் யாளி வீரர்களும் பல சிற்ப வடிவங்களும் அணிசெய்யும் முகப்புத் தூண்களை உள்ளடக்கிய, விஜயநகர காலத்திய சேஷராயர் மண்டபம் தன்னளவில் ஒரு தனி அழகு கொண்டது. குதிரைகளின் வால்மயிர் திரிதிரியாக செதுக்கப்பட்டுள்ள நுணுக்கமும் வீரர்களின் கண்களில் தெரியும் கடுமையும் பெண்களின் நளினமும் உயிர்த்துடிப்புள்ளவை. பல சுவாரஸ்யமான சிற்பக் காட்சிகள் இத்தூண்களின் அடித்தளத்திலும் மற்ற பக்கங்களிலும் உள்ளன. உட்புறமுள்ள தூண்களில் உள்ள தசாவதாரக் கோலங்கள் வெகு அழகு. விஜயநகர, நாயக்க மன்னர்கள், கனவான்களின் சிலைகள் பெயர்க் குறிப்பு கூட இல்லாமல் தூண்களுடன் ஒட்டி நின்றுகொண்டிருக்கின்றன. இக்கோயிலில் உள்ள ஏராளமான வரலாற்று மனிதர் சிலைகளில் சில மன்னர்கள், சில ஜீயர்கள்- ஆசாரியர்கள் உருவங்களையே ஆதார பூர்வமாக அடையாளம் காண முடிகிறது என்று "கோயிலொழுகு நூல்" குறிப்பிடுகிறது. மற்றவர்கள் அந்தந்த காலகட்டங்களில் பிரபலமாக இருந்தபோது மக்கள் அவர்களை எளிதில் அடையாளம் கண்டுகொண்டிருக்கக் கூடும். சேஷராயர் மண்டபத் தூ ண்களில் இருக்கும் குதிரைகளுக்குத் துணையாக மண்டப ஓரங்களில் கருங்கல் தரைமீது இக்கால வீரமைந்தர்கள் தங்கள் இரும்புக் குதிரைகளை (இருசக்கர வாகனங்கள்) நிறுத்தி வைத்திருந்தார்.

தான்யலக்ஷ்மி சன்னிதிக்கு அருகில் கோயிலின் பாரம்பரிய ஸ்ரீபண்டாரம் (பொருள்கள் சேமித்து வைக்கும் அறை) இன்னும் உபயோகத்தில் இருக்கிறது. அதற்கருகில் இடிபாடுகளுடன் காணப்படும் நான்கு உருளை வடிவ செங்கல் கட்டுமானங்கள் தென்படுகின்றன. இவை 'திருக்கொட்டாரம்' எனப்படும் மிகப் பெரிய தானியக் களஞ்சியங்கள். விஜயநகர காலத்தின் கோயில் கட்டடக் கலையில் இத்தகைய களஞ்சியங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. தமிழகத் திருக்கோயில்களில் உள்ளவற்றிலேயே மிகப் பெரிய களஞ்சியங்கள் திருவரங்கக் கோயிலில்தான் உள்ளன. மூன்று அடுக்குகளாக உள்ள இந்தக் களஞ்சியங்களில் ஒவ்வொரு நிலையிலும், தானியங்களை உள்ளே கொட்ட மிகப் பெரிய "வாசல்கள்" உள்ளன. மேற்பகுதி இப்போது தகர்ந்து விட்டது. ஆனால் உபயோகத்தில் இருந்த காலத்தில் சிறிதுகூட மழைநீர் உட்புகாதபடி கூரை அமைக்கப்பட்டிருந்ததாம். மேலும், எலிகளும் மற்ற பூச்சிகளும் உட்புகுந்து தானியங்களைச் சேதப்படுத்தாதிருக்கவும் வழிவகை செய்யப் பட்டிருந்ததாம். இப்போது முற்றிலும் புதர் மண்டிக் கிடக்கிறது. அருகில் போகவே பயமாக இருக்கிறது. இப்பகுதியைச் சீரமைத்து இந்தக் களஞ்சியங்களை நன்கு அருகில் சென்று பார்க்கும்படியாகச் செய்யவேண்டும். நம் முன்னோரின் கட்டடக் கலைக்கும், உணவுப் பொருள் நிர்வாகத் திறனுக்கும் ஒரு சிறந்த சான்றாக இதைக் காட்சிப்படுத்தலாம்.

இதே போல கோயிலுக்குள் பால் கிணறு, நெய்க் கிணறு (பக்தர்கள் தாங்கள் கொண்டு வரும் பாலையும் நெய்யையும் இதில் ஊற்றுவார்களாம்), தைலம் தயாரிக்கும் அறை ஆகியவையும் பிரம்மாண்டமாக இருந்தன. ஸ்ரீராமானுஜர் காலத்தில் இருந்த அதே திருமடப்பள்ளி அதே இடத்தில் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது! அரங்கனின் நைவேத்தியத்திற்குப் படைப்பதற்காக செடி அஞ்சு, கொடி அஞ்சு, கறி அஞ்சு என்று ஐந்தைந்து வகைக் காய்கறிகளை அன்றன்றே தோட்டத்திலிருந்து பறித்து சமைப்பார்கள்



என்றும் அதற்காகவே மன்னர் ஒருவர் தோட்டத்தை தானமாக அளித்த விவரமும் கோயிலொழுகில் படித்தது நினைவில் வந்தது. பெருமாளின் பூஜைக்கான மலர்கள் பல நூற்றாண்டு பாரம்பரியம் மிக்க மதுரகவி நந்தவனத்திலிருந்து வருகின்றன.

*வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை*
*கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை*
*அண்டர்கோன் அமரும் சோலை அணிதிருவரங்கம்..*

என்றெல்லாம் போற்றிப் புகழப் பெற்ற இடம் அதற்கான எந்தச் சுவடும் இல்லாமல் காங்கிரீட் காடாக மாறிவிட்டது.

*சேவலொடு பெடையன்னம் செங்கமல மலரேறி ஊசலாடி*
*பூவணை மேல் துதைந்தெழு செம்பொடியாடி விளையாடும்*
*புனல் அரங்கமே*

என்று இந்த நகரத்தைத்தான் ஆழ்வார் பாடினாரா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அடையவளஞ்சான் என்று கடைசி மதிள் சுற்றுக்குப் பெயர். ஆனால் இப்போது சுற்றி எங்கு பார்த்தாலும் அடுக்கு மாடி வீடுகள் அடைத்துக் கொண்டு நிற்க, அதில்தான் நாம் வளைய வரவேண்டியிருக்கிறது!

*அடுத்த சுடரில் தொடரும்....*



# தமிழறிஞர் விபுலானந்தர்

ச. சுதர்சன்
மாணவன், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### அடிகளாரின் சமூகப் பணி

வித்தகர்விபுலாநந்த அடிகளாரின் பன்முகப்பட்ட பணிகளில் சமூகத்துறவியாக அவர் வாழ்ந்து செய்த தொண்டுகள் அளப்பரியவை. அவர் மக்களைத் துறந்து, மக்களை விட்டு விலகித் துறவறம் பூணவில்லை. மக்களிடையே துறவியாக வாழ்ந்து சமூகத்தின் துயரங்களிலும், மகிழ்ச்சிகளிலும் பங்கேற்றார். யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் பழக்கம், துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலானந்த அடிகளாக்கியது. 1922 இல் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்து, காவி பூண்டு ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் தலைவர் சுவாமி சிவானந்தரிடம் பிரம்மாச்சாரி அபிஷேகம் பெற்று "பிரபோத சைதன்யர்" என்னும் தீட்சா நாமமும் பெற்றார். அங்கு "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்" என்ற தமிழ்ச்சஞ்சிகைக்கும் "வேதாந்த கேசரி" என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார். அத்தோடு "செந்தமிழ்" என்னும் பத்திரிகைக்கும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

ஆச்சிரம வாழ்க்கை முடிந்து சுவாமி விபுலாநந்தர் என்னும் குருப்பட்டம் பெற்றார். குருவாக இருந்து அபிஷேகம் செய்தவர் சிறீ ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர்ச்சீடர்களில் ஒருவரான சுவாமி சிவானந்தராவார். கல்லடி உப்போடையில் தாம் அமைத்த ஆங்கிலப் பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது இவரது ஞாபகார்த்தமாகவே.

அதன் பின் ஈழம் திரும்பி, அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி, கலாசாரம் முதலியவற்றில் தமது தனித்துவ இயல்புகளை இழந்து கொண்டிருந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பும் முயற்சியிலீடுபட்டார். கல்வி நிறுவனங்கள் பலவற்றை நிறுவினார். மட்டக்களப்பு உப்போடையில் சிவானந்த வித்தியாலயம் என்ற ஆண்கள் பாடசாலை, திருமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் ஆங்கிலக்கல்லூரி, காரைதீவு சாரதா வித்தியாலயம், என்பன அவர் நிறுவிய கல்வி நிறுவனங்களாகும். தலைநகர் கொழும்பில் தமிழ்ப்பள்ளிக்கூடம் இல்லாத குறையைப் போக்க விவேகானந்த வித்தியாலயத்தைத் தொடங்கினார். ஒரு சமூகத்துறவி நிறுவிய கல்விச் சாலைகள் அவை. அத்துடன் கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, முதலிய இடங்களில் ஸ்ரீராமகிருஷ்ண ஆச்சிரமங்களை நிறுவினார். விபுலாநந்தர் ஆன்மீகவாத சன்மார்க்க நெறியாளராக வாழ்ந்தார்.

"நாம் மனிதர் என்னும் பெயருக்கு முழுதும் தகுதி பெற வேண்டுமானால், இன்று முதலே சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டும்" என்றார். "பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனே தான் நல்ல நிலையை அடைய விரும்புவதே உண்மையான சன்மார்க்கமாகும்" என்றுமுரைத்தார்.

ஈழம் ஈன்றெடுத்த அறிஞர்களில் விபுலாநந்தர் முற்றிலும் வேறுபட்டவர். சாதி, மத, மொழி, இன ஏற்றத்தாழ்வுகளுக்கும், ஏழை, பணக்காரன் என்ற வர்க்க வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர். யாழ்ப்பாணத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியராகவும், பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் 1917-1922 காலகட்டத்தில் கடமையாற்றியுள்ளார். கடமையொழிந்த வேளைகளில் வறுமையிலும், சாதியப் பாதிப்பாலும் நலிவுற்ற மக்களிடையே உலாவினார். அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் கூறினார். அதனால் "பெரியகோயில் வாத்தியார்" எனச் சாதாரண மக்களால் விரும்பி அழைக்கப்பட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய போது அவரது இந்த மனித நேய யாத்திரை இந்திய சேரிப்புறங்களில் பரிவோடு நிகழ்ந்தது. எனவே தான் சமூகத்திலிருந்து பிரிந்து தனித்து விபுலாநந்தர் நிற்கவில்லை. அவரது சிந்தனைகள் , நடத்தைகள் இரண்டும் அவரை ஏனைய அறிஞர்களினின்றும் வேறுபடுத்துவனவாகவுள்ளன.

தாய்மொழிக்கல்விக்கும் அறிவியற்கல்விக்கும் வித்திட்டவர்களில் விபுலாநந்தர் குறிப்பிடத்தக்கவர். ஆங்கில மொழிக்கல்வி ஆதிக்கம் பெற்றிருந்த ஒருகாலவேளையில் தமிழ்ப் பேராசிரியர்க விளங்கி, அறிவியற்கல்வி தமிழிலும் போதிக்கவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தார், அறிவியற் கலைச்சொல்லாக்கத் துறையில் ஈடுபாடு கொண்டு

உழைத்துள்ளார். யாழ்ப்பாணம் வாலிப காங்கிரசுடனும் தாய்மொழிக் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் விபுலாநந்தர்.

மெல்பர்ன் தமிழ்ச்சங்கம் விபுலாநந்த அடிகளாரின் 60 வது நினைவை முன் கூட்டியே நினைவு கூர்ந்து ஜுலை 21, 2006 ஆம் ஆண்டில் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

**அடிகளாரின் இலக்கியப் பணி**

"சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்" என்று மூன்று தொகுப்பு நூல்கள் 1997 ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்துள்ளன. இவற்றில் விபுலாநந்தரின் நூற்றி இருபத்தேழு (127) தமிழ் மொழி, ஆங்கில மொழிக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. அவரது ஆக்கங்கள் முழுவதும் தொகுக்கப்பட்டு விட்டன என்று சொல்ல முடியாவிட்டாலும், அனேகமானவை தொகுக்கப்பட்டு விட்டன என்று தொகுப்பசிரியர் உரையில் சொல்கிறார்கள் இப்பணியை மேற்கொண்ட வ. சிவசுப்பிரமணியம் மற்றும் சா.இ.கமலநாதன் ஆகியோர்.

"சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்" - தொகுதி-3 இல் ஆங்கில வாணி என்ற ஒரு கட்டுரை இருக்கின்றது. இது பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் மணிமலருக்காக 1941 ஆம் ஆண்டு எழுதப்பட்டு அந்த மலரில் வெளிவந்துள்ளது. "ஷேக்ஸ்பியரின் கவிதை வனப்பினை எடுத்துக் காட்டுவதற்காக அவரது நாடகங்களில் இருந்து சில காட்சிகளை மட்டும் மொழிபெயர்த்து இக்கட்டுரையிற் சேர்த்திருக்கிறார். ஷேக்ஸ்பியரின் கவி வனப்பினை மதங்க சூளாமணியில் சற்று விரிவாகக் கூறியிருக்கிறாம்" என்று விபுலாநந்தர் இக்கட்டுரையின் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். ஆங்கில வாணி என்பது ஆங்கில இலக்கியம் என்ற தலைப்பாக நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். மூன்று பகுதிகளாக இதில் இடம்பெறுகிறது. *(செ.க.சித்தன்)*

அடிகளார் ஆக்கிய மதங்க சூளாமணி, நாடக இலக்கண அமைதி கூறும் ஒரு நூலாகும். 1924 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் "நாடகத் தமிழ்" என்ற உரையினைச் சங்கச் செயலாளராக இருந்த டி.சி.சீனிவாஸ ஐயங்கரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த "மதங்க சூளாமணி" என்ற நூலை எழுதினார்.

1937 ஆம் ஆண்டு இமய மலையைக் காணச் சென்று மலைச்சாரலில் உள்ள மாயாவதி ஆச்சிரமத்தில் தங்கினார். அங்கு சிலகாலம் "பிரபுத்த பாரதா" என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

கனடாவில் வாழும் ஈழத்துப் பூராடனார் (க.தா. செல்வராசகோபால்) என்ற கவிஞர் 1983 ஆம் ஆண்டில் விபுலாந்த அடிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் "விபுலாநந்தர் பிள்ளைத் தமிழ்" என்ற பிரபந்த நூலை வெளியிட்டிருக்கின்றார். அதில் நூலாசிரியர் ஈழத்துப் பூராடனார் விபுலானந்த அடிகளாரை நேரிற் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லையாயினும், அவரது நேரடி வாரிசான புலவர்மணி. ஏ.பெரியதம்பிப் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றதும், அடிகளாரின் சகோதரியின் புதல்வன் திரு பூ.சுந்தரம்பிள்ளையுடன் உடன்சாலை மாணாக்கனாக நெருங்கிய நட்புக்கொண்டிருந்ததும் இந்த நூல் உருவாக்கத்திற்கு உசாத்துணையாக அமைந்ததாகக் கூறுகின்றார்.

அடிகளாரின் மதங்க சூளாமணியை ஆய்வு செய்து ஆய்வு செய்தும், மறு பதிப்பு செய்தும் அதன் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு 800 வெண்பாக்கள் அடங்கிய கூத்தர் வெண்பா என்னும் நாடகத்தமிழ் இலக்கண நூல், மதங்க சூளாமணியின் இரண்டாவது பாகமான வடமொழி நாடகவியலின் தமிழாக்கத்தின் உரை நடையை விருத்தங்களாகச் செய்து கூத்தர் விருத்தம் ஆகிய நூல்களையும் செய்துமுடித்திருக்கின்றார் ஈழத்துப் பூராடனார்.

விபுலாநந்தர் பிள்ளைத் தமிழில் ஒவ்வொரு செய்யுட்களிலும்:

1. அடிகளாரின் வரலாறு
2. அடிகளாரின் தாயக வளம்
3. அவரின் போதனைகள்

ஆகியவை இடம்பெற்றுள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தமிழ் மொழி இலக்கிய பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கு அருட்திரு விபுலாநந்த அடிகளாரின் "கங்கையில் விடுத்த ஓலை" ஒரு பாடப் பகுதியாக இருந்தது. அந்தக் கவிதை நயத்தை மாணவர்களுக்கு உதவும் வகையில் பொழிப்பும், விளக்கமும் கொண்ட உபநூலை இலக்கிய வித்தகர் த.துரைசிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்) எழுதி சிறீ சுப்ரமணிய புத்தகசாலை வெளியீடாக அக்டோபர் 1991 ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்நூலின் முகவுரையில் நூலாசிரியர் திரு த.துரைசிங்கம் அவர்கள் இவ்வாறு கூறிச் செல்கின்றார்.

அடிகளாரின் "கங்கையில் விடுத்த ஓலை" தனிச்சிறப்பு வாய்ந்தது. இமய மலைச் சாரலில் தவப்பள்ளியில் அடிகளார் வாழ்ந்த காலத்தில் அவரது இனிய நண்பர் கந்தசாமி மறைந்த செய்தியைக் கேள்வியுற்றார். அச்செய்தி அவரின் மனதைப் பெரிதும் வருத்திற்று. கந்தசாமிப் புலவனுடன் வேட்களத்தில் ஒன்றாகக் கல்வி பயின்ற காலை தாம் பெற்ற அனுபவங்களை எண்ணிப் பார்க்கின்றார். அவரது பழுத்த தமிழ்ப்புலமையும், தாய்மையான வாழ்வும், சிறந்த பண்புகளும் அடிகளாரின் உள்ளத்தில் எதிரொலிக்கின்றன. துயரம் மிகுகின்றது. உள்ளத்துணர்வு கட்டுமீறிப் பாடய்கின்றது கவிதை வடிவில். அதன் பேறாய்க் கங்கையில் விடுத்த ஓலை பிறக்கின்றது.

நெருங்கிய ஒருவர் இறந்தகாலை அவர்க்கிரங்கிப் பாடிய கையறு நிலைப் பாடல்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். அதற்கமைய அடிகளாரின் "கங்கயில் விடுத்த ஓலை" புதுவகையில், புதுமெருகு பெற்றுத் திகழ்கின்றது. இது முற்று முழுதாகக் கையறு நிலைப் பாடலாக இல்லாவிடினும் அதன் சாயலில் எழுந்த தூதிலக்கியமாக அமைவதைக் காணமுடிகின்றது. முதல் இரு பாடல்களிலேயே அடிகளார் தமது நண்பனின் குண நலன்களை, பழுத்த தமிழ்ப் புலமையினை நினைவு கூருகின்றார்.

"எழுத்தறிந்து கலையயின்றோ நின்றமிழினிய நூல்
எத்தனையோ வந்தனையு மெண்ணியாழங் கண்டோன்
பழுத்த தமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் பெரும் புலவன் கனிந்த
குணநலத்தான்""சொல்வகையும் சொற்றொகையுஞ்
சொல்னடையுமுணர்ந்தோன்
சொல்லவல்லான் சொற்சோராத் தூய நெறியாளன்

பல்வகைய நூற்கடலுட் படிந்துண்மை மணிகள்

பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்"

அன்பினால் பிணைக்கப்பட்ட அவரது உள்ளம் நண்பனை நினைந்து நினைந்து உருகுகின்றது. இத்துயரினை ஆற்ற வழியின்றித் தவிக்கின்றார். இமய மலையிலிருந்து வங்கக் கடலை நோக்கிச் செல்லும் புனிதமான கங்கை நதியின் சாரலையடைந்து அதன் அரவணைப்பில் சோகத்தாற் கொதிக்கும் தம்முளத்தை ஆற்றிக்கொள்ள முற்படுகின்றார்.

"பொங்கியெழுந் துயர்க்கனலைப் போக்குதற்கும் மாயப்

பொய்யுலகி னுண்மையினைப் புலங்கொளற்குங் கருதிக்

கங்கையெனுந் தெய்வநதிக் கரைப்புறத்தை யடைந்து

கல்லென்று சொல்லிவிழும் நீர்த்தரங்கங் கண்டேன்"

பொங்கிவரும் கங்கை நதியின் நீரலைகள் போன்று அடிகளாரின் உள்ளத்திலிருந்து துயர அலைகள் பொங்கியெழுகின்றன. அவை கட்டுமீறிப் பாய்கின்றன. "உள்ளத்திருந்தெழும் உணர்ச்சிப் பெருக்கே பாட்டுக்கு நிலைக்களன்" என்னும் ஆங்கிலப் புலவர் வோட்ஸ்வோத்தின் கூற்றுக்கமைய அடிகளாரின் உள்ளத்துணர்வினைப் பாடல்கள் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

வாழ்வில் இன்பமும் துன்பமும் வருவது சகசம். இந்த உண்மையை நங்கு அறியாதோரே இன்பம் வந்தபோது துள்ளிக் குதிப்பர். துன்பம் நேர்ந்தபோது சோர்ந்து அழுவர். இன்ப துன்பங்களாகிய சுழல் காற்றில் மானிடர் அலைகின்றனர். இந்த உண்மையை உணராதோர்க்கு இன்பமும் துன்பமும் மயக்கத்தையே செய்யும். இதனை அடிகளார் பின்வரும் பாடலில் அழகுற விளக்கியுள்ளார்.

"இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்

எமக்கு நிக ராரென்பர் இருகணத்தி னுளத்தில்

துன்பமுற மண்ணில்விழுந் திருகண்ணீர் சொரியச்

சோர்ந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றி லலைவார்"

நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சியுடன் மனித வாழ்க்கையைப் பொருத்திப் பார்க்கின்ற அடிகளார் இன்ப துன்பச் சூழலில் அகப்பட்டுத் தவிக்கும் மனிதன் மரணமெனும் கரையில் ஏற்றுண்டு கிடப்பதையும், பின்னர் மறுபிறவியாகிய திரை கவர மீண்டும் பிறந்து இன்பதுன்பங்களில் மூழ்கித் தவிப்பதையும் நினைவூட்டுகின்றார் இப்படி:

"மரணமெனுந் தடங்கரையி லெற்றுண்டு கிடப்பார்

மறுபிறவித் திரைகவர வந்தியையுங் கருவி

கரணமுறு முடலெடுத்து மண்ணுலகி னுழல்வார்

காதலிப்பா ரெண்ணிறைந்த வேதனையுட் புகுவார்"

ஆசையே துன்பத்திற்குக் காரணமாகும். இந்த உண்மையை "காதலிப்பார் எண்ணிறைந்த வேதனையுட் புகுவார்" என்னும் அடியில் அடிகளார் அழகாகப் புலப்படுத்தியுள்ளார்.

இவ்வாறெல்லாம் வாழ்க்கை நிலையாமையினையும், கல்விச் சிறப்பினையும் தந்து எடுத்துக்கூறியிருக்கின்றார் அடிகளார். இவ்வுலகில் உள்ளார் அன்னத்தை, கிளியை, முகிலைத் தூதாக அனுப்புவது மரபு. இம்மரபுக்கமையவே அடிகளார் தாம் வரைந்த ஓலையைச் சிவபெருமானின் செஞ்சடையில் வீற்றிருக்கும் கங்கையெனும் தெய்வ நதிமூலம் அனுப்பத் துணிகின்றார்.

"உள்ளத்திலே உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்னும் பாரதியின் வாக்குக்கிணங்க அடிகளாரின் உள்ளத்தெழுந்த உண்மை ஒளி கங்கையில் விடுத்த ஓலையில் நன்கு பிரகாசிக்கின்றது. அடிகளாரின் கவித்திறனை, கற்பனையாற்றலை, தமிழ்ப்பற்றைப் பறைசாற்றும் கங்கயில் விடுத்த ஓலை, தமிழ் உள்ளவரை அடிகளாரை நினைவூட்டும் என்பது திண்ணம்.

பஞ்ச கிருத்திய நுட்பத்தைக் கூறும் நடராஜ வடிவத்தைப் பற்றியும் ஒரு நூலை ஆக்கித்தந்துள்ளார். கர்மயோகம், ஞான யோகம், விவேகானந்த ஞானதீபம் முதலியன அவரது மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

அடிகளார் விபுலானந்தரின் இலக்கியப் பணி குறித்துப் பேசும் போது அன்னார் ஆக்கிய இலக்கிய ஆக்கங்களில் தமிழுக்குப் புதிதாகவும் மகுடமாகவும் அமைவது யாழ் நூலாகும். பழந்தமிழரின் இசை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விபரிக்கும் ஒரு முதல் நூல். பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில் யாழ், பேரி யாழ், மகர யாழ் செங்கோட்டி யாழ் சகோட யாழ், என்பன பற்றி யாழ் நூல் கூறுகின்றது. அடிகளாரின் பதினான்காண்டு ஆராய்ச்சியின் பயனாக யாழ் நூல் தமிழுக்குக் கிடைத்தது. யாழ் நூல் ஆராய்ச்சிக்காக தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று 15 ஆண்டுகள் ஆராய்ந்து கரந்தை தமிழ்ச்சங்க ஆதரவில் திருக்கொள்ளம்புதூர்த் திருக்கோயிலில் 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் "யாழ் நூல் அரங்கேற்றம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

பாரிசவாத்தினால் தாம் பீடிக்கப்பட்டிருந்தும் தமது 45 வருடக்குறிக்கோள் நிறைவேறிய திருப்தியில் இருந்த சுவாமி விபுலானந்தர் "யாழ் நூல்" அரங்கேறிய அடுத்தமாதமே முடிவுற்றது. 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 19 ஆம் திகதி அவர் விண்ணுலகம் அடைந்தார்.

சிவானந்த வித்தியாலய முன்றலிலுள்ள மரத்தின் கீழ் சுவாமிகளின் பூத உடல் அடக்கம் செய்யப்பட்டு அவரின் கல்லறை மேல் அவரால் பாடப்பட்ட

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ

வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ

வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல

உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

என்ற கவிதா வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

"மஹாகவி" உருத்திரமூர்த்தி அவர்கள் தந்த மெய்யான கவிவரிகளை மீள ஒப்பித்து அருட்திரு விபுலானந்த அடிகளாரின் நினைவு நாளில் அவர் தம் சிறப்பைப் போற்றுவோம்.

"ஆங்கி லத்துக் கவிதை பலப்பல

அருமை யாகத் தமிழ்செய்து தந்தனன்

நாங்கள் மொண்டு பருகி மகிழவும்

நன்று நன்றென உண்டு புகழவும்,


தீங்க னிச்சுவை கொண்டவை தானுமே

தீட்டினான்: தெய்வ யாழினை ஆய்ந்ததால்


ஓங்கி னானின் உயர்வைப் பருகுவோம்!

உண்மை யோடவன் நூலும் பயிலுவோம்"

# சிவமூலிகைகளின் சிகரம் வில்வம்... இறைவன் நமக்களித்த செல்வம்!



வில்வம், "சிவ மூலிகைகளின் சிகரம்" என்றும் "மும்மூர்த்திகளின் உறைவிடம்" என்றும் சிறப்பாகப் போற்றப்படுகிறது. ஒருமுறை பூஜைக்குப் பயன்படுத்தினாலும், மீண்டும் தூய்மைப்படுத்தி பயன்படுத்த முடியும். இப்படி பல்வேறு சிறப்புகளைப் பெற்றது வில்வம். இதற்கு, கூவிளம், கூவிளை, சிவத்துருமம், நின்மலி, மாலூரம் எனப் பல பெயர்கள் உள்ளன. வில்வ மரத்தின் இலை, பூ, காய், பழம், வேர், பிசின், பட்டை... என இதன் அனைத்துப் பகுதிகளும் மருந்தாகப் பலன் தரக்கூடியவை.



வில்வ தளம் என்பது, மூன்று இலைகள் சேர்ந்தது. வில்வத்தின் இடதுபக்க இலை "பிரம்மா" என்றும், வலதுபக்க இலை "விஷ்ணு" என்றும் நடுவில் இருப்பது "சிவன்" என்றும் சொல்லப்படுகிறது. வில்வ இலை திரிசூலத்தின் குறியீடாகக் கருதப்படுகிறது. இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என மூன்று சக்திகளின் அம்சமாகப் போற்றப்படுகிறது.

வில்வமரம் ஒரு புனிதமான மரமாகும். இது தீராத ஜென்ம பாவங்களைப் போக்கக்கூடியது . இப்படிப்பட்ட வில்வமரத்தின் சிறப்புகளை பற்றி நாம் விரிவாக பார்ப்போம்.

வில்வமரம் அதிகமாக சிவாலயங்களில்தான் வளர்க்கப்படுகின்றது. சிவனுக்கு வில்வ இலை அர்ச்சனை மிகவும் விசேஷமானது. ஞாயிறன்று வில்வ இலை அர்ச்சனை மிகச் சிறப்பான ஒன்று . வில்வத்தால் சிவனை அர்ச்சனை செய்யும்போது சிவனோடு நாம் இன்னும் நெருங்க முடியும். சிவனின் அருளைப் பெறமுடியும் என்று நம் புராணங்கள் சொல்கின்றன.

வில்வ இலை அர்ச்சனைக்குப் பயன்படும். வில்வப் பழம் அபிஷேகத்துக்கு உகந்ததாகும். வில்வ மரத்தின் கட்டையானது யாகம், ஹோமம் போன்றவற்றுக்குப் பயன்படுகிறது. வில்வ மரத்தின் வேர் மருந்தாகப் பயன்படுகிறது. வில்வப்பழத்தின் ஓட்டைச் சுத்தப்படுத்தி, அதில் ஸ்ரீசூர்ணத்தையும், திருநீற்றையும் வைத்துக்கொள்ளலாம். அப்படி வைத்துக்கொள்வதால், மருத்துவப் பலன்கள் நமக்கு கிடைக்கும்.

**வில்வ மரத்தின் சிறப்புகள்:**

வீட்டில் வில்வமரம் வளர்ப்பது, "அஸ்வமேத யாகம்" செய்த பலனைக் கொடுக்கும். ஆனால், அதை பக்தி சிரத்தையோடு வளர்ப்பதுடன், அவ்வப்போது பூஜைகள் செய்வது நல்லது.

108 சிவாலயங்களை தரிசித்த பலன் கிடைக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் கிடைக்கும்.

கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும். வில்வ மரத்தின் கிளைகளே வேதங்கள். இலைகள் அனைத்தும் சிவரூபம். வேர்கள், கோடி ருத்திரர்கள். வில்வ மரம் மகாலட்சுமி வாசம் செய்யும் இடமாகக் கருதப்படுகிறது .

ஏழரைச் சனி பிடித்திருப்பவர்களுக்குப் பரிகாரமே வில்வம்தான்.

ஒரு வில்வ இலையைக்கொண்டு இறைவனுக்கு அர்ச்சனை செய்வது லட்சம் தங்க மலர்களைக்கொண்டு அர்ச்சனை செய்வதற்கு ஒப்பானது .

**வில்வ மரத்தின் மருத்துவ பயன்கள்:**

இது எளிதில் குணமடையாத நோய்களுக்கு சிறந்த மூலிகை மருந்தாகச் செயல்படுகிறது. வில்வ இலைகளை உண்டால் ஆஸ்துமா நோய் குணமாகும்.

காரத்தன்மையுள்ள வில்வ மரத்தின் இலைகளைப் பிழிந்து அதன் சாற்றுடன் பசும்பால் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் காய்ச்சல் குணமாகும்.

வில்வ மரத்தின் காயை உலர்த்தி பொடி செய்து குழந்தைகளுக்கு சிறிதளவு கொடுத்துவர கழிச்சல், மூலநோய் நீங்கும். வில்வமரத்தின் பிசின் உடலுக்கு உரமேற்றும் தன்மைகொண்டது. வில்வ இலையின் சாற்றுடன் அதே அளவு கல்யாணமுருங்கைச் சாற்றையும் சேர்த்துப் பருகினால், சர்க்கரை நோய் குணமாகும்.

வில்வப்பழத்தை பிழிந்து சர்பத் போன்ற பானங்கள் செய்து குடித்துவர உடலின் வெப்பம் தணியும்,

வில்வப்பழத்தில் புரதச் சத்துக்கள், தாது உப்புக்கள் , மாவுச்சத்துக்கள், சுண்ணாம்புச் சத்துக்கள், வைட்டமின் இ, இரும்புச்சத்து, பாஸ்பரஸ், மற்றும் நியாசின் ஆகியவை உள்ளன.

பழத்தின் ஓட்டிலிருந்து தைலம் தயாரிக்கலாம். இது ஹவில்வ தைலம்' எனப்படும்.

வில்வ இலைகளைப் பறிக்கும்போது கவனிக்கவேண்டியவை:

வில்வ இலைகளை சோமவாரம், சதுர்த்தி, அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி தினங்களில் மரத்திலிருந்து பறிக்கக் கூடாது.

வில்வ தளத்தில் இருக்கும் மூன்று இலைகளைத் தனித்தனியாக பறிக்கக் கூடாது. பல்வேறு ஆலயங்களில் வில்வமரம் தலவிருட்சமாக உள்ளது.

சிவபெருமானுக்கு மட்டும் அல்லாமல் திருமகளுக்கும் வில்வ இலையால் பூஜை செய்யப்படுகிறது. கும்பகோணம் சக்கரபாணிக் கோயிலில் ஸ்ரீ சக்கரத்தாழ்வாருக்கு வில்வ இலையால் அர்ச்சனை செய்யப்படுகிறது. வில்வம் இறைவன் நமக்களித்த செல்வம். சிவனுக்குப் பிரியமாகவும் . ஆரோக்கியத்துக்கு அரணாகவும் திகழ்கிறது.

# தோப்புக்கரணம் கொடுக்கும் பலன்கள்..



பல்லாண்டு காலமாக யோகாசனம் பற்றி அறியாமலேயே, யோகாசனம் செய்வதால் கிடைக்கும் அத்தனை நன்மைகளையும் அனுபவித்தவர்கள் நாம். அது எப்படி சாத்தியம்? ஒன்றை பற்றி அறியாமலே அதன் பலனை எப்படி அடைய முடியும்? நம் முன்னோர்கள் காலம் காலமாக நமது வழிபாட்டு முறைகளுடன் வாழ்வியல் முறைகளையும் கலந்து தந்திருப்பதுதான் .தோப்புக்கரணம் என்னும் ஒற்றைப் பயிற்சியின் மூலமாக யோகாசனத்தின் அத்தனை நன்மைகளையும் பெற்றிருக்கிறோம். இது மகிழ்ச்சிகரமான உண்மை.

தோப்புக்கரணம் பற்றி புராணம் சொல்வதையும், அதற்கு பின்னால் உள்ள அறிவியல் உண்மைகளையும் பற்றியும் பார்ப்போம்.

கஜமுகாசுரன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் தான் பெற்ற வரத்தின் வலிமையால் தேவர்களை அடிமைப்படுத்தி, அவர்களுக்கு, பலவிதமான கொடுமைகள் செய்து வந்தான். தன்னைக் காணும்போதெல்லாம் தோப்புக்கரணம் போட வேண்டும் என்றும் தொல்லை செய்து வந்தான்.

தேவர்களும் வேறுவழியின்றி அவன் சொல்வதை எல்லாம் செய்துவந்தனர். தங்களின் துயரம் தாங்காமல், விநாயகப்பெருமானிடம் முறையிட்டனர். தேவர்களின் பிரார்த்தனையில் மனம் கசிந்த விநாயகர், கஜமுகாசுரனை சங்காரம் செய்யப் புறப்பட்டார்.

விநாயகரையும் தோப்புக்கரணம் போடுமாறு கஜமுகாசுரன் ஆணையிட்டான். மிகுந்த கோபம் அடைந்த விநாயகர் தன் தந்தத்தால் அவனைக் குத்திக் கொன்றார். கஜமுகாசுரனை அழித்ததற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தேவர்கள் விநாயகப் பெருமானுக்கு தோப்புக்கரணம் போட்டு மரியாதை செய்தனர். அன்று முதலே விநாயகருக்கு தோப்புக்கரணம் இடும் முறை உண்டானது.

தோப்புக்கரணம் போடுவதால் என்னென்ன பலன்கள் நமக்குக் கிடைக்கின்றன என்று பார்ப்போம்?

நமது முன்னோர்கள் விநாயகர் வழிபாட்டின் ஒரு பகுதியாக தோப்புக்கரணத்தையும் வைத்திருந்தனர். தோப்புக்கரணம் போடும்போது நமது காது மடல்களைப் பிடித்துக் கொள்கிறோம். காது மடல்களில் அடிப்பகுதியில் உடலின் எல்லா உறுப்புகளையும் இணைக்கிற புள்ளிகள் இருக்கின்றன.

காது மடல்களைப் பிடித்து தோப்புக்கரணம் போடும்போது உடலின் எல்லா உறுப்புகளும் செயல்படுவதற்கான ஒரு தூண்டுதல் கிடைக்கிறது.

உட்கார்ந்து எழும்போது, காலில் உள்ள "சோலியஸ்" எனும் தசை இயங்க ஆரம்பிக்கிறது.சோலியஸ் தசையால் உடல் முழுவதும் ரத்த ஓட்டம் சீராகும். இதயத்தின் தசைகளை போன்றே இது வேலை செய்கிறது .

### தோப்புக்கரணத்தை முறையாகப் போடுவது எப்படி?

1. முதலில் நம்முடைய தோள்பட்டை அளவுக்குக் கால்களை பிரித்துவைத்து நிற்க வேண்டும்.
2. இடது கையால் வலது காது மடலையும்,வலது கையால் இடது காது மடலையும் பிடிக்க வேண்டும்.
3. கட்டைவிரல் வெளியேயும் ஆள்காட்டி விரல் உட்பக்கம் இருக்க வேண்டும்.
4. வலது கை கண்டிப்பாக இடது கையின் மேல் இருக்க வேண்டும்.
5. தலையை நேராக வைத்து,மூச்சுக் காற்றை உள்ளிழுக்க வேண்டும்.
6. நம்மால் எந்த அளவு சிரமம் இல்லாமல், உட்கார முடியுமோ அந்த அளவு உட்கார வேண்டும்.
7. பின்பு மூச்சுக் காற்றை வெளியிட்டவாறே, அப்படியே எழுந்து நிற்கவேண்டும்.

இதன் மூலம் நமது தண்டுவடத்தின் மூலாதாரத்தில் சக்தி உருவாகும்.

தினமும் 5 நிமிடங்கள் தொடர்ந்து செய்தாலே,நாம் வேறெந்த உடற்பயிற்சியும் செய்யத் தேவையில்லை.

லாஸ் ஏஞ்சல்ஸை சேர்ந்த உடற்கூற்று வைத்தியர் எரிக் ராபின்ஸ் தோப்புக்கரணப் பயிற்சியால் மூளையிலுள்ள நரம்புக் கலங்கள் சக்தி பெறும் என்கிறார். பரீட்சையில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவன் தோப்புக்கரணப் பயிற்சியின் பின் நல்ல மதிப்பெண்களைப் பெற்றதாகக் கூறுகிறார். பரீட்சைக்கு செல்லும் முன்பு விநாயகனை தரிசிக்க சொல்வதன் காரணமும் இதுவே.


யேல் பல்கலைக்கழக நரம்பியல் நிபுணர் யூஜினியஸ் அங், இடது கையால் தோப்புக்கரணம் போடுவதால், அக்குபஞ்சர் புள்ளிகள் தூண்டப்படுவதுடன் மூளைக்கலங்களும் சக்தி பெறுவதாகக் கூறுகிறார்.

வெளிநாடுகளில் "சூப்பர் பிரெய்ன் யோகா" என்ற பெயரில் தோப்புக்கரணம் அழைக்கப்படுகிறது. ஆனால், நம் முன்னோர்களோ தினசரி வழிபாட்டின் ஒரு பகுதியாக இதை வைத்துள்ளனர். இதன் மூலம் நாம் விநாயகப் பெருமானிடம் ஆசியும் அருளும் பெறலாம். தோப்புக்கரணம் போடுவதால் கிடைக்கும் நன்மைகளையும் பெறலாம்.

பரபரப்பான இன்றைய உலகில் ஒவ்வொருவருக்கும் பல பிரச்னைகள் இருக்கின்றன. நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஆலயங்களுக்குச் சென்று இறைவனை தரிசிப்போம்.அப்போது தான் நம் உடல் மனம் நலம் பெறும். தினமும் விநாயகனை தரிசித்து தோப்புக்கரணம் போடுவோம். நாளும் நன்மைகள் பல பெறுவோம்.



குயீன்ஸ்லாண்ட் கல்விச் சாலைகளின் சுகாதாரக் கற்கைகள் பல்கலைக்கழகம் (அவுஸ்திரேலியா)வில் "சூப்பர் பிரெய்ன் யோகா" என்ற பெயரில் மாணவர்கள் தினசரி போடும் தோப்புக்கரணம்.
The Practice Called SuperBrain Yoga at QUEENSLAND ACADEMIES Health Sciences Campus (Australia)



# யோகா செய்ய நேரமில்லையா?

சத்குரு



**கேள்வி**

காலையில் சீக்கிரமாக எழுந்து சமைக்கவேண்டும். குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல தயார்படுத்த வேண்டும். அலுவலகம் செல்ல நானும் தயாராக வேண்டும். மாலையில் திரும்பி வந்தவுடன் குழந்தைகளை படிப்பதற்கு தயார்படுத்த வேண்டும். நாள் முழுவதும் இப்படி ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்கும் எனக்கு யோகா எப்படி பொருந்தும்?

**சத்குரு:**

உங்களுக்கு சாப்பிட நேரமிருக்கிறது. அரட்டை அடிக்க நேரம் இருக்கிறது. மற்ற வேலைகளை செய்ய நேரமிருக்கிறது. ஆனால் உங்களை கவனித்துக் கொள்ள உங்களுக்கு நேரமில்லை. அதைத்தானே நீங்கள் சொல்கிறீர்கள்? அப்படியானால் நீங்கள் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்பவரைப் போல நடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். 'எனக்காக எந்த நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ளவில்லை. நான் முழுமையாக மற்றவர்களுக்காக என்னைக் கொடுத்திருக்கிறேன்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் எதைக் கொடுத்திருக்கிறீர்கள்? உங்களுடைய கோபத்தை, உங்களுடைய எரிச்சலை, உங்களுடைய பதற்றத்தைத்தானே மற்றவர்களுக்கும், உங்கள் குழந்தைகளுக்கும் கொடுத்திருக்கிறீர்கள். உங்கள் குழந்தையின் மீது உங்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், ஒரு ஆனந்தமான, அன்பான சூழ்நிலையை உருவாக்குவது அவர்களுடைய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. பளபளப்பான காலணிகளையோ, வசீகரிக்கும் வண்ண உடைகளையோ அல்லது வீடியோ விளையாட்டுகளையோ அளிப்பது முக்கியமல்ல. ஒருநாளின் ஒவ்வொரு கணமும் அவர்களைச் சுற்றிலும் சந்தோஷமும், அன்பும் பொங்கி வழியுமாறு ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தருவதுதான் நீங்கள் அவர்களுக்கு வாங்கித் தருகின்ற பலவிதமான முட்டாள்தனங்களை விட மிகவும் முக்கியமானது, இல்லையா?

### *அனைத்தையும் செய்தாக வேண்டுமா?*

உங்கள் வாழ்க்கையின் நோக்கமென்ன? உங்களுடைய குழந்தைகள், உங்களுடைய வேலைகள், இதர வேலைகள் எல்லாவற்றையும் உங்களால் கவனிக்க முடியுமானால் எல்லாவற்றையும் செய்யுங்கள். உங்களால் அப்படி கவனிக்க முடியாவிட்டால் எதை உங்களால் செய்ய முடியுமோ அதை மட்டும் செய்யுங்கள். எல்லோராலும் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே செய்ய முடியும், இல்லையா? உலகிலுள்ள எல்லாவற்றையும் நீங்களே செய்ய விரும்பினால் நிச்சயமாக பைத்தியமாகி விடுவீர்கள். உங்களால் எவ்வளவு செய்ய முடியும் என்பதை நீங்கள்தான் நிர்ணயிக்க வேண்டும். ஒரு சிலரால் காலை 6 மணிக்கு எழுந்து எல்லா வேலைகளையும் சந்தோஷமாக செய்து முடிக்க முடியும். ஒரு சிலரால் அது முடியாது. எனவே ஒவ்வொருவரும் அதற்கேற்றாற் போல் தங்கள் வாழ்க்கையை வகுத்துக் கொள்ள வேண்டும், இல்லையா?

இப்போது இந்த செயல்களில் எல்லாம் நீங்கள் சிக்கியிருப்பது இவற்றை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதால் அல்ல. நீங்கள் வேறு யாரோ ஒருவரைப் போல இருக்க முயற்சி செய்கிறீர்கள். அதுதான் பிரச்சனையே. மற்ற மனிதர்கள் எதை வைத்திருக்கிறார்களோ அதையே நீங்களும் விரும்புகிறீர்கள். உண்மையிலேயே உங்களுக்கு இது தேவையா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் செய்த இந்த செயல்களின் காரணமாக நீங்கள் அடைந்தது என்ன? உங்கள் குழந்தைகள், உங்கள் கணவர், அல்லது உங்கள் மனைவி அல்லது எதுவாக இருந்தாலும் நீங்கள் இதை சந்தோஷமாய் அனுபவிக்கவில்லை. பின்னர் எதற்காக இவையெல்லாம் உங்களுக்குத் தேவை?

### *சந்தோஷமா? துன்பமா?*

இவையெல்லாம் சந்தோஷத்திற்கான அடிப்படை என்று நீங்கள் நினைத்ததால்தான் இவற்றையெல்லாம் உருவாக்கினீர்கள், இல்லையா? ஆனால் அவையே இன்று உங்களுடைய துன்பத்திற்கான, பதற்றத்திற்கான காரணங்களாக ஆகிவிட்டன. அப்படியானால் உங்களுடைய வாழ்க்கையை மீண்டும் ஒருமுறை பார்க்கத் தேவையிருக்கிறது. நீங்கள் படித்திருக்கிறீர்கள். வேலைக்கும் சென்று கொண்டிருக்கிறீர்கள். திருமணமும் ஆகிவிட்டது. குழந்தையும் பெற்றுவிட்டீர்கள். இவையெல்லாம் எதற்காக? இவையெல்லாம் உங்கள் சந்தோஷத்திற்கு, உங்கள் நலவாழ்விற்கு ஒரு காரணமாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தீர்கள். ஆனால் அவையே இன்று உங்கள் உயிரை எடுக்கிறது.

### *தினமும் 25 நிமிட யோகா....*

இவற்றை கையாள்வதற்கான திறமை உங்களுக்கு இல்லாவிட்டால் உங்கள் செயல்களை நீங்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் அல்லது உங்களுடைய திறமையை அதிகரித்துக் கொள்ள முடியுமானால் அதை நீங்கள் செய்ய வேண்டும். நான் கற்றுத் தரும் யோகப் பயிற்சியை தினம் 25 நிமிடங்கள் நீங்கள் செய்தால் போதும். ஒருநாளில் பெருமளவு நேரத்தை நீங்கள் மிச்சப்படுத்துவீர்கள். ஏனென்றால் உங்களுடைய தூங்குகிற நேரம் மிகவும் குறைந்து விடும். உதாரணமாக ஒருநாளைக்கு 8 மணி நேரம் தூங்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். அப்படியானால் உங்கள் வாழ்க்கையில் மூன்றில் ஒருபகுதி நேரத்தை தூங்கியே கழிக்கிறீர்கள், இல்லையா?

உங்களுடைய உடலும், மனமும் மிகவும் சக்தி ஓட்டத்துடன் சுறுசுறுப்பாக இயங்குமானால் உங்களுடைய தூங்கும் நேரம் இயல்பாகவே குறைந்துவிடும். அப்படியானால் ஒருநாளில் 3லிருந்து 4 மணி நேரங்களை சேமிப்பது என்பது மிகப்பெரிய விஷயம். இல்லையா? அது மட்டுமல்ல. உங்களுடைய உடலும், மனமும் மிகவும் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இந்த எளிய பயிற்சியை மேற்கொண்ட பலரது அனுபவம் இது. இந்த பயிற்சியை 6லிருந்து 8 வாரங்கள் தொடர்ந்து செய்த ஒருசிலர் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அலுவலகத்தில் அல்லது வேறு பணியில் இருக்கும்போது 8 மணி நேரத்தில் மற்றவர்கள் செய்யக்கூடிய செயலை மிக சாதாரணமாக 3லிருந்து 4 மணி நேரத்தில் செய்து முடிக்கிறார்கள்.

ஏனென்றால் ஒரு நாள் முழுவதும் உங்களை கவனித்துப் பார்த்தால், அதாவது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்களுக்குத் தெரியாமலேயே ஒரு வீடியோ படமாக எடுத்தால், ஒருநாளில் தேவையில்லாமல் எவ்வளவு அசைவுகளைச் செய்கிறீர்கள், தேவையில்லாமல் எவ்வளவு வார்த்தைகளை நீங்கள் உபயோகிக்கிறீர்கள், தேவையில்லாமல் எவ்வளவு செயல்களில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். ஒரு நாளைக்கு இப்படி செய்து நீங்கள் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். தேவையில்லாமல் எவ்வளவு செயல்களைச் செய்கிறீர்கள் என்பதை நீங்கள் அப்போது கண்டு கொள்வீர்கள். உங்களுடைய மனம் முற்றிலும் ஒருங்கிணைக்கப்பட்டதாக ஆகிவிட்டால் தேவையில்லாமல் பேசுகின்ற வார்த்தைகளும், தேவையில்லாத செயல்களும், தேவையில்லாத விஷயங்களும் தானாகவே மறைந்துவிடும். அவை விலகி விட்டாலே உங்களுக்கு பெருமளவு நேரம் மிச்சப்படும்.

உங்களுக்கு ஒரு நாளில் இருபத்திநான்கு மணி நேரங்கள் இருக்கிறது. இந்த இருபத்திநான்கு மணி நேரத்தை இருபத்திஆறு மணிநேரமாக நாம் ஆக்கத் தேவையில்லை. இந்த இருபத்திநான்கு மணி நேரமே போதும். இருபத்திநான்கு மணிநேரத்தில் நிறைய செயல்களைச் செய்ய முடியும். நாம் உடலளவிலும், மனதளவிலும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு மனிதராக இருந்தால் இருபத்திநான்கு மணி நேரத்தில் நிறைய வேலைகளை நம்மால் செய்ய முடியும். ஒருங்கிணைக்கப்படாத, ஒருமுனைப்பு இல்லாத ஒரு மனிதராக நீங்கள் இருந்தால் உங்களுக்கு நேரம் போதவில்லை என்றுதான் சொல்வீர்கள். உங்களில் பெரும்பான்மையானவர்கள் வேலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கவில்லை. எண்ணங்களால் தான் பெருமளவில் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறீர்கள். எனவே தயவுசெய்து ஒருநாளில் இருபது நிமிடங்களை உங்களுக்கென ஒதுக்குங்கள். முடிந்தால் காலை 5.30 மணிக்கு எழுந்திருங்கள். சட்டென உங்களுடைய வாழ்க்கையின் தரம் முற்றிலும் வித்தியாசமாக இருப்பதைக் காண்பீர்கள். 'எனக்கு நேரமில்லை' என்று தொடர்ந்து விவாதம் செய்து கொண்டிருக்க வேண்டாம். உங்களுக்கான நேரத்தை ஒதுக்கிப் பாருங்கள். இது மிகப் பெரிய வித்தியாசத்தை தரும்.

*07ம் பக்கத் தொடர்ச்சி...*

## சஷ்டியில் ஷண்முகன் ......

"அமுதால் உன்னைப் பெறலாமே" என்பார் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகப் பெருமான். அதுபோல அவனிடம் போய் உண்மையான அன்பு .. ஆழ்ந்த பக்திப்பெருக்கினால் .. உங்களைக் காத்து அருள்புரிய வேண்டி அமுதாலே போதும், அவன் உங்களைக் காக்க ஓடிவருவான். உங்களிடம் தன்னலமில்லாத ஆழ்ந்த முருக தெய்வ பக்தி இருந்தால் நீங்கள் ஒருமுறை ஓதினாலும் ஓடி வருவான், கருணையின் கடலாகிய கருணா மூர்த்தி கந்தப் பெருமான்.

வள்ளி தெய்வானையுடன் கூடிய ஆறுமுகப் பெருமான் திருமுன்பு அமர்ந்து இந்தக் கவசத்தைப் படிக்க வேண்டும். பிரமன், திருமால், சிவன், சரசுவதி, இலக்குமி, பார்வதி ஆகிய ஆறு சக்திகளும் சேர்ந்து ஒரே சக்தியாக .. சக்திவேல் சண்முகனாக .. விளங்குவதால், ஆறுமுகத்துடன் கூடிய திருமுருகன் முன்பு உட்கார்ந்து ஒருமனதோடு இதைப் படிப்பது நல்லது. அதுவே சிறந்த பலனைக் கொடுக்கக்கூடியது. செவ்வாய், வெள்ளி, சஷ்டி, பரணி (இரவு), கார்த்திகை (காலை), விசாகம் ஆகிய நாட்களில் இந்தக் கவசத்தைச் சிறப்பாகப் படிக்கவேண்டும். கவச பாராயணத்துக்கு முன்னும் பின்னும், .. சரவணபவ .. என்னும் முருகப் பெருமானின் மூல மந்திரத்தை .. ஓம் .. சேர்த்து "ஓம் சரவணபவ" என 108 முறைகள் ஓதவேண்டும். அதுதான் பலன்தர வழிசெய்யும்.

கவச பாராயணப் பாடலைக் குறையாகப் பாடக்கூடாது. அதை முழுமையாகப் பாடி முடிக்க வேண்டும். பாராயணத்தின் இடையில் யாருடனும் பேசுதல் கூடாது. முன்பின் மாறிப் படித்தலாகாது. கவச பாராயணம் பாடி முடித்த பிறகு, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், பிள்ளைத் தமிழ், கந்தபுராணம் ஆகிய கந்தர் பஞ்ச புராணங்களிலிருந்து ஒவ்வொரு பாடல் வீதம் முறையே பாட வேண்டும். பாராயணம் முடிந்ததும் ஆறுமுகன் திருவுருவத்துக்கு கற்பூர தீபம் ஏற்றி ஓம் வடிவமாகக் காட்டி வணங்க வேண்டும். விரதமிருந்து புத்திர பாக்கியம் பெற விரும்புவோர் சஷ்டியில் படிப்பதற்கு இந்தக் கவசமே மிகவும் சிறந்தது. இந்தக் கவசம் மேலே சொல்லப்பெற்ற பலவித நன்மைகளை வாரி வழங்கிக் கொண்டு வரும் கற்பகம் ஆகும்.

நல்லெண்ணெய் விளக்கையே பூசை அறையில் வைத்துக் கொள்ளவேண்டும். கவசங்களைப் பிழையில்லாமல் நன்கு படிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். மனத்திற்குள் படிப்பவர்கள் பாதிப் பலனைத்தான் பெறுவார்கள். நன்றாக வாய்விட்டு (இராகம் போடாமல்) படிக்க வேண்டும். பாடலை மனனம் பண்ணி நூலைப் பாராமலே படிப்பது சிறப்பு. நூலுக்கு பூ வைத்து வணங்கி வழிபட்டுப் பின்பு படிப்பது மிகவும் சிறப்பாகும்.

மந்திர சக்தி மிக்க கந்தர் சஷ்டிக் கவசத்தை மேலே சொன்ன முறைப்படி நாள்தோறும் பாராயணம் செய்யும் முருக பக்தர்களுக்கு அவனது திருவருள் கிடைக்கும். பயன் நிச்சயம் உண்டு. நம்பினார் கெடுவதில்லை அது நான்கு மறை தீர்ப்பு. கந்தன் கைவிடமாட்டான். கட்டாயம் காத்தருள் புரிவான்.

சைவ முன்னேற்றச் சங்கம் (UK) மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றம்

இணைந்து நடாத்திய

# “நாற்பதில் திருமணங்கள் நாற்பது”


























40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40


40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40

40ல் திருமணங்கள் 40





மணமக்களுக்கு மங்களதாம்பாளம் வழங்கும் திரு.சூ.பாலசிங்கம்



மங்களப் பொருட்கள் தாங்கியவாறு சுமங்கலிகள்



திரு.இராமநாதன் (சை.மு.ச – UK) அவர்களின் உரை



திரு.இந்துசேகரன் (சைவ முன்னேற்றச் சங்கம்(UK) ) அவர்களை
திரு.எஸ்.ரி.எஸ்.அருளானந்தன் அவர்கள் கௌரவிக்கின்றார்.





திருமதி.சா.புவனேஸ்வரி மற்றும் திருமதி ம.வசந்தா ஆகியோரை மாமன்றத்தின் சார்பில் பொருளாளர்
திருமதி அபிராம் கயிலாசபிள்ளை அவர்கள் கௌரவிக்கின்றார்.




திரு.சூ.பாலசிங்கம் அவர்களை திரு.துரை ஆனந்தன்
அவர்கள் கௌரவிக்கிறார்



திரு.இந்துசேகரன் (சை.மு.ச – UK) அவர்களின் உரை



சைவ முன்னேற்றச் சங்கம் (UK) வழங்கிய மாமன்றப் பிரதிநிதிகளுக்கான
கௌரவிப்பும் நினைவுச்சின்னமும்.



# மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம் – வேம்பு!

**முருகையா பிரணவன்**

“வேம்பு” – எனது இளமைப்பருவத்திதல் எனது வீட்டின் பின்வளவு முழுதும் பத்திற்கும் மேற்பட்ட பெரிய வேப்பம் மரங்களின் நிழலால் முற்றுமுழுதாக மூடப்பட்டிருக்கும். அதன் நிழலில் பொழுதுகளைக்கழித்த எங்களுக்குக் கிடைத்த அபரிமிதமான உற்சாகம் சொல்லற்கரியது. ஆனால் கொடிய யுத்தத்தின் வடுக்களாய் – யுத்தம் முடிந்தபின் கள்வர்களின் கைவரிசையாய் நாம் மீண்டும் வருவதற்குள் அனைத்து மரங்களும் தறித்து எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. அந்த வேப்பம்மரங்கள் தந்த சுத்தமான காற்றினை, அந்த இயற்கையான அழகிய சூழலை நம் ஊரில் அநேகமானவர்கள் அனுபவித்திருப்பர்.

அன்று ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் நிச்சயம் ஒரு வேப்பம் மரம் நிற்கும். அது அந்த வீட்டில்வளர்ந்தவர்களின் பசுமையான வாழ்வில் பின்னிப்பிணைந்திருக்கும்.

ஆனால் இன்று நாகரீக மோகத்தில் பித்து தலைக்கேறி நிற்கும் சமூகம் சிறிதும் சிந்திக்காது வீட்டை அழகுபடுத்தவும் – தினமும் கூட்டிச் சுத்தப்படுத்த வேண்டும் என்ற சோம்பேறித்தனத்தின் உச்ச நிலையிலும் மரங்களை வெட்டி விடுகின்ற மூடத்தனமான செயலைக் காணும்போது கோபமும் – பரிதாபமுமே தோன்றுகின்றது. மரங்களை – அதுவும் நோய்தீர்க்கும் மரங்களை அழிப்பது என்பது அந்த சமூகம் தன் தலையில் தானே கொள்ளி வைத்துக் கொள்வதற்கு ஒப்பானது.

மரங்களைத் தறிப்பதும் பின்பு காற்று இல்லயென்று AC பூட்டுவதும், தொடர்ந்து எந்த வேலைவெட்டியுமில்லாது AC யினுள் இருப்பதால் ஏற்படும் தொற்றா நோய்களும் தினந்தினம் வைத்தியசாலை வாசலில் காத்துநிற்பதும் லட்சக்கணக்கான பொருட்செலவும் அகால மரணங்களும்.... என பாலைவனமாகி – நோயால் பரிதவிக்கும் எதிர்கால சமுதாயமே என் கண்முன் விரிகின்றது. ஆனால் இன்னும் நம் சமூகம் இந்த ஆபத்தினை உணரவில்லை.

உங்களுக்குத் தெரியுமா? நம் அனைவருக்குள்ளும் எப்போதும் கான்ஸர் செல்கள் இருக்கின்றன. ஆனால், குறைந்த அளவில். அது எப்போது ஒரு அளவு தாண்டிச் செல்கிறதோ, அப்போது நோயாக அறியப்படுகிறது. வேம்புக்கு கான்ஸர் செல்களையே அழிக்கும் சக்தி இருக்கிறது.

ஈஷா யோகா மையத்தில் தினமும் அதிகாலையில் ஒரு சிறிய கோலிக்குண்டு அளவு வேப்பிலையும் அதே அளவு மஞ்சள் உருண்டையும் வெதுவெதுப்பான நீருடன் வெறும் வயிற்றில் யோகப் பயிற்சிக்கு முன் உட்கொள்ளப்படுகிறது.

இது நாள் முழுக்க அளவான உஷ்ணத்தையும் துடிப்பையும் உடலில் தக்கவைத்திருக்க உதவுகிறது. இது நம் உடலைச் சுத்தம் செய்கிறது. உணவுப் பாதை முழுக்க சிறிய அளவிலான தொற்று நீக்கியாகச் செயல்பட்டு சுத்தம் செய்கிறது.

பச்சை நிறத்தில் வாடாத நிலையில் உள்ள வேப்பிலை போதும். மையாக அரைத்து, மஞ்சள் பொடியும் நீரும் கலந்த உருண்டையுடன் விழுங்கி விட வேண்டியதுதான். கசப்பு விரும்பாதோர், அதன் மீது தேன் தடவி விழுங்கலாம். அடுத்த ஒரு மணி நேரத்திற்கு எந்த உணவும் உட்கொள்ளக் கூடாது. இதை யோகாசனப் பயிற்சிக்கு முன் எடுத்துக்கொள்வது சிறந்தது.

வேம்பின் கசப்புடன் ஒரு நாளைத் துவங்குவது வாழ்வு முழுக்க இனிமை நிரம்ப நல்ல வழி. வேம்பின் மீது இன்று ஏராளமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, வேம்பு ஒரு அதிசயமான மரம் என்றே சொல்லப்படுகிறது. வேறு எந்தத் தாவரத்துக்கும் நமக்குக் கொடுக்க இத்தனை நன்மை இல்லை.

நம் முன்னோர்கள் வேப்பிலையையும் மஞ்சளையும் தெய்வீகமாகக் கருதியதற்கும் அம்மனின் வெளிப்பாடாக இதைப் போற்றியதற்கும் ஆங்காங்கே வேப்ப மரத்தைக் கோயிலாகக கும்பிட்டதற்கும் காரணம் – இதன் அற்புதமான மருத்துவக் காரணங்களினால்தான்!

### மேற்கத்தையவரின் காப்புரிமைத் திருட்டு

1995ல் ஐரோப்பிய காப்புரிமைக்கழகம் வேம்பு தொடர்பான காப்புரிமையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் விவசாயத்துறைக்கு வழங்கியது. இதனை அறிந்து அதிர்ந்த இந்திய அரசாங்கம் காப்புரிமை வழங்கப்பட்ட இச்செயற்பாடு 4000 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் நடைமுறையில் இருந்து வரும் மக்களின் நம்பிக்கைக்கும் ஆயுள்வேத வைத்தியமுறைக்கும் எதிரானதாக இருப்பதாக கூறி இதை எதிர்த்தது. பின்பு தொடர்ந்து நடைபெற்று வந்த வழக்கின் பலனாக 2000ல் இந்தியாவிற்கு சாதகமாக ஐரோப்பிய காப்புரிமைக்கழகம் தீர்ப்பளித்தது.

நம் வாழ்வில் முக்கியமான – நோய்தீர்க்கும் விருட்சங்கள் பற்றி இனிவரும் பதிப்புக்களில் உங்களுடன் பகிரந்துகொள்ள விரும்புகின்றேன்.


### வேம்பு

நடுத்தரமாக அல்லது சற்றே உயரமாக வளரக்கூடிய வேப்பமரம் சுமார் 15 – 20 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. இதனுடைய பட்டை அடர் சாம்பல் நிறத்துடன் கூடிய பட்டையை உடையது. இலைகள் ஓரங்களில் ரம்பம்போல் காணப்படும். பூக்கள் வெளிர் மஞ்சள் நிறம் குலைகளாகத் தொங்கும். வேப்பமரத்தின் பட்டை, இலைகள், பூக்கள், விதைகள் மற்றும் எண்ணெய் மருத்துவகுணம் வாய்ந்தவை.

### பட்டை

பட்டை கசப்பும், துவர்ப்பும் நிறைந்தது. குளிர்ச்சியானது. அது காய்ச்சிய தண்ணீரில் விரல் விட்டு சிலுப்ப நுரை வரும். அந்த நுரையை உடலில் அரிப்புள்ள பகுதியில் பூசினால் அரிப்பு நீங்கிவிடும். கிருமிகளை அழிக்கும். கல்லீரலுக்கு நல்ல டானிக்காக பயன்படும். பித்தம் அதிகரித்த நிலையில்


இதன் பட்டை பயன்படும். தோல் உபாதைகள் சிரங்கு, படை வெண்குஷ்டம், மலேரியா காய்ச்சல், புண், எரிச்சல், சர்க்கரை உபாதை, மூலம், மேக புண் ஆகியவற்றை ஆற்றக்கூடிய சக்தி அதற்குண்டு.



வேப்பம் பட்டையை அவித்துக் கசாயமாக குடிப்பது பலவிதமான காய்ச்சல்களை குணப்படுத்துவதாகவும் கொடிய காய்ச்சல்கள் வராது தடுக்கும் சக்தியையும் நமக்குத் தருகின்றது.

**இலை**


வேம்பின் இலைகள் கண்களுக்கு நல்லது. இலைக் கொழுந்துகளை ஓமத்துடன் சாப்பிட வயிற்றிலுள்ள பூச்சிகள் மடிந்து மலத்துடன் வெளியேறும். குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். மலேரியா காய்ச்சலுக்கு இலைக் கஷாயம் சாப்பிட மிகவும் நல்லது.



தினமும் அதிகாலை வெறுவயிற்றில் 5 அல்லது 6 வேப்பம் துளிர்களை மென்று வருவது உடலிலுள்ள அழுக்கினை வெளியேற்றுவதுடன் உடலில் உள்ள நச்சுத் தன்மையை அகற்றுகின்றது. அதனால் நம் உடலும் எப்போதும் ஆரோக்கியமானதாக இருக்கும்.

**பூ**

வேப்பமரத்தில் உணவாகவும் மருந்தாகவும் என இருவகையிலும் பயன்படுவது பூ மட்டுமே. மற்றவை மருந்தாக மட்டுமே பயன்படும். வசந்தகாலத்தில் இதன் பூ கிடைக்கும். புத்தாண்டிற்காக இயற்கை தரும் பரிசு. புத்தாண்டு தினத்தன்று இதனைச் சேர்க்கத் தொடங்குவர். பூவைப் பச்சையாகவும் காய்ந்ததாகவும் உபயோகிக்கலாம். காய்ந்த பூ நாட்படவைத்திருக்கக்கூடியதே. பச்சையான பூவை வறுத்தும் காய்ந்ததை நெய்யிலும் எண்ணெயிலும் பொரித்தும் சேர்ப்பர். சுவையில் கசப்பானாலும் மற்றவற்றைச் சுவைத்து உணணச் செய்யும். நம் ஊர்களில் இந்தப் பூவிலிருந்து வடகம் செய்வார்கள். பூவை சுத்தப்படுத்தி காயவைத்து மாவுடக் சேர்த்து சிறு சிறு தட்டைவடிவில் செய்து காய வைப்பார்கள். இந்த வடகம் மிகச்சிறந்த பூச்சிக் கொல்லியாகும். குடலிலுள்ள தீமைபயக்கும் பூச்சிகளை எந்தவித பக்க விளைவுகளுமின்றி நீக்கவல்லது.






அருசி, அன்னத்வேஷம், எதுக்களிப்பு, வாந்தி, பித்தத்தால் தலைசுற்றுதல், எண்ணெய் அஜீரணத்தால் ஏற்படும் தலைசுற்றல், ஏப்பம் இவற்றை வேப்பம்பூ தணிக்கும். நெய் அல்லது எண்ணெயில் பொரித்துச் சாதத்துடன் பிசைந்து சாப்பிடலாம். கீரிப்பூச்சி, ஆசனவாய் அரிப்பு, முதலியவற்றில் மிகவும் ஏற்றது.

காய்ந்த பூவை நெய்விட்டு வதக்கி உப்பு, சுட்டபழம்புளி, வறுத்த மிளகாய், கறிவேப்பிலை இவை சேர்த்துத் துவையலாக்கிச் சாதத்துடன் பிசைந்து சாப்பிடலாம். துவரம் பருப்பை வறுத்து வேதவைத்து வடித்த நீரில், சுட்ட புளியோ, எலுமிச்சம் பழச்சாறோ சேர்த்து மிளகோ மிளகாயோ கூட்டி ரசம் வைத்துப் பொரித்த வேப்பம்பூவை அதில் கலக்கிச் சாப்பிட வாய் இலைத்துப்போதல், அருசி, வாந்தி ஏப்பம் முதலியவை நீங்கும். கடும் நோய் நீங்கியபின் இரைப்பை சுறுசுறுப்படைய ஏற்றவை.

பத்திய உணவு - பச்சையாகச் சேகரித்து லேசாக வறுத்துப் பொடித்து ஜலத்தில் வெல்லத்துடன் வேகவைத்துப் பச்சடி செய்து சாப்பிட ஜீரணத்திற்கும் வயிற்றுப் புண்ணை ஆற்றவும் ஏற்றது.

**விதைகள்**

விதைகள் கசப்பானவை. சூட்டைக் கிளப்பும். உள்ளுக்குச் சாப்பிட்டால் பேதியாகும். இதுவொரு நல்ல வலிநிவாரணி. காசநோயை குணப்படுத்தக் கூடியது. புண்ணை ஆற்றும். கருப்பையை தூண்டிவிட்டு குழந்தை பிறப்பை எளிதாக்கும். சர்க்கரை வியாதி உள்ளவர்கள் உள்ளுக்குச் சாப்பிடுவது குணம் தரும். மேலும் காய்ந்த விதைகளை புகையூட்டுவதனால் நுளம்பு, ஈ போன்றவை நம்மை அணுகாவண்ணம் காக்கும்.



**எண்ணை**

வேப்பெண்ணெய் கசப்புச் சுவையுடையது. குடல் கிருமிகளை வெளியேற்றும். சூடாக்கி மேல் தேய்க்க உடல் வலியை குணப்படுத்தும். வாததோஷத்தின் சீற்றத்தை அடக்கும். தோல் உபாதைகளுக்கு நல்லது. தொடை இடுக்கில் ஏற்படும் அரிப்பை அகற்றும். கடுமையான மலேரியா காய்ச்சலை குணப்படுத்தும். குஷ்டநோய்க்கு நல்லதொரு நிவாரணியாக இருக்கும்.

**வேப்பம் தடி**

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்பது நம் முன்னோர் வாக்கு. அந்த வகையில் ஆலம் விழுதும் வேப்பங்குச்சியும் நமது பற்களுக்கு இயற்கையான உறுதியையும் ஆரோக்கியத்தையும் வழங்குகின்றன. அதிகாலையில் சிறிய வேப்பங்குச்சி ஒன்றினால் பற்களை சுத்தம் செய்வது ஆரோக்கியமான பற்களை நமக்கு வழங்கும்.

# இந்து இலக்கியங்களில் விருந்தோம்பற் சிந்தனைகள்

தீபா அர்ச்சனா,து., நிஷாந்தினி,ச.
நான்காம் வருடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில்

தன்னலங் கருதாமல் இறை பக்தியுடன் சமுதாயத்திற்காக செய்யப்படும் தொண்டு அன்னமிடலாகும். இந்துக்களின் வாழ்வியல் முறைகளில் விருந்தினரை உபசரிப்பது ஒவ்வொரு தலைவன், தலைவியின் தலையாயக் கடமையாகும். இல்லற அறத்தில் விருந்தினரைப் பேணுதல் முக்கியமாகும். விருந்து என்றால் 'புதுமை', 'புதியவர்' என்று பொருள். 'விருந்தே புதுமை' என்பார் தொல்காப்பியர். வீட்டிற்கு வரும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் விருந்தினர் என்கிறோம். வீட்டிற்கு வரும் புதியவர்களிற்கு உணவு அளித்தல் விருந்தோம்பல் எனப்படும். "ஐயம் இட்டுண்" என்ற ஔவையாரின் குரல் விருந்தோம்பலைச் சுட்டுகின்றது. "மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற மணிமேகலை வாசகம் பிறருக்கு உணவளிப்பதையே எடுத்துரைக்கின்றது. "மருந்தே யாயினும் விருந்தோடு உண்" என்ற ஔவையின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்த இனம் தமிழினமாகும். அந்தவகையில் இந்து இலக்கியங்களிலும் நிறைவான விருந்தோம்பற் சிந்தனைகளை அவதானிக்கலாம்.

இந்து சமயத்தின் பொது நூலாகக் கருதப்படும் வேதத்தில் 'அதிதி' என்பது விருந்தினரைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. வேதகால மக்கள் அதிதியை தெய்வமாக போற்றியுள்ளனர். தன் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு தெய்வத்தின் நிலையைக் கொடுத்து மரியாதை செலுத்தியுள்ளனர். விருந்தினரை தெய்வமாகப் போற்றும் இந்நிலை இந்து சமயத்தின் மேன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

வேதத்தின் ஞானகாண்டப் பகுதியாக விளங்கும் உபநிடதத்தில் "அதிதி தேவோ பவ" என்ற மகாவாக்கியம் விருந்தினரை தெய்வமாகக் கருது எனக் கூறுகின்றது. மேலும், "விருந்தினரை அவமதிக்காதே, உனக்கு மட்டும் உணவு உண்டாக்கினால் போதாது நாட்டுக்கும் பயன்படுமாறு ஏராளமான உணவை உண்டாக்கு, எவருக்கும் உணவு இல்லை என்று சொல்லாதிருப்பாயாக." போன்றன உபநிடதத்தில் காணப்படும் உபதேசங்களாகும். இவையாவும் விருந்தோம்பலின் சிறப்பையே எடுத்துக்காட்டுகின்றது. மேலும் கடோப உபநிடதத்தில் விருந்தாக வந்த நசிகேதனை மூன்று நாட்கள் காக்க வைத்த குற்றத்திற்காக மன்னிப்பு கேட்கும் முகமாக தன்னிடம் மூன்று வரங்கள் கேட்குமாறு நசிகேதனிடம் யமன் வேண்டுவதாக கூறப்பட்டுள்ளது.

புராணத்திலும் யார் யாருக்கு எது முக்கியம் என்று கூறப்பட்டுள்ளது. "சந்நியாசிகளுக்கு முக்கியம் பொறுமை. வனப்பிரஸ்தர்களுக்கு முக்கியம் உபவாசம், இல்லறத்தாருக்கு முக்கியம் தானம், பிரம்மச்சாரிகளுக்கு முக்கியம் ஆசானுக்கு பணிவிடை செய்வது." இங்கு இல்வாழ்வானது முக்கிய கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பலைக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. மேலும் பவிஷ்ய புராணத்தில் "ததஸ்வான்னம் ததஸ்வான்னம் ததஸ்வான்னம் ததஸ்வான்னம் உதிஷ்டி ரக" எனக் குறிப்பிட்டிருப்பது அன்னம் அளி அன்னம் அளி ஓயாமல் அன்னம் அளி என்பதையாகும்.



'ஆதிகாவியம்' எனப் போற்றப்படும் இராமாயணத்தில், இராமனைப் பிரிந்து சீதை அசோகவனத்தில் இருக்கும் போது இராமனைத் தேடி விருந்தினர் வந்தால், தான் இல்லாமல் இராமன் விருந்தினருக்கு விருந்து படைக்க என்ன செய்வானோ என்று வருந்துவதாக சீதையின் விருந்தோம்பற் சிறப்பு கூறப்பட்டுள்ளது. அதை பின்வரும் பாடலில் காணலாம்,

"அருந்து மெலல்டகு ஆரிட அருந்து மென்று அழுங்கும்
விருந்து கண்ட போது என்னறுமோ என விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித்திடவு மாண்டெழாதாள்"

குகன் மற்றும் சபரி ஆகியோரும் விருந்தோம்பலிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். மேலும் 'ஐந்தாம் வேதம்' எனப் போற்றப்படும் மகாபாரதத்திலும் நிறைவான விருந்தோம்பற் சிந்தனைகளை அவதானிக்கலாம். பஞ்சபாண்டவர்கள் தன் மனைவியுடன் வனவாசம் சென்ற போது அங்கு காட்டில் தன் குடில் தேடி வரும் முனிவர்களை திரௌபதி வரவேற்று உபசரித்தாள்.

சமயக் குரவர்களும் விருந்தோம்பலிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளனர். திருவீழிமிழலையிற் பஞ்சம் ஏற்பட்ட போது அப்பரும் சம்பந்தரும் மடங்கள் நிறுவியும், தண்ணீர் பந்தல் வைத்தும் மக்கள் பசி ஆற்றித் தொண்டு புரிந்தனர். இவர்களது பணியை பெரியபுராணம்,

"மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்..." எனக் கூறுகின்றது. மேலும்,

"...யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி..."

எனும் திருமந்திரப் பாடலடிகள், நாம் உண்ணும் போது அதில் ஒரு கைப்பிடி அளவு உணவினை ஏழை எளியோர்களிற்கு கொடுத்து உண்ண வேண்டும் என்றும், மனிதர்களிற்கு மட்டுமன்றி பிற உயிரினங்களிற்கும் உணவளிக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. மேலும் நாம் உண்ணும் அன்னத்தில் ஒரு அகப்பை அன்னத்தை சரி பிறருக்கு கொடுத்து உண்ண வேண்டும் என்பதை "உண்ணும் போதொரு தவ்விக் கொடுண்மின்" என்ற பாடல் வரி மூலம் உணர்த்துகின்றது. விருந்தோம்பலானது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் திருமந்திரம், காகமானது தனக்கு கிடைத்த உணவினை தான் மட்டும் உண்ணாது தன் இனத்தையும் அழைத்து சேர்ந்து உண்பதைப் போல, மனிதனும் தன் குலத்தாருடன் பகிர்ந்துண்ண வேண்டும் என கூறுகின்றது. அதை பின்வரும் பாடல் மூலம் அவதானிக்கலாம்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள
பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல்.."

மேலும், விருந்தோம்பல் செய்யும் போது சாதி, மதம், ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பார்க்காது அனைவருக்கும் உணவளிக்க வேண்டும் என்றும், வருவிருந்து பார்த்திருந்து உண்ண வேண்டும், சுவையான உணவு மீது கொள்ளும் ஆசையால் விரைவாக உண்ணக் கூடாது, மறுநாள் உண்பதற்காக உணவைப் பாதுகாத்து வைக்கக் கூடாது என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின்பழம் பொருள் போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந் தொல்லை உண்ணன்மின்"

என்ற பாடலில் இதை அறியலாம். மேலும் ஞானி ஒருவருக்கு ஒரு வேளை பகலுணவு கொடுத்துண்பதால் கிடைக்கும் பலன் நிகரில்லை என்பதை திருமூலர் "பகரு ஞானி பகலூண் நிகரில்லை என்பது நிச்சியந்தானே" என்ற பாடல் வரி மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

விருந்தோம்பல் பண்பு தொண்டாகும் போது கிடைக்கப் பெறும் பேற்றினைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் சில நாயன்மார்கள் வாயிலாக உலகறியச் செய்துள்ளார். பெரியபுராணம் கூறும் அறுபத்து மூவரில் பாதிப்பேர் வரையில் விருந்தோம்பலை தமது குறிக்கோளாகக் கொண்டவர்களாவர். அவர்கள் விருந்தோம்பலை உயரிய தொண்டாகச் செய்து எமக்கு வாழ்ந்து காட்டிய பெருந்தகைகளாவர். இவ்வடியார்களில் திருக்குறிப்புத் தொண்டர் நாயனார், அப்பூதியடிகள், இடங்கழியார், சிறப்புலி நாயனார், முனையடுவார் நாயனார் ஆகியோர் அன்னம் பாலிப்பதை குறிக்கோளாகக் கொண்டவர்களில் தலையாயவர்கள். திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் தன் பசி தீர்க்கும் முன்னர் பிறர் பசி தீர்க்கும் ஈர நெஞ்சத்தவர். அடியாரின் பசிப்பிணியை போக்கும் பொருட்டு மழையை கூட பொருட்படுத்தாமல் தன் வயலில் அன்று விதைத்த நெல்லைக் கொண்டு அமுதாக்கியவர்.

தான் காணும் உயிரினங்களையெல்லாம் சிவமும் சக்தியுமாக கண்டு பரவசமடைந்தவர் அப்பூதியடிகளாவார். இவர் சிவனடியார்களிற்கு அமுதூட்டி அகம் மகிழ்பவர். களைத்து வருவோர்க்குத் தண்ணீர் பந்தல்களும் பசியால் வாடுவோருக்கு மடாலயங்களும் நிறுவியவர். தன் மகன் மரணித்ததையும் பொருட்படுத்தாமல் அப்பர் சுவாமிகளிற்கு அமுது செய்வித்த உள்ளம் இவரது விருந்தோம்பற் பண்பை எடுத்துக்காட்டுகின்றது. இச்செயல் தன் துன்பத்தை விட விருந்தோம்பலை தலையாயக் கடமையாகக் கருதியமையைக் காட்டுகின்றது. அப்பூதியடிகளின் விருந்தோம்பல் பண்பை,

"கடிதுவந்துமுது செய்யக் காலம் தாழ்க்கின்றது என்றே
அடிசிலும் கறியும் எல்லாம் அழகுற அணையவைத்துப்
படிஇல்சீர்த் தொண்டனார் முன்பனிந்தெழுந்து
அமுதுசெய்துஎம் குடிமுழு துஉய்யக் கொள்வீர்"

என பெரியபுராணம் கூறுகின்றது. இறைவன் தமக்குப் பொருளைத் தந்தது அடியார்களுக்கு ஈவதற்கே எனக் கொண்டு எல்லாப் பொருட்களையும் அடியார்களது உடைமையாக்கி அடியார்கள் கேட்கும் முன் குறிப்பறிந்து கொடுத்து விருந்தோம்பலைத் தலையாய பணியாகக் கொண்டவர் சிறப்புலி நாயனார் ஆவார். இவரது விருந்தோம்பல் சிறப்பை பெரியபுராணம்,

"...நாளும்நல் லமுதம் ஊட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள் தங்கி நிதி மழை மாரி போன்றார்."

எனக் கூறுகின்றது. மேலும் சிற்றரசரான இடங்கழியார் நாயனாரும் விருந்தோம்பலை தன் கடமையாகச் செய்தவராவார். இவரது பணியை பெரியபுராணம் பின்வருமாறு கூறுகின்றது.

"எண்ணில் பெரும் பண்டாரம் ஈசனடியார் கொள்ள
உண்ணிறைந்த அன்பினால் உறுகொள்ள மிகவூட்டித்.."

போர் வீரனான முனையடுவார் நாயனாரும் தன் வாழ்நாள் முழுவதும் விருந்தோம்பல் செய்தார் என்றும், "யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை ஐயமில்லை" என்று வீட்டிற்கு வந்த விருந்தினருக்குத் தன் மனைவியைக் கொடுக்க முன் வந்தவர் இயற்பகை நாயனார் என்றும், எவரும் கொடுக்க முன்வராத தன் மகவை அறுத்து கறி சமைக்க முன் வந்தவர் சிறுதொண்டர் எனவும் பெரியபுராணம் கூறுகின்றது.

பெண்களும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கியமையை இந்து இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். சிவனால் 'அம்மையே' என அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் தன் வீட்டிற்கு வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று அமுதளித்த தொண்டினை தன் வாழ்வின் குறிக்கோளாகச் செய்தவராவார். மானற்கஞ்சார் நாயனாரின் மகளின் திருமணத்திற்கு விருந்தாய் வந்திருந்த அடியவர் மணப்பெண்ணின் கூந்தலை கேட்க, அந்நாயனாரின் மகள் தாம் தன் தந்தையின் உடைமைப் பொருள் என்று எண்ணியமையால் தன் தந்தையின் செயலுக்குத் துணை நின்றாள். இப்பெண்ணே பின்பு ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் துணைவியாகி விருந்தோம்பற் பண்பில் உயர்ந்து விளங்கினாள். ஔவையார் தனது பாடலில் குணம் இல்லாத பெண்களும், விருந்து இல்லாத வீடும் வீண் என்பதை, "குணமில்லாப் பெண்டு விருந்தில்லா வீடு விழல்" என்று உரைக்கின்றார்.

இவ்வாறு இந்து இலக்கியங்களில் விருந்தோம்பற் சிந்தனைகள் நிறைவாகக் காணப்படுகின்றன. இந்து இலக்கியங்கள் சமயம் சார்ந்த கருத்துக்களை மட்டும் முன்வைக்காது மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து முத்தியின்பம் பெறுவதன் பொருட்டும், பிறர் நலன் பேணுவதன் பொருட்டும் அதற்குரிய வழிவகைகளைக் கூறியுள்ளது. அதில் ஒன்றாகக் கருதப்படும் விருந்தோம்பல் பற்றி இந்து இலக்கியங்கள் நிறைவாக தன் கருத்துக்களை முன்வைத்துள்ளது. அதற்காக பலரது வாழ்வியல்சம்பவங்களையும்உதாரணங்காட்டியுள்ளது. அமிர்தமாக இருந்தாலும் விருந்தினர்க்கு கொடுத்துவிட்டு உண்பது தான் நமது மரபு என்பதை இந்து இலக்கியங்கள் உலகறியச் செய்கின்றன. அந்தவகையில் விருந்தோம்பற் சிந்தனைகளை முன்வைப்பதில் இந்து இலக்கியங்கள் பிரதான இடம் வகிக்கின்றது எனலாம்.

உசாத்துணைகள்


1. கந்தசாமி, ந., (2007), பன்னிரு திருமுறைகள், மெய்யப்பன் பதிப்பகம் 53 - புதுத்தெரு சிதம்பரம்.
2. ஞானசம்பந்தன், அ.ச., ஞானசுந்தரம், தெ., (2002), கம்பராமாயணம், கங்கை புத்தக நிலையம் 13, தீனதயாளு தெரு தியாகராய நகர், சென்னை - 600 017.
3. மனோகரன், த., (2007), இந்து நாகரிகம், அகில இலங்கை இந்து மாமன்றம்.
4. ராமநாதன், அரு., (1996), சிவம்மஹா புராணம், 35, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம் சென்னை - 600 024.
5. ஜோதி, வ., (1995), வியாச பாரதம், வர்த்தமானன் பதிப்பகம் ஏ. ஆர். ஆர் காம்ப்ளெக்ஸ் 141, உஸ்மான் சாலை தி. நகர் சென்னை - 17.
6. https://ta.m.wikipedia.org/wiமவைிருந்தோம்பல்.
7. http://dmk.in/tamil/hospitality
8. http://www.muthukamalam.com/essay/literaturep113.html




# இந்துப் பண்பாட்டு இயங்கியலில் 'தாலி'யின் முக்கியத்துவம்



ந.சுபராஜ்
விரிவுரையாளர், இந்துநாகரிகப்பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

இந்துக்களின் திருமண நடைமுறைகளில் சீதனம் வழங்குதல் முக்கியமானதொரு நிகழ்வாகவே கருதப்படுகின்றது. ஆனால் இந்து மத மூல இலக்கியங்கள் எவற்றிலும் சீதனம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. காலத்திற்கு காலம் மனிதர்கள் தமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே சீதனம் எனும் வரன்முறையை அமைத்துக் கொண்டனர். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை சீதனம் வழங்குதல் பெரும்பாலான இடங்களில் இடம் பெற்று வருகின்றது. இங்கு இந்துக்களின் திருமணங்களில் இச்சீதனம் வழங்கும் நிகழ்வு அவர்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. சீதனத்தில் 'தாலி' முக்கிய பொருளாக பங்கெடுக்கின்றது.

**தாலி - பெயர் விளக்கம்:**

தாலி என்பதற்கு "கணவன் மணந்ததற்கு அடையாளமாக மனைவியின் கழுத்தில் கட்டப்படும் அடையாள உரு" என விளக்கமளிக்கலாம். தால் என்பது தொங்குதல் எனப் பொருள் கொள்ளப்பட்டு, தாலி என்பது தொங்கவிடப்படும் அணி என ஆய்வாளர்கள் விளக்கமளிக்கின்றனர்.[1] இதனால் பண்டைய தமிழகத்தில் எல்லா அணிகலன்களும் தாலி என்றே பொதுப் பெயரால் அழைக்கப்பட்டுள்ளன. இதைவிட தாலம் என்ற சொல்லிலிருந்துதான் தாலி என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும் என்கின்றனர் சில அறிஞர்கள்.[2] தாலம் என்பது பனையைக் குறிக்கின்றது எனவும் பண்டைய காலத்தில் பனையோலையினால் செய்த ஒன்றையே மணமகன் மணமகள் கழுத்தில் கட்டி வந்தபடியால் இதற்குத் தாலி என்ற பெயர் வந்தது எனவும் விளக்கமளிக்கின்றனர்.

தாலி என்ற சொல்லிற்குப் பதிலாக மங்கலநாண் என்ற சொல்லையே தமிழர்கள் முன்பு பயன்படுத்தியுள்ளனர். கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் தாலி கட்டும் வழமை இருந்திருக்கவில்லை. அதன் பின்பே தாலி கட்டும் மரபு உருவாகியிருக்கலாம். 11ஆம் நூற்றாண்டிலேயே தமிழர் திருமணச்சின்னம் என்ற பெயரில் தாலி பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றது[3] என தமிழர் திருமணம் தொடர்பாக ஆராய்ந்தவர்கள் சிலர் குறிப்பிடினும் தாலி என்பதும் முற்காலத்தில் மங்கலநாண் எனும் பெயரில் அணியப்பட்ட பொருளும் ஒன்றாகவே இருக்க வேண்டும். இவை இரண்டும் திருமணத்தின் அடையாளச்சின்னமாகவே கருதப்பட்டிருக்கின்றன. ஆனால் பழந்தமிழகத்தில் தாலி என்ற பெயரில் இது வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது திண்ணம்.

தாலிஎன்றசொல்பழங்காலத்தில்வேறு அணிகலன்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது என முன்பு கண்டோம். இருப்பினும் தொங்குதல் எனும் கருத்தினைக் கொண்ட தாலி என்ற சொல் திருமணச் சின்னத்திற்கும் பயன்படுத்தப்படுகின்ற காரணஇடுகுறிப் பெயராக மாற்றமடைந்திருக்க முடியும்.

**தாலியின் வகைகள்**

திருமண ஜாதகப் பொருத்தத்தில் தாலிப் பொருத்தம் முக்கியமானது. அது ஆயுளுடன் சம்பந்தப்பட்டது. உத்தம பொருத்தமாக இருந்தால் பொதுவாக பிள்ளையார் தாலி அணிவார்கள். மத்திம பொருத்தமாக யாரை குலதெய்வமாக வணங்குகிறார்களோ அந்த தெய்வத்தை தாலியாக செய்து போட்டால் ஆயுள்தோஷம் அகன்று விடுகின்றது. இப்படித்தான் தாலி செய்ய வேண்டும் என்று ஒரு விதியும் கிடையாது. தாலி வடிவங்களை வைத்துக் கொண்டு அவற்றைப் பிள்ளையார் தாலி (தும்பிக்கை வடிவம்), சிவன் தாலி (இலிங்கவடிவம்), அம்மன் தாலி (அம்மன் வடிவம்), தேர்த்தாலி (தேர் வடிவம்), இராமர் தாலி ( சங்கு சக்கரம் வடிவம்), பொட்டுத்தாலி என வகைப்படுத்தலாம்.

**தாலி அறிவியல்**

மஞ்சளானது தோலுக்கு மென்மையும் அழகும் கொடுக்கும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மையுள்ளது. மார்பில் உயிரோட்டம் உள்ள இதயத்தில் இத்தாலி தட்டுப்பட்டுக் கொண்டிருக்க அது சீனமருத்துவமான அக்யூபஞ்சர் முறைபோல தொழிற்படுகின்றது.

**தாலி தத்துவம்**

மாங்கல்யச் சரடானது ஒன்பது இழைகளைக் கொண்டது. ஒவ்வொரு இழையும் ஒவ்வொரு நற்குணத்தைக் குறிக்கின்றது. தெய்வீகக் குணம், தூய்மைக் குணம், மேன்மை, தொண்டு, தன்னடக்கம், ஆற்றல், விவேகம், உண்மை, உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளுதல் ஆகிய குணங்களைக் ஒரு பெண் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே அவள் கட்டிக் கொள்ளும் தாலியில் ஒன்பது இழைகள் உருவாக்கப்படுகின்றது.

**தமிழர் திருமணத்தில் தாலி:**

1954இல் தமிழ் ஆய்வாளர்கள் மத்தியில் தமிழர் திருமணத்தில் தாலி பற்றிய ஒரு பெரிய விவாதமே இடம் பெற்றுள்ளது. பெரும்பாலான அறிஞர்கள் தாலி தமிழர்களின் அடையாளமன்று என வாதிட்டனர். கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் தாலி என்ற பேச்சே கிடையாது, அதன் பின்பே தாலி கட்டும் மரபு உருவாகியிருக்கலாம் என இவர்கள் வாதிடுகின்றனர். ஒரு சில அறிஞர்களே தமிழர்களின் தொல் அடையாளம் தாலி என வாதிட்டனர்.

தொல்பழங்குடி மக்கள் பிள்ளைகளை தீயவை அணுகாமல் காப்பதற்கு பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருட்களை கட்டும் வழக்கத்தை கொண்டிருந்தனர். இன்றும் அந்த வழமையைக் காணமுடிகின்றது.[4] பழங்காலத்தில் இவ்வாறு கட்டப்பட்ட கயிற்றினை "ஐம்படைத்தாலி" எனக் குறிப்பிட்டனர்.

"முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத்திங்கள்!
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி"[5]

"அவன் கண்ணி! தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே"[6]

இதுபோல் ஒரு ஆண்மகன் தான் கொன்ற புலியின் பல்லை எடுத்து வீரத்தின் சின்னமாக தன் கழுத்தில் கோர்த்துக் கட்டிக் கொண்டால் அது "புலிப்பல் தாலி" எனப்பட்டது. பழந்தமிழ் இலக்கியங்களில் இதற்கான ஆதாரங்களை அவதானிக்கலாம்.

"புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி"[7]
"புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறார்"[8]
"இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை மனவுகோத்து"[9]

காப்பிய காலத்தில் கூட தாலி கட்டும் மரபு இருந்ததாகத் தெரியவில்லை. திருமணநடைமுறைகள் பற்றிக் கூறும் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற காவியங்களில் தாலி பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை. பல்லவர்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த நாச்சியார் பாடிய திருமொழியில் தமிழர் திருமணம் பற்றி விரிவாக பாடப்பட்டுள்ளது. இருப்பினும் அதில் தாலி பற்றிய குறிப்புகள் வரவில்லை.[10] உண்மையில் இத்தகைய பழந்தமிழ் இலக்கியங்களில் தாலி எனுஞ்சொல் திருமணத்தில் பிற்காலத்தில் கட்டப்படும் தாலியைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படவில்லை. பொதுவாக கழுத்தில் தொங்கும்வகையில் கட்டப்படுவதெல்லாம் தாலி என்றழைக்கப்பட்டிருக்கின்றன.

சற்றுப் பிந்தைய காலத்தில் எழுந்த இலக்கியங்களில் தாலி என்ற சொல் திருமண மங்கலநாணையே குறிக்கப்பயன் பட்டது. தாலி அணிவிக்கும் காட்சியை அப்படியே கூறுவதாக அமையும் முதல் தமிழ் நூல் கந்தபுராணமாகும்.

"அண்டர் போற்ற அயன் அங்கு விதித்த
வாசின் மங்கல நாணினை அன்னாள்
கண்ட மீது தரித்து அளகத்தோர்..."[11]

திருவிளையாடற் புராணத்தில் சிவன் - உமை திருமணத்தின் போது,

"சடங்குநூல் கரைந்த ஆற்றான்
முற்ற மங்கலநாண் சாத்தி
முழுதுலகு ஈன்றாள் செங்கை பற்றினான்"[12]

என மங்கலநாண் அணிவிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இதுபோல் பேரூர்ப் புராணத்தில்,

"சுந்தர அணையின் வைகிச் சுடர்ந்தமங் கிலிய நன்னாண்
சுந்தரங் கவினயாத்தான் களித்தன உலகமெல்லாம்"[13]

என மங்கல நாணாகிய தாலி அணிவிக்கும் நிகழ்வை எடுத்துக்காட்டுகின்றார் கச்சியப்ப முனிவர்.

திருமணத்தின் இறுதிச்சடங்காகக் மங்கலநாணாகிய தாலி கட்டும் வழமையை இச்செய்யுள் சுட்டிநிற்கின்றது. தாலி எனும் வார்த்தையை நேரடியாகப் பயன்படுத்தும் கச்சியப்பமுனிவர்,

"தண்ணிய மலர்மேலண்ண நமுன்முறை வளர்ப்பத் தாலி
புண்ணிய மலர்ந்தாலண்ண..... "[14]

எனுஞ் செய்யுளில் அதனைத் தெளிவு படுத்துகின்றார்.

தாலி தங்கத்தில் இருப்பதை விட மஞ்சல் கயிறாக இருப்பது சிறந்தது. தாலி மஞ்சள் கயிற்றில் அல்லாமல் தங்கத்தினால் அணியப்படும் போது உண்டாகக் கூடிய சிக்கல்கள்:

மூன்று முடிச்சு போடப்படுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமற் போகின்றது - மூன்று முடிச்சினை ஒரு ஆண் இடுவதற்கான காரணம் முதல் முடிச்சு பெண் தன் ஒழுக்கத்தில் உயிராக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இரண்டாம் முடிச்சு கணவனை மதித்து அவனது உயர்வுக்கு காரணமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் மூன்றாம் முடிச்சு நல்ல குழந்தைகளைப் பெற்று சிறந்த தாய் எனும் பெயர் பெற வேண்டும் என்பதற்காகவும் போடப்படுகின்றன. உண்மையில் மூன்று முடிச்சு இடப்படுவதற்கான காரணங்களை எந்நூலும் குறிப்பிடவில்லை. மூன்று முடிச்சின் தத்துவத்தை பலரும் வெவ்வேறாக விளக்கமளிப்பர். அவையாவும் கிருஹஸ்தனின் ஒழுக்கத்தை நியமப்படுத்தவே உருவாக்கப்பட்டவை. இவற்றை நினைத்து ஒரு ஆண் ஒரு பெண்ணின் கழுத்தில் மஞ்சள் கயிறைக் கட்டும் போது அவற்றின்படி தான் ஒழுகவேண்டும் என்பதனை உள்ளத்தில் ஆழமாக பதித்து விடுகின்றான். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் வரும்போது தாலியின் முடிச்சுகள் அவனுக்கு அவற்றினை ஞாபகப்படுத்தலாம். அதன் மூலம் குடும்பத்தில் சிக்கல்கள் பெரிதாகாமல் நீங்கிவிட வாய்ப்பிருக்கின்றது. ஆனால் தங்கத்தில் தாலி அணியப்பட்டால் இந்த சந்தர்ப்பங்கள் இல்லாமற் போகின்றன.

கணவனின் குடும்பத்தாருடன் ஏற்படக் கூடிய ஐக்கியத்தினை இது குறைக்கின்றது. அதாவது மஞ்சள் கயிற்றினால் கட்டும்போது முடிச்சுக்களை இட ஆணின் சகோதரிகள் உதவி செய்வர். இது குடும்பங்களின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும். ஆனால், தங்கத்தில் கட்டப்படும் போது இது இல்லாமல் போகின்றது.

## முடிவுரை

திருமணத்தில் கணவன் - மனைவியின் அன்பின் அடையாளமாக விளங்கும் தாலி கணவன், மனைவி பந்தத்தை வலுவுடையதாக்கி குடும்ப உறுதிப்பாட்டிற்கு அடித்தளமிடுகின்றது. தாலி சமூக, பண்பாட்டு, சமய வெளிப்பாடாக அமையும் சின்னமாகும். கணவன் மனைவியிடையே உருவாகும் ஆழமான அன்பையும் விருப்பையும் கணவனின் நீண்ட ஆயுளையும் இது குறித்து நிற்கின்றது. எனவே இந்துக்களின் பண்பாட்டு இயங்கியலில் 'தாலி' முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

## அடிக்குறிப்புகள்

1. பரமசிவன்,தொ., 2014, தாலியின் சரித்திரம், ப.16
2. தமிழர் திருமணம், ப.103
3. மே.கூ.நூ., ப.48
4. ஆய்வாளர் அவதானம்
5. அகம்: 54
6. புறம்: 77
7. அகம்: 54
8. புறம்: 374
9. பெரியபுராணச் செய்யுள்
10. பரமசிவன்,தொ., 2014, தாலியின் சரித்திரம், ப.16
11. கந்தபுராணச் செய்யுள்
12. திருவிளையாடற்புராணம்: 784
13. பேரூர்ப்புராணம்:127
14. மே.கூ.நூ:110



# குட்டிப் பிள்ளையாரும் செம்மாங்கனியும்

சிறுவர் ஒளி



***எமக்கு முதற் தெய்வம் - உலகம் எமது தாய் தந்தையரே. அவர்களை என்நாளும் போற்ற வேண்டும். அவர்களின் வாழ்த்தும் ஆசியும் ஒன்றே போதும் நாம் வெற்றியடைய என்ற பெரும் உண்மையை உணர்த்த தனது விவேகமான செய்கையினால் மாம்பழத்தினை வென்ற பிள்ளையாரின் இனிமையான கதை இது.***

மிக நீண்ட காலத்துக்கு முன்னர், சகல உலகங்களுக்கும் இறைவனாகிய சிவபெருமான் , தமது சக்தியாகிய உமாதேவியாருடன், கைலாயத்திலே அமர்ந்திருந்தார். சிவகணங்கள், பக்தர்கள், முனிவர்கள் அவர்களைச் சூழ்ந்து வணங்கி நின்றார்கள்.

பாலமுருகனும், விநாயகரும் சற்றுத் தள்ளி விளையாடிக்கொண்டு இருந்தார்கள்.

"நாராயண,... நாராயண,... " என்று இனிமையாகப் பாடிக்கொண்டே, நாரத முனிவர் அங்கே தோன்றினார்.

அவரது ஒரு கரத்தில் மகதி என்னும் வீணை இருந்தது. மறு கரத்தில் ஓர் அழகிய மாம்பழம்இருந்தது.

தங்க நிறத்தில் பளபளத்த அந்த மாம்பழத்தின் இனிய நறுமணம் கைலாயம் முழுவதும் பரவியது.

சிவபெருமான் முன் வந்து நின்று, அவரை வணங்கினார் நாரதர்.

"வா, நாரதா!.... வா. உனக்கு எங்கள் ஆசீர்வாதங்கள் ! " என்று ஆசீர்வதித்தார் சிவபெருமான்.

"நன்றி இறைவா. ... என் கையிலிருப்பது அதிசய சக்திகள் நிறைந்த அபூர்வ மாம்பழம். எனது தந்தையாராகிய பிரம்ம தேவர் எனக்கு இதைத் தந்தார். இந்தப் பழத்தை நான் உண்பதை விட, சகல உலகங்களுக்கும் அதிபதியாகிய தாங்கள் உண்பதே சிறந்தது. ஆதலால், இந்த மாம்பழத்தைத் தங்களிடம் தரவே வந்தேன்" என்று பயபக்தியுடன் கூறிய நாரதர், அந்த மாம்பழத்தை இறைவனாரின் பாதங்களில் வைத்தார்.



பழத்தை ஏற்றுக்கொண்டு புன்னகை புரிந்தார், சிவபெருமான். அதனை உமாதேவியாரிடம் நீட்டினார்.

"தேவி,... சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்பது வேதவாக்கு. நீ இல்லாமல் நான் இல்லை. ஆகவே, இப்பழத்தை நீயே சாப்பிடு...." என்றார் சிவபெருமான்.

உமாதேவியார் அன்புடன் சிரித்தார்.

"இறைவா, உம்மோடு சரிபாதியாக கலந்து விட்டவள் நான். இதைவிட எனக்கு வேறெதுவும் தேவையில்லை. ஆகவே, இப்பழத்தை நம் பிள்ளைகளுக்கே கொடுத்து விடலாம்." என்றார் உமாதேவியார்.

விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள் இருவரும் ஓடோடி வந்து தமது தாய் தந்தை முன் நின்றார்கள்.

"அம்மையே, அப்பா.... பழத்தை எனக்கே தாருங்கள் "..... என்று பாலமுருகன் முந்திக்கொண்டு கையை நீட்டினார்.

"அம்மா, அப்பா, ... நான்தான் மூத்த பிள்ளை. ஆகவே, பழத்தை எனக்கே தாருங்கள்" என்று தும்பிக்கையை நீட்டினார் பாலவிநாயகர்.

"நாதா, ... பழத்தை இரண்டாக வெட்டி, இருவருக்கும் கொடுத்து விடுங்கள் " என்று உமாதேவியார் இரக்கத்தோடு கூறினார்.



சிவபெருமான் சிரித்தார். "இல்லை, தேவி. ... இது அதிசய சக்திகள் நிறைந்த பழம். இதனைப் பங்கு போடக் கூடாது. ஒருவருக்குத்தான் கொடுக்க வேண்டும். இப்பழத்தைப் பெறும் தகுதி நம் பிள்ளைகளில் யாருக்கு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதற்கு ஒரு பரீட்சை வைக்கப் போகிறேன்." என்றார், சிவபெருமான். பின்னர், தமது பிள்ளைகளை நோக்கினார்.

"பிள்ளைகளே, தேவலோகம், பூவுலகம், பாதாள உலகம் ஆகிய மூன்று உலகங்களையும் முதலில் சுற்றி வருபவர் யாரோ, அவருக்கே இந்தப் பழம் கிடைக்கும்" என்று கூறினார்.

இரண்டு பிள்ளைகளும் தந்தையின் சொல் கேட்டு, அவரை வணங்கினார்கள்.

"அப்படியே ஆகட்டும் தந்தையே ...." என்று கூறினார்கள்.

இளையவரான பாலமுருகன் வேகம் மிகுந்தவர். ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல், தமது மரகத மயில் வாகனத்தின் மீது ஏறி அமர்ந்தார். அந்த அழகிய மயில் அவரைச் சுமந்துகொண்டு, "விர்" ரென்று கிளம்பி விண்ணில் பறந்தது.

தொந்திப் பிள்ளையாரின் வாகனமான மூஞ்சூறு ( பெருச்சாளி) ம் உலகை வலம் வருவதற்குத் தயாராக, தனது வாலைச் சுழற்றியபடி அருகே வந்து நின்றது. ஆனால், பிள்ளையார் அதன்மீது ஏறி அமரவில்லை. ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினார்.

அதே வேளையில், முருகப் பெருமானைச் சுமந்துகொண்டு, மயில் வாகனம் தேவர் உலகம், பூவுலகம், பாதாள உலகம் முதலிய உலகங்களையெல்லாம் வலம் வந்துகொண்டிருந்தது. அந்தந்த உலகங்களில் வாழும் தேவர்கள், மக்கள், அசுரர்கள் யாவரும் முருகப் பெருமானை வணங்கி, மலர் தூவி வாழ்த்தினார்கள்.



சிந்தித்துக்கொண்டிருந்த பிள்ளையாருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. " சகல உலகங்களுக்கும் அதிபதி, சிவபெருமான்தான். அவரது சக்தியாக விளங்குபவர், அன்னை உமாதேவியார். எல்லா உயிர்களும், எல்லா உலகங்களும் இந்த இருவருள்ளும் அடக்கம். ஆகவே, அம்மையப்பனாகிய சிவபெருமானையும், உமாதேவியாரையும் சுற்றி வந்தால், மூன்று உலகங்களை மட்டுமல்ல, அண்ட சராசரங்களையும் சுற்றி வந்ததாகத்தான் அர்த்தம்."

இவ்வாறு சிந்தித்து முடிவுகண்ட பிள்ளையார், பயபக்தியுடன் தமது அன்னையாகிய உமாதேவியாரையும், அப்பனாகிய சிவபெருமானையும் சுற்றிவந்து வணங்கி நின்றார்.

அவரது புத்திக் கூர்மையையும், பக்தியையும், பெற்றோர்மேல் அவர் கொண்ட பாசத்தையும் கண்டு மகிழ்ந்த சிவபெருமான், அதிசய மாம்பழத்தைப் பிள்ளையாருக்கே வழங்கி ஆசீர்வதித்தார்.

பிள்ளையாரும் தமது பெற்றோரை மீண்டும் வணங்கி அப்பழத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

**"அன்பான பிள்ளைகளே, உங்கள் பெற்றோரே உங்கள் முதற் தெய்வங்களும், முழு உலகமும் ஆவர். பாலவிநாயகரைப் போலவே நீங்களும் உங்கள் பெற்றோரை மதித்து, போற்றி வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.**

**அவர்களது ஆசீர்வாதத்துடன் இவ்வுலகத்தில் நீங்கள் முழு வெற்றி அடைய முடியும் என்பதை எப்போதும் மறவாதீர்கள்."**

(பெரியபுராணக் கதைகள்)



# திருஞானசம்பந்தர் பாடல்களில் மாயை

திரு.எஸ்.முகுந்தன், விரிவுரையாளர் - இந்து நாகரீகத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சைவசித்தாந்தம் என்பது வெறுமனே மெய்கண்ட சாத்திரங்களில் தொடங்கிப் பண்டார சாத்திரங்களுடன் நிறைவுற்ற தத்துவக் கொள்கை மட்டுமன்று. அது தமிழ்நாட்டிற்கே உரித்தான தனிப்பெரும் தத்துவமுமன்று. எவ்வாறாயினும் மெய்கண்ட சாத்திரங்களின் பிரகாரம் சைவசித்தாந்தக் கொள்கையைச் சாதிப்பதற்குரிய பிரமாண நூல்கள் என்கின்ற தகுதிப்பாட்டைத் திருமுறைகள் தம்மகத்தே கொண்டுள்ளன. அவற்றில் முதல் மூன்று திருமுறைகளாகத் திருஞானசம்பந்தரின் 4158 தேவாரங்கள இடம்பெற்றுள்ளன.

"விளையாததோர் பரிசில்வரு பசு பாச வேதனை ஒண் தளையாயின தவிரவ்வரு தலைவனது சார்பாம்"[1] எனத் திருஞானசம்பந்தரும் முப்பொருள் உண்மையைச் சாதிக்கும் சைவசித்தாந்த தத்துவத் தளத்தில் காலூன்றியவராகத் தன்னை வெளிப்படையாகவே இனங்காட்டிக் கொண்டுள்ளார்.

எனவே இவற்றில் ஆய்வு என்ன வேண்டியிருக்கிறது என்ற வினாவும் எழாமலில்லை.

## ஆய்வு முன்னோடிகளும், ஆய்வின் நோக்கமும்

திருஞானசம்பந்தர் பதிகங்கள் உள்ளிட்ட மூவர் தேவாரங்களில் சைவசித்தாந்தக் கருத்தியல்களை ஆய்வு செய்யும் பனுவல்கள் பல வெளிவந்துள்ளன.

இரத்தினசபாபதியினுடைய "திருமுறைகளில் சைவசித்தாந்த சிந்தனைகள்", "திருமுறைத் தெளிவே சிவஞான போதம்", வெள்ளைவாரணனாரின் "சைவசித்தாந்த சாத்திர வரலாறு", விஜய லக்ஸ்மியின் "Religion and Philosophy of Thevarams" போன்றன இவற்றுட் சிலவாகும்.

மேற்குறித்த நூல்களில் திருஞானசம்பந்தர் பாடல்களில் இழையோடியுள்ள மாயை பற்றிய கருத்துக்கள் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. மேலும் அ.ச.ஞானசம்பந்தனால் தொகுக்கப்பட்ட "மூவர் தேவாரத் திருப்பதிகங்கள்" மற்றும், செங்கல்வராயபிள்ளையால் தொகுப்பாய்வு செய்யப்பட்ட "தேவார ஒளிநெறி" ஆகிய பனுவல்களில் மாயை என்ற வெற்றுச் சொல்லாடலைக் கூட அடையாளங்காண முடியாதுள்ளது. திருஞானசம்பந்தரின் 384 பதிகங்களிலுள்ள 4158 பாடல்களையும் ஒவ்வொன்றாகப் பரிசோதித்துப் பார்த்த போது எனது புத்திக்கெட்டிய வரையில் மாயை என்ற சொல்லாடல் இடம்பெறவில்லை. ஆனால் சைவசித்தாந்தம் தொடர்பான இன்னபிற கருத்தியல்களும், கலைச்சொற்களும் வெளிப்படையாகச் சம்பந்தரால் பதிவு செய்யப்பட்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. ஆனால் மாயை தொடர்பில் இத்தகைய வெளிப்படையற்ற பூடகமான நிலைப்பாட்டினைச் சம்பந்தர் கொண்டிருந்தமைக்கான காரணம் யாது? என்கிற ஆசங்கையே இந்த ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டியது எனலாம்.

இந்த ஆய்வுக் கட்டுரையானது உலகசம்பந்தம், பசுசம்பந்தம், பதிசம்பந்தம் என மூன்று தளங்களில் திருஞானசம்பந்தர் பாடல்களில் இழையோடியுள்ள "மாயை" பற்றிய கருத்துக்களை இனங்கண்டுகொள்ள முயல்கிறது.

## உலக சம்பந்தம்

பகுதிகளையுடையதும் சடத்துவமானதுமான பொருள் அறிவுடையபொருளாகவும் அநாதியாகவும் ஆகிவிடாது. பௌதீகப் பிரபஞ்சம் இத்தகைய தன்மையுடையது. ஆகவேதான் உலகம் நிலைக்களமாவதற்கு உரிய மூலப்பொருளாக, உபதானமாக "மாயை" யை சைவசித்தாந்தம் முன்மொழிகிறது.

"என்னையிது எனில் உலகுக்கு உபதானமில்லை"[2]

மாயை என்ற பதம் சைவசித்தாந்த அடிப்படையில் ஒடுங்குதல், தோன்றுதல் அல்லது பிரபஞ்ச ஒடுக்கத்திற்கும், தோற்றத்திற்கும் காரணமாவது எனப் பொருள்படும். உலகமானது மாயையில் தோன்றி மாயாகாரியங்களாக நிலை பெற்று மாயையில் ஒடுங்குகிறது. இதனையே,

"தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழுலதென்றே சாற்றிடும் உலகம் என்ப"[3] என்கிறது சிவஞானசித்தியார்.

இதனையே

"ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற நாதியாய்"[4] என்கிறார் திருஞானசம்பந்தர்.

மேலும்,

"விரிந்தனை குவிந்தனை விழுங்குயிருமிழ்ந்தனை"[5]

என்கிற தேவார அடியில் மாயையின் இச்செயற்பாட்டை இறைவனை முன்னிலைப்படுத்தி விவரிக்கிறார்.

24 கரட் சுத்த தங்கம் செம்பைச் சேர்த்தபிறகே விரிக்கவும் வளைக்கவும் குவிக்கவும் ஏதுவாகும். அதுபோல சுத்தசைதன்ய வஸ்தாகிய பதிப்பொருள் தன்னியல்பிலே உலகாக விரிவதும் குவிவதும் தர்க்க முரண்பாடான விடயங்களாகும். ஆக இங்கே குறிப்பிடப்படும் விரிதல் குவித்தல் என்பது மாயையுடன் தொடர்புடைய விளக்கமேயாகும். இதனை இரண்டு நிலைகளில் வாதிடலாம்.

"விரிந்தனை" என்பது சுத்தமாயையிலிருந்து தோன்றும்



காரியங்களைச் சுட்டும். இதனை,"விருத்தி" என்று சைவசித்தாந்திகள் குறிப்பிடுவர்.

"குவிந்தனை" என்பது பிரகிருதி மாயையிலிருந்து தோன்றும் சிருட்டியாகும். இதனை சமுதாயம் / சமுச்சயம் என்று சைவசித்தாந்திகள் குறிப்பிடுவர். சமுச்சயம் என்பதும் கூட்டம் / குவிதலையே சுட்டுவது. ஆக முதலையும், முடிவையும் கூறியதிலிருந்து இடைப்பட்டதான அசுத்தமாயையின் சிருஷ்டியாகிய பரிணாமத்தையும் இவற்றுள் அடக்கினார் என்பது கூறாமலே விளங்கும்.

அடுத்த சொல் "விழுங்குயிர் உமிழ்ந்தனை" என்பதாகும்.

சைவசித்தாந்தக் கொள்கைப்படி உயிர்கள் அநாதியானவை அழிக்கப்படவோ அல்லது விழுங்கப்படவோ, தோற்றுவிக்கப்படவோ அல்லது உமிழப்படவோ இயலாதவை.

முதற்காரணமாகிய மாயையினுள் ஒடுக்கப்பட்டிருந்த அல்லது விழுங்கப்பட்டிருந்த தனு, கரண, புவன போகங்களை சிருஷ்டியின் போது உமிழ்வதன் மூலமாக (தோற்றுவித்தல் அல்லது பரவச்செய்தல் மூலமாக) பல்வேறு யோனிபேதங்களில் தனு, கரண, புவன போகங்களை உயிர்கள் பெறுவதையே "விழுங்குயிர் உமிழ்ந்தனை" என்ற சொற்றொடர் குறித்து நிற்கிறதெனலாம். சித்தாந்த மரபுப்படி முட்டை, வித்து, வியர்வை, கருப்பை ஆகிய நான்கு ஊடகங்களில் 84 நூறாயிரம் யோனிபேதங்களில் உயிர்கள் உமிழப்படுகின்றன. இதனை

"ஏற்றியொரு தொகைதன்னில் இயம்புவர்கள் யோனி

எண்பத்து நான்கு நூறாயிரமென்றெடுத்தே"[6] எனச் சிவப்பிரகாசம் குறிப்பிடுகின்றது.

திருஞான சம்பந்தரும் இவ்விடயத்தை மிகத்தெளிவாக,

"உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிரைசேரப்படைத்து......"[7]

எனக் குறிப்பிடுவதும் சிந்திக்கற்பாலது.

**பசுசம்பந்தம்**

சுத்த, அசுத்த, பிரகிருதி மாயைகளிலிருந்து வெளிவரும் 36 தத்துவங்களும் அவற்றின் கூறுகளும் உயிர்களுக்கு ஏதோ ஒரு வகையில் அனுகூலந்தருவதற்காகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

சுத்தமாயையின் காரியங்கள் "வைந்தவம்" எனப்படுகின்றன.

கேவலநிலையில் ஆன்மாக்கள் காரிட்ட ஆணவக்கருவறையில் செயலற்றிருந்தபோது அவற்றுக்குச் சிற்றறிவுத் தூண்டலை வழங்கித் தன்னுணர்வு பெறவைத்து வினையாற்றும் வகையில் தூண்டுவது இவற்றின் கைங்கரியமேயாகும்.

இதனையே,

"ஆதியாய் அந்த இருள் ஆகினர் தங்கள் வினை

கோதியார்"[8] என்றும்

"பசு பாச வேதனை யொண் தளையாயின" என்றும் சம்பந்தர் குறிப்பிடுவார்.

"ஒண்தளைை" என்பதில் "ஒண்மை" என்பது புத்திக்கூர்மையைச் சுட்டும். ஆகவே உயிரைப் பற்றியுள்ள தளையேயானாலும் ஓரளவேனும் அறிவு விளக்கத்தினைத் தருகின்ற "மாயை" யைச் சுட்டுவதற்கு "ஒண்தளைை" என்ற சொல் பயன்பட்டது.

அசுத்தமாயா காரியங்கள் மாயேயம் எனப்படுகின்றன. இவை பெத்தநிலையில் உள்ள ஆன்மாக்களின் மல அழுக்கினைப் போக்குவதற்குக் குறித்தளவில் உதவுகின்றன. அழுக்கியல்புடைய உவர்மண், தேற்றாங்கொட்டை முதலியவை துணியின் அழுக்கை வெளுப்பதற்குத் துணை செய்வது போல இவை உதவுகின்றன.

பிரகிருதி மாயையிலிருந்து தோன்றும் பூதாதிகள் ஆன்மாக்களுக்கான வினைப்போக ஸ்தானமாகிய பௌதீகப் பிரபஞ்சத்தைச் சிருட்டிக்கின்றன.

இவ்வாறாக மாயாமலகாரியங்கள் அனைத்தும் சூரியன் வரும்வரையில் சூழ்ந்துள்ள இருளை எதிர்கொள்ள உதவிடும் கைவிளக்குப்போல ஆன்மாக்களுக்கு ஒருவகையான பரிக்கிரக சக்தியாகத் துணை செய்கின்றன. இதனையே,

"விடிவாமளவும் விளக்கனைய மாயை"[9]

என்று திருவருட்பயனும்

"மாயா தனுவிளக்காம் மற்றுள்ளம் காணாதேல்

ஆயாதாம் ஒன்றை"[10]

எனச் சிவஞானபோத வெண்பாவும் சுட்டின. இக்கருத்தினையே

"எளியாய் அரியாய் நிலம்நீரொடு தீ

வெளிமன்னிய துஉ ஒளியாய்"[11]

என்கிறார் சம்பந்தர்.

அல்லது

அசித்துப்பொருள் ஆதலால் எளிமையாகவும் கட்புலனாகவல்ல எண்ணரிய சிருஷ்டிபேதங்களைத் தரக்கூடிய வல்லமை இருந்தாலும் தன்னியல்பிலே அருவமானதாகவும் புலன்களால் அறியமுடியாமல் அரியதாகவும் இருப்பதனால் மாயையானது உயிர்களின் பொருட்டுப் பஞ்சபூதங்களாலமைந்த பிரபஞ்ச இயற்கையைத் தந்துதவி ஒரு விளக்குப்போல ஒளிசெய்து உதவுவதையே இவ்வடிகளால் சம்பந்தர் குறித்துரைத்தார் எனக் கொள்ள இடமுண்டு.

இவ்வாறு மாயை விடிவாமளவும் விளக்காகக் கருதப்படினும் அது ஆன்மாக்களுக்கேயுரித்தான பசுஞானத்தைத் தொழிற்படவிடாது தடுத்துப் பாச ஞானத்தில் இலயித்திருக்க வைக்கிறது. ஆன்மாக்கள் தமது வினைப்போகத்தினை முறைப்படி அனுபவித்துக் கழிப்பதற்காகவே இச்செயன்முறை நிகழ்த்தப்படுகிறது.

"மாயை மயக்கத்தை செய்யுமன்றே"[12]

என அருணந்திசிவாச்சாரியார் இதனையே சுட்டுவார்.

இத்தகைய மாயையின் குணாம்சத்தினைத் திரோதாயி எனப் பெண்ணாற்றலாக உருவகிப்பது சைவசித்தாந்த மரபாகும்.

அந்தவகையில் ஆணவம் ஆகிய நோயால் பீடிக்கப்பட்ட நோயாளி ஆன்மா எனின் அதற்கு வைத்தியன் முதல்வன். மருந்து கன்மம். ஏனெனில் வினைப்போகம் அழியாமல் விடுதலையில்லை. அவ்வாறாயின் மருந்தாகிய கன்மத்தினைப் பக்குவமாக நோயாளியாகிய ஆன்மாவுக்கு ஊட்டுவிக்கவல்ல கனிவான தாதியாக, செவிலித்தாயாக திரோதாயி உருவிக்கப்படுகிறது.

நோயாளியாகிய ஆன்மா மருந்தினை இச்சைப்பட்டு அருந்தும் வகையில் (அனுபவிக்கும் வகையில்)

கவர்ச்சியாகவும், சுவையாகவும் காட்சிப்படுத்தவல்ல மருந்தூட்டுகின்ற சாதனங்களாக மாயாமல காரியங்கள் விளங்குகின்றன.

இதனையே,

"மாயை கைத்தாயாக, மாமாயை ஈன்றிட"[13]

எனத் திருமூலரும்,

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"[14]

என மணிவாசகரும்,குறிப்பிடுவர். இதனையே திருஞானசம்பந்தர்,

"தாதியாயிருப்பர் இவர் தன்மையாரறிவார்
இச்சையாயிருப்பர் இவர் தன்மையாரறிவர்"[15]

எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

**பதிசம்பந்தம்**

தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவிக்கும் செயன்முறையில் பதிப்பொருளுக்கு மாயையின் துணை மிகமிக இன்றியமையாதது.

"மாயைதான் அசித்துருவாய் மருவமாட்டா
அன்னவனும் இது ஒழிய ஆக்கமாட்டான்"[17]

எனச் சிவப்பிரகாசமும் இதனையே குறிப்பிடுகின்றன. இக்கருத்தையே மாயைக்கு இலக்கணம் கூறவந்த சிவஞானசித்தியாரும்,

"நித்தமாய் அருவாய்"என்ற செய்யுளில்
விமலனுக்கோர் சக்தியாய......."[18]

என்று பகர்கிறது.

இதனையே திருஞானசம்பந்தரும்,

"எங்குமாகி நின்றானும் இயல்பறியப்படா
மங்கை பாகங் கொண்டானும்"[19] எனக் குறிப்பிடுவார்.

இயல்பறியப்படா மங்கை என்பது, அருவாய், விமலனுக்கோர் சக்தியாய் நின்ற மாயையைக் குறிக்கிறது.

பதியினைப் பொறுத்தவரையில் மாயையால் விளையும் போக போக்கியங்களால் எந்தப்பயனும் பெறுவதற்கில்லை. தனக்கு எவ்வித பயனும் இன்றி உயிர்களின் பொருட்டால் போகபோக்கியங்கள் தோற்றுவிக்கப்பட பதி நிமித்தகாரணமாக உள்ளது.

இதனையே, திருஞானசம்பந்தர்,

"தான் நல்ல போகத்தன் நல்ல
யோகத்தையே புரிந்தானே"[20]

என்ற அடிகளில் குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

***நிறைவாகச் சில ஊகங்கள்***

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் என்பதிலும் அதன்வழியே பதியின் திருவடிநிழலைச் சேரலாம் என்பதனையும் எப்பொழுதும் வலியுறுத்தத்தவறாத திருஞானசம்பந்தர், அவ்வண்ணம் வாழ வகைசெய்த பிரபஞ்ச இயற்கை தொடர்பான தத்துவார்த்த விடயங்களைப் பேசுகின்ற பொழுதெல்லாம் சைவசித்தாந்தம் பிரபஞ்ச இயற்கை தொடர்பாக மாயைக்கு கொடுத்திருந்த சிறப்புரிமைகளை வெளிப்படையாகப் பேசாமல் இறைவன்மேல் ஏற்றியே பேசியிருக்கிறார்.

தனது பதிகங்களில் ஆணவம், கன்மம் பசு, நாற்பாதங்கள், பதியின் தடத்த, சொரூபநிலைகள், சக்தித்துவம் முதலிய சைவசித்தாந்த எண்ணக்கருக்களை நேரடியாகவே பதிவுசெய்துள்ள திருஞானசம்பந்தர் "மாயை" தொடர்பான சங்கதிகளை இறைவனோடு தொடர்புபடுத்திப் பூடகமாகப் பதிவு செய்திருப்பதாகவே எண்ணத்தோன்றுகிறது.

தான்வாழ்ந்த சமகாலத் தமிழ்நாட்டில் நிலவிய பௌத்த, சமண சமயங்கள் பிரபஞ்சக் கட்டுருவாக்கம், உலகவாழ்வு தொடர்பாகத் தர்க்கரீதியானதும் சிக்கலானதுமான தத்துவக் கோட்பாடுகளை முன்வைத்தன.

"கணபங்கவாதம், அணுவாதம், பரிகாயவாதம், அனேகாந்தவாதம், நியதிவாதம்" போன்றன இதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

இவ்வாதங்கள் அனைத்தும் உலகியற்கையினை இறைவனோடு தொடர்புபடுத்தாமல் சடத்தன்மை உடையதாகவும் இறைவனுடைய ஆணைக்கு உட்படாததாகவும் காட்சிப்படுத்துகின்றன. துன்பம் நிறைந்ததும், சதாமாற்றத்திற்கு இயல்பானதுமான உலகியற்கையே இக்கோட்பாடுகள் பலவற்றின் பொதுத் தன்மையாகவுள்ளது.

சம்பந்தர் இதற்கு நேர்விரோதமான கருத்தியலை முன்வைத்தவராவார்.

உலகை இறைவனின் அருள்சுரக்கும் இடமாகவும் உயிர்வாழ்க்கைக்குப் பயன்பாடு கொண்ட மகிழ்ச்சி நிறைந்த ரம்மியஸ்தானமாகவும் சித்திரிக்க வேண்டியது அவரைப் பொறுத்த வரையில் காலத்தின் கட்டாயமாக இருந்தது.

இதுவே சைவ பக்தி இயக்கத்தின் அரசியலாகவும் இருந்தது.

எனவே பிரபஞ்ச இயற்கையை முற்றுமுழுதாகப் பௌதீக இயல்புடையதாக ஏற்றுக்கொள்வதற்குச் சம்பந்தர் விரும்பவில்லை. இதனை,

"சடங்கொண்ட சாத்திரத்தார்
சாக்கியர் சமணர்குண்டர்"[21]

என்ற அவருடையவாக்கு மூலமே எமக்கு உணர்த்தி நிற்கிறது.

அதேவேளை சடச்சார்புடைய பௌதீக உலகினை முற்றுமுழுதாக இறைச்சார்புடையதாகப் பேசுவதில் உள்ள தத்துவ நெருக்கடியையும் சம்பந்தர் நன்கு உணர்ந்திருந்தார். ஏனெனில் தனது சமய வாழ்வியலுக்கு அப்பால் சம்பந்தர் காலூன்றி நின்ற தத்துவத்தளம் சைவசித்தாந்தமேயாகும். பிரபஞ்ச இயற்கை பற்றிய நிலைப்பாட்டில் சைவசித்தாந்தம் இறைவனை நேரடியாகத் தொடர்புபடுத்தால் "மாயை" யை முன்னிலைப்படுத்தியுள்ளது.

"மாயை" குறித்த சைவசித்தாந்த விளக்கங்கள் பகுதியளவிலேயாயினும் சடச்சார்புடையவை. அதேவேளை சிக்கலானவை. மேலும் "மாயை" பற்றிய

இக் கருத்துரைகள் ஏற்கனவே தமிழகத்தில் அவைதீக மதங்களால் விதைக்கப்பட்டிருந்த உலக நிலையாமை பற்றிய விம்பத்துக்குள் அமுங்கிப் போய்விடலாம் என்ற அச்சமும் சம்பந்தருக்கிருந்திருக்கலாம்.

"குணமறிவுகள் நிலையில பொருளுரை மருவிய
பொருள்களுமில திண்ணம் எனுமிவர் பிணிமொழி"[22]

என்ற தேவார அடிகளில் உலக நிலையாமை

குறித்த பொத்த, சமண சமயங்களின் கொள்கைகளில் சம்பந்தருக்கிருந்த வெறுப்பு நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகையதோர் மும்முனை நெருக்கடியினை லாவகமாகக் கையாண்டதன் வெற்றியே "மாயை" பற்றிய சம்பந்தர் பதிகங்களில் இழையோடியுள்ள இடக்கரடக்கலான சொல்லாடல்களாகும்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கச் சோதிப்பதில்"[23]


நாட்டமற்றவர் போல் உலகத்தவர்க்கு எளிமையான, மகிழ்ச்சியான நடைமுறைச் சமயவாழ்வைப் போதிப்பவராகச் சம்பந்தர் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் புத்திஜீவிகள் மத்தியில் நடக்கும் தத்துவப் போர்களில் சைவம் தோற்றுப்போய் பிரசமயத்தவரிடம் சரணடைந்துவிடக்கூடாது என்பதிலும் அவர் மிகமிக விழிப்பாக இருந்தார். சம்பந்தரின் இந்நிலைப்பாடாகிய ஒரு பானை சோற்றுக்கான ஒரு சோற்றுப்பருக்கையாகவே மாயை தொடர்பில் அவருடைய ஆழ்ந்திருக்கும் கவியுளத்தின் வெளிப்பாடு அமைந்து விளங்குகிறது எனலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. திருமுதுகுன்றத்திருப்பதிகம் 1.3.
2. சிவப்பிரகாசம் பா.23.
3. சி.சித்தியார் சுபக்கம்.34.
4. திருவீழிமிழலை 3.6.
5. திருப்புறம்பயத்திருப்பதிகம் 2.3.
6. சிவப்பிரகாசம் பா.47.
7. திருவீழிமிழலை 1.4.
8. திருநெல்.வாயில் 2.7.
9. திருவருட்பயன் 30
10. சி.போத சுத்.4.அதிகரணம் 2.பா.27.
11. திருக்கழிப்பாலை 2.4.
12. சி.சித்தியார் சுபக்கம் பா.143.
13. திருமந்திரம் -2268
14. திருவெம்பாவை
15. பல்லவனேசுவரப்பதிகம் 3.8.
16. மேலது
17. சிவப்பிரகாசம் பா.23.
18. சி.சித்தியார் சுபக்கம் பா.143.
19. திருவையாற்றுத்திருப்பதிகம்
20. திருநல்லூர் பெருமணம் 3.7.
21. திருப்பருப்பதம் 1.10.
22. திருச்சிவபுரம் 1.10.
23. திருப்பாசுரம் 3.5.

# இதய நோயும் விளாம்பழமும்..!



அடிக்கடி நெஞ்சுவலி ஏற்படுபவர்கள், விளாம்பழம் சாப்பிட்டுவர குணமாகும். வெயில் காலத்தில் அடிக்கடி தாகம் எடுத்தால் கூட இதைச் சாப்பிடலாம் ஏனெனில் இதயத்துக்கும் பாதுகாப்பு, தாகமும் தீரும்.. இப்பழத்திலிருந்து கல்லீரல் மற்றும் இதய கோளாறுக்கான டானிக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இது பழுக்காத போது துவர்ப்பாக இருக்கும். இது வயிற்றுபோக்கையும், வயிற்றுக்கடுப்பையும் நிறுத்தும் குணம் கொண்டது.

இது விக்கலுக்கு நல்ல மருந்தாக பயன்படுகிறது. தொண்டை புண்ணை இதனுடைய கோந்து சரி செய்கிறது. இதனுடைய சதை வீக்கத்திற்கு வைத்து கட்டுகிறார்கள்.. விஷப்பூச்சிகள் கடித்தால் பழ ஓட்டின் பவுடரை அரைத்து பூசுவதால் சரியாகிறது. பெரும் பயன் தரும் பழங்களில் இது ஒன்று. அடிக்கடி மார்பில் வலி ஏற்பட்டால், உங்கள் வயிற்றில் புளிப்பு தன்மையுடைய நீர் அதிகமாகி விட்டது என்று அர்த்தம். இதைப்போக்க இஞ்சியும், எலுமிச்சம்பழமும் உணவில் நிறைய சேர்த்துக்கொள்ளவும்.

அதன்பிறகு மார்பு வலி வராது. அடிக்கடி நெஞ்சுவலி ஏற்பட்டால், மாத்திரை மருந்து சாப்பிடுவதைவிட உளுந்து மாவைக் களியாகக்கிண்டி சாப்பிட்டு வந்தால் உடலுக்கும் பலம், நெஞ்சு வலியும் போகும். மாரடைப்பு, இதயநோய் வராமலிருக்க அடிக்கடி உணவில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளவும். கடலைப்பருப்பையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளவும். பூண்டைப் போட்டு காய்ச்சியும் பருகி வரலாம். மார்பில் நமநம என்று வலி ஏற்பட்டு தொந்தரவு வரும்போது செம்பரத்தம்பூ கஷாயம் மிகவும் நல்லது.

பூக்களை சுத்தம்செய்து, சுண்டும்படியாக கஷாயம் வைத்து, பாலும் சர்க்கரையும் கலந்து சாப்பிட்டு வந்தால், மார்புவலி இருக்காது. இருந்த வலியும் நின்றுபோகும். குப்பைமேனி இலையை உலர்த்தி இடித்து மெல்லிய துணியில் சலித்துக் கொண்டு, சமமாகச் சர்க்கரை சேர்த்து, 200 மில்லி பசும்பாலில் கலந்து, காலையில் மட்டும் சாப்பிட்டு வரவும்.

இவ்வாறு 15 நாட்கள் சாப்பிட்டால், மார்பு வலி நீங்கி தேகத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். மேலும் உடல் வனப்பு உண்டாகும். நெஞ்சுவலி வந்தால்இ போரீச்சம்பழத்தை அப்படியே கொட்டையுடன் இடித்துப் பிசைந்து, கொஞ்சம் கொஞ்சமாக நன்றாக மென்று விழுங்குங்கள். அதில் இரும்புச் சத்து நிறைந்துள்ளது. அதனால் நெஞ்சுவலியை எளிதில் குணப்படுத்தும்.

# DEEPAVALI

**Deepavali**

The Thamil month of Aipasi (October) the day before the new moon in the early morning when the 'thithi' is Sathurthasi is the time for Deepavali. In every house in the neighbour hood lamps are lit and arranged in a line. It is called Deepavali says the great Saiva scholar Sivapatha Suntharar. On that day people visit the temple for the tharsan and involve in charitable deeds. On this day the souls are prevented from going towards hell and attain a fortunate state. Therefore it is the duty of everybody to refrain from committing sins.

Above all it is a day to worship God who is pure. On this day states mythology, an asura called Narahasuran did many wicked deeds and committed all the heinous sins. The Devas, unable to bear this, approached God Vishnu and surrendered to Him to save them. Lord Vishnu complied with their request and vanquished the asura At the time of his death the asura realized his wicked ways and sins he committed and in order to be redeemed, he begged Lord Krishna thus, "Oh God, I do not ask anything for me. As a way of atoning for the sins I plead with you that those who follow the traditions and worship you, may attain moksha. Please grant this for me". God Vishnu also granted his wish and he attained moksha. On this day those who observe 'Upavaasam' and chant the many names of Vishnu will attain the Vaikunda moksha say the Puranas. People who do not understand this, and eat flesh, drink alcohol and commit many sins do so out of ignorance. Here after at least let the people refrain from doing so and go towards a better life.

# IMPORTANT FASTS IN AIPASI – OCTOBER

**Fridays fast**

"Sukkiravaram" means Friday. The Friday fasting is done on each Friday in the Thamil month of Aipasi. From the first Friday this fast is observed for God Subramaniam. On this day to observe Upavaasam (no meals for the day) is very good. Those who cannot do so may take in fruits in the night. If they are not able to do even this they may take a mid day meal. This fast should be observed for at least three years. When the fast ends a santhi kiriyai must be done. This kiriyai is called 'uthiyapanam'. It is said this is done to achieve merit. The last Friday is the best day for 'uthiyapanam'. Besides this day is also dedicated to Goddess Ambihai and God Vinayaga.

**Kantha Sashti Viratham**

The day after pirathamai the first 'thithi' after new moon, the six days following are observed as Kantha Sashti. Every day after the bath worship God Muruga and take only some water and observe 'upavaasam' for six days. On the seventh day join the Shiva devotees and have a meal. Those who cannot do so during the first five days may take a meal a day and on the last day observe 'upavaasam'. This fast should be continuously observed for six years.



On the said day that is 'pirathamai', from the third eye of God Shiva six sparks emerged and fell into the pond called 'saravana poihai'. They took six forms. When Goddes Uma took them together, they fused into one form with six faces and twelve hands. It happened on this Kantha Sashti day. It is on this day that God Muruga vanquished an Asura called Soorapathman. In the Kantha puraanam this is given in detail. The devas observed this fast and reaped much benefits, it is told.

Mondays, fast throughout the day and pray to God and have a meal in the night.

*(Source: Compendium for Hindus)*

# தாய்நாடும் சேய்நாடும் போற்றிய நாவலர்

முனைவர் செ.நக்கீரன்
மதுரை

ஈழத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு பலர் தொண்டாற்றி இருக்கிறார்கள். அதேபோல் சைவ சமயம் தளைத்தோங்கப்பணியாற்றியவர்கள் பலர் ஆவர். ஆனால் "சைவமும் தமிழும்" என்ற இரண்டையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்தவர் யார் என்று பார்க்கும்போது ஒரேயொருவர்தான் எங்கள் கண்முன் தெரிகிறார். 'தமிழ் உரைநடையின் தந்தை', 'ஐந்தாம் சைவ சமய குரவர்' என்று பலராலும் போற்றப்படும் நல்லூர் ஆறுமுக நாவலரே அந்தப் பெருமகனாவர்.

'நாயனார் நாற்குரவர் நாவலர்தென் ஞாலமிசை
மேயினார் ஈசனருள் மேல்'

என்று சி.வை. தாமோதரம் பிள்ளை செப்புகிறார்.

சங்க கால ஈழத்துப் பூதந்தேவனாருக்குப் பின்னர் தமிழ்நாட்டில் தன் புகழ் பதித்த பெருமை ஆறுமுக நாவலருக்கு மட்டுமே உண்டு. தமிழகத்தின் சமய வரலாறு, இலக்கிய வரலாறு, சமூக வரலாறுகளில் நாவலர் தம்முடைய முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளார்.



நாவலர் பிறந்திலரேல் சைவசமயத்திற்கும் தமிழுக்கும் என்ன நடந்திருக்கும் என்பதை நாவலர் சிவபதமடைந்தபோது சி.வை. தாமோதரம்பிள்ளை எழுதிய இன்னொரு பாடல் இனிது விளக்குகிறது.

'நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை.'

நாவலர் என்பது நாவாற்றல் படைத்தவர் என்பதைக் குறிக்கும். இந்தப் பட்டத்தை யாழ்ப்பாணம் கந்தப்பிள்ளை ஆறுமுகம் அவர்கட்கு திருவாவடுதுறை ஆதீனமே செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் அவர் ஆற்றிய பெருந்தொண்டினைப் பாராட்டுமுகமாக வழங்கிச் சிறப்பித்தது.

நாவலரின் காலம் (1822 - 1879) பிறபண்பாட்டுக்கும், பிறமொழிப் படையெடுப்புக்கும் தமிழர்கள் உட்பட்டிருந்த காலம். ஆண்ட பரம்பரை அரசிழந்து அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலம்.

கல்வி வாய்ப்புக்காகவும், அரச ஊழியத்துக்காகவும் பேராசை காட்டப்பட்டு தமிழ்மக்கள் சைவ சமயத்தைவிட்டு கிறித்துவ மதத்திற்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்பட்டு ஆங்கில மோகம் மக்களை ஆட்டிப்படைத்தது.

இந்த இரண்டு போக்கினின்றும் மக்களைத் தடுத்து நிறுத்தி தமிழ்மொழியையும் சைவநெறியையும் போற்றி வளர்த்திட தம் வாழ்நாள் முழுவதும் நாவலர் பாடுபட்டார். புறசமயத்தவர் எவற்றைக் கருவிகளாகக் கொண்டு தமிழ் மக்களை மதமாற்றம் செய்யப் புறப்பட்டார்களோ அதே கருவிகளை நாவலரும் கையில் எடுத்தார்!

ஆறுமுக நாவலரின் சுற்றம் செல்வாக்கு மிகுந்தது. அவரது பரம்பரை பொன்பற்றியூர் பாண்டிமளவன் வழி எனக் கருதப்படுகிறது. அவரது முன்னோரில் ஒருவராகச் சிறப்புப் பெற்றவர் ஞானப்பிரகாச முனிவர் என்பவர். வடகோவை சபாபதி நாவலர், ஆறுமுக நாவலரை வெறும் ஆறுமுகமாக திருவாவடுதுறை மடத்திற்கு அனுப்பி வைத்தபோது அவர் சமவாத சைவப் பிசாசாகிய ஞானப்பிரகாச முனிவர் மரபிற் பிறந்தவர் என்று கூறும் கடிதத்தோடு அனுப்பி வைக்கப்பட்டார்.

அக்கால வழக்கப்படி ஆசிரியர் சுப்பிரமணியம் என்பவர் நடத்திவந்த தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் நாவலர் கல்வி கற்கத் தொடங்கினார். பின்பு அவரது உடன்பிறப்புக்கள் சரவணமுத்துப் புலவர், சேனாதிராயர் முதலியோரிடத்தில் தமிழ்க் கல்வி கற்க வழி செய்தனர். தமது ஆசிரியர்களிடம் கற்க வேண்டிய இலக்கிய இலக்கணங்களை நாவலர் நன்கு கற்றுக் கொண்டார். இவரது திறமையைக் கண்ட அண்ணன்மார் யாழ்ப்பாண மத்திய பாடசாலையில் ஆங்கிலம் கற்க அனுப்பி வைத்தனர். நன்கு ஆங்கிலம் கற்று தமிழ்மொழியோடு இருமொழிப் புலமையைக் கண்ட பாடசாலை அதிபர் பேர்சிவல் பாதிரியார் அந்தப் பாடசாலையில் மேல்வகுப்பு மாணவர்களுக்கு தமிழ், ஆங்கிலம் கற்பிக்க அவரை நியமித்தார். இவரது மொழியாற்றலைக் கண்டு வியந்த பேர்சிவல் பாதிரியார் விவிலிய நூலினனை தமிழில் மொழிபெயர்ப்பதற்காக தனது தமிழ்ப் பண்டிதராக வைத்துக் கொண்டார். இந்தப் பதவியில் ஊதியம் இல்லாமல் பல ஆண்டு நாவலர் பணியாற்றினார். இந்தக் காலத்திலேயே

சிவாகமங்களை நாவலர் ஐயந்திரிபறக் கற்றுக் கொண்டார்.

ஆறுமுக நாவலர் ஒரு பழமைவாதி என்பது அவர் மீது பலரால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் ஒன்று. அதற்குக் காரணம் நாவலர் திருக்கோயில்களில் நடைபெறும் அர்ச்சனைகள், பூசைகள் ஆகம முறைப்படி செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதே.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும், ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் போன்ற மூர்த்தங்களை வழிபடும் மார்க்கம் சைவ சமயம் என்றார். அவ்வாறு இல்லாது சிறு தெய்வங்களை பரம் என்று வணங்குகிற சமயம் சைவ சமயம் ஆகாது என்றார். துட்ட தேவதைகளையும், காடன், மாடன், காட்டேறி, மதுரை வீரன், கறுப்பன், முனி போன்றவர்களை மட்டுமல்ல கண்ணகியை அம்மனாக வணங்குவதையும் நாவலர் கண்டித்தார்.

ஆகமங்களில் விதித்தவாறு சிதம்பரத்தில் பூசைகள் செய்யப்படவில்லை என அங்குள்ள தீட்சிதர்களைக் கண்டித்ததால் அவர்களது பகையை நாவலர் தேடிக் கொண்டார்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகரது அருட்பாக்களை மட்டுமே கோயில்களில் ஓதப்பட வேண்டும் என்பது நாவலர் கட்சி. அதனால் இராமலிங்க அடிகளாரது திருமுறைகள் மருட்பா எனக் கண்டித்தார். இதுபற்றி எழுந்த மோதலே நாவலரையும் இராமலிங்க அடிகளாரையும் சிதம்பர தீட்சிதர்களையும் நீதிமன்றப் படி ஏற வைத்தது. இராமலிங்க அடிகளாரது திருமறைகளை மருட்பா என்று சாடினாலும் தனிப்பட்ட முறையில் இராமலிங்க அடிகளார் ஒரு சான்றோர் என்பதை நாவலர் மறுக்கவில்லை.

கிறித்தவ பாதிரிமார்கள் சமயம் வளர்க்க பல பள்ளிகள் நிறுவினார்கள். நாவலரும் அரும்பாடு பட்டு சைவப் பள்ளிகள் நிறுவினார். அந்தப் பள்ளிகளில் சமய சாத்திரங்கள் (தேவார திருவாசகங்கள், புராணங்கள், நாலடியார், திருக்குறள், மெய்கண்ட சாத்திரங்கள்) படிப்பிப்பதற்கு ஒரு பாடத் திட்டத்தையே வகுத்தார். அத்தோடு மேற்குநாட்டுச் சாத்திரங்களான வரலாறு, பூகோளம், கணிதம், இயற்பியல், வேற்பியல் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

நாவலரும் விடா முயற்சி எடுத்து அச்சுக் கூடங்களை யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் நிறுவி ஓலைகளில் இருந்த சைவசமய நூல்களை ஒப்புநோக்கி, பாடபேதங்கள் நீக்கிப் பதிப்பித்து வெளியிட்டார். சைவ வினாவிடை நூல்களை எழுதினார். பல நூல்களுக்கு உரை எழுதினார். அவரது நண்பர்கள், மாணாக்கர்கள் எழுதிய நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தார். அல்லது பதிப்பிக்க உதவினார். நாவலரது உழைப்பால் வெளிவந்த நூல்களுக்கு அளவில்லை.

நாவலர் மீது வீசப்படும் இன்னொரு குற்றச்சாட்டு அவர் தமிழினத்தில் புரையோடிப் போய்க்கிடந்த சாதி அமைப்பை ஆதரித்தார் என்பது. இதற்குக் காரணம் நாவலர் ஆகமத்தின் மீது வைத்திருந்த பக்தியே. சிவநிந்தனை செய்பவர்களையே அவர் இழிநாதி என்று கூறினாரே தவிர சமுதாயத்தினுள் காணப்பட்ட சாதி முறைகளை அவர் என்றும் பேசியதில்லை. ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். நாவலர் ஒரு சமூக சீர்திருத்தவாதி அல்ல. அதற்கு அவருக்கு நேரம் இருக்கவில்லை. பிற சமய, மொழி,பண்பாடு இவற்றின் படையெடுப்பில் இருந்து தமிழினத்தைக் காப்பாற்றுவதே அவரது ஒரே நோக்கமாகவும் உடனடிக் குறிக்கோளாகவும் இருந்தது. அதனால் வயலில் உள்ள களையைப்பற்றிக் கவலைப்படாது பரசமய வெள்ளம் உள்ளே வராது சைவசமயம் என்ற வயலுக்கு வரம்பு கட்டினார். இதனைத் தவறென்று சொல்ல முடியாது.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளன்று ஆறுமுக நாவலர் ஆற்றிய இறுதியுரை தமக்கு ஒரு வாரிசைத் தேடிக் கொள்ளாத மனத் தாங்கலை வெளிப்படுத்தியது.

'நான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருடகாலம் உங்களுக்கு சைவ சமயத்தின் உண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப் போமென்றுபாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடு இருக்கும்போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும், என்னைப் போலப் படித்தவர்களும் சன்மார்க்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்கள் வைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல் ஒருவரும் வரார்.'

நல்லைநகர் ஆறுமுக நாவலர் மறைந்து இத்தனை ஆண்டுகள் உருண்டோடி விட்டன. நாவலர் விட்டுச் சென்ற சமயப் பணியையும் தமிழ்ப் பணியையும் பின்வந்த தலைமுறைகள் செவ்வனே செய்து முடித்து விட்டனவா?

## இறைவன் ஒருவனே!

ஒரே பரம்பொருளை 'முருகா!' என்றாலும், 'சிவனே!' என்று துதித்தாலும் 'திருமாலே' என்று வணங்கினாலும், 'கணபதியே' என்று அழைத்தாலும் ஏன் என்கிறார்கள் மானிடர்கள். ஒவ்வொரு சுவாமிக்கும் தேங்காய் உடைக்கச் சொல்கிறீர்களே என வருத்தப்படுகின்றனர். இது அவரவர் மனநிலையைப் பொறுத்தது.

குழந்தை பிறந்தவுடன் பெயர் வைக்கப்படாமல் இருக்கும். அதை தந்தை 'கண்ணே' என்பார். தாய் 'மணியே' என்பாள். தாத்தா 'முத்தே' என்பார். பக்கத்து வீட்டுக்காரர் 'ராஜா' என்பார். இப்படி அவரவர் வசதிப்படி குழந்தையைக் கொஞ்சுவதில்லையா? அது போல பாசத்திற்குரிய இறைவன் ஒருவன் தான். பெயர்கள் தான் பல.

-வாரியார் சுவாமிகள்

சிவமயம்

# இந்து ஒளி

மாமன்றச் செய்தி மடல்

All Ceylon Hindu Congress Newsletter

ஏவிளம்பி வருடம் ஐப்பசித்திங்கள் 01ம் நாள் (18-October, 2017)

*பத்திரிகைச் செய்தி*

## அகில இலங்கை இந்து மாமன்றம் விடுக்கும் தீபாவளிச் செய்தி

நாம் கடந்த காலங்களில் குறிப்பிட்டது போலவே இந்நாட்டில் நல்லாட்சி அரசு ஆட்சியில் இருந்தாலும் எம்மக்கள் களிப்புடன் தீபாவளியைக் கொண்டாடும் நாள் இன்னமும் ஏற்படவில்லை என்பதே யதார்த்தமாகவுள்ளது.

தீபாவளியன்று இறைவனை நினைத்து வழிபட்டு, இந்து மக்கள் தமது ஆன்மீகப்பாதையில் ஈடுபடவேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

சிறையில் வாடும் எமது உடன்பிறப்புக்கள் விடுதலையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்தம் குடும்பத்தினர் தொடர் போராட்டங்களை நடாத்திவருவதும் ஒவ்வொரு போராட்டமும் வலுப்பெறும் போது எமது அரசியல் தலைவர்கள் சென்று உறுதிமொழிகளை வழங்குவதும் அதைநம்பி அவர்கள் போராட்டத்தை கைவிடுவதும் கடந்தகாலங்களின் கசப்பான அனுபவமாகவுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் புள்ளிவிபரங்களின்படி தற்போது சுமார் 72 அரசியல் கைதிகள் எவ்வித விசாரணையுமின்றி நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதும், அவர்களின் விசாரணைகள் கிடப்பில் போடப்படுவதுடன் சிலகைதிகளை தமிழ் பிரதேச சிறைச்சாலைகளிலிருந்து சிங்கள பிரதேச சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதும் எவ்விதத்திலும் ஏற்கப்பட முடியாததாகும்.

சமீபகாலத்தில் நீதிமன்ற விசாரணைகளுக்காக வவுனியா நீதிமன்றிலிருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு விசாரணைக்காக மாற்றப்பட்ட சிறைக் கைதிகள் மூவர் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்களின் நிலை மிகமோசமாக உள்ளதையிட்டு அரசு எவ்வித கரிசனையுமின்றி இருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இக் கைதிகளை மீண்டும் அவர்களின் விசாரணைகளை வவுனியா நீதிமன்றிக்கு மாற்றுமாறு அவர்களின் உறவுகள் நடாத்தும் தொடர் போராட்டங்களை அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

எமது அரசியல் கைதிகள் அனைவரும் பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய்வதற்கு அரசு உடன் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் இவ்வாறு எமது மக்களை மாற்றான் தாய் மனப்பாங்குடன் நோக்குவது நல்லாட்சி அரசுக்கு ஏற்புடையதல்ல எனவும் சுட்டிக் காட்டுவதுடன் தமிழ் மக்களின் ஆதரவை இவ் அரசு இழக்கும் நிலைக்கு தள்ளப்படலாமெனவும் எச்சரிக்க விரும்புகின்றோம்.

எனவே சிறையில் வாடும் எமது உடன்பிறப்புக்களை விடுதலை செய்து, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை தெரியப்படுத்தி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் புனர்வாழ்வு அளித்து எம் மக்களின் துயர நிலையிலிருந்து அவர்களை முற்றாக வெளிக்கொணருமாறும் அம்மக்களுக்கான மன ஆறுதலை கொடுக்க வேண்டுமெனவும் அரசாங்கத்தை விநயமாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அரசால் முன்னெடுக்கப்படும் புதிய அரசியலமைப்பின் வெற்றி மேலே குறிப்பிட்ட எமது மக்களுக்கு அரசால் மேற்கொள்ளப்படும் தீர்விலேயே தங்கியுள்ளது எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இலங்கை இந்துமன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமாகவும் இந்து மக்களின் உச்ச நிறுவனமாகவும், திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம் எமது மக்களின் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளது. இதற்கான தீர்வினை நோக்கி அரசு உடனடியாக செயல்படவேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் அதன்பின்னரே அரசு கூறுவது போல தீபாவளியை ஒரு தேசியப் பண்டிகையாகக் கொண்டாட இந்நாட்டுத் தமிழ் மக்களின் முக்கியமாக இந்துக்களின் ஆதரவு அரசுக்குக் கிடைக்குமென்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அதுவரை தீபாவளிப் பண்டிகையை இந்துக்கள் இறைவழிபாட்டுடன் அமைதியாக அனுஷ்டிப்பார்களே ஒழிய எவ்வித ஆடம்பர கொண்டாட்டங்களையும் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதையும் வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

என்றும் இறைபணியில்

| | |
|---|---|
| **கந்தையா நீலகண்டன்** | **வே.கந்தசாமி** |
| **தலைவர்** | **பொதுச் செயலாளர்.** |

## 40வது ஆண்டு நிறைவுகாணும் சைவ முன்னேற்றச் சங்கம் [UK] நகு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வாழ்த்துக்கள்!

தன்னிகரற்ற சமய சமூகப் பணிகளில் புலம்பெயர் அமைப்பாக திகழ்ந்து தாயகத்திலிருக்கும் இந்து சொந்தங்களுக்கு அளப்பரும் தொண்டாற்றிவரும் சைவமுன்னேற்றச் சங்கம் (UK) தனது 40 ஆண்டு நிறைவை பூர்த்தி செய்வதையிட்டு நாம் மனமிக மகிழ்வடைகின்றோம்.

கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தினால் கடும் பாதிப்புக்குள்ளாகி இன்றும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் தமிழ் உறவுகளுக்கு தக்க தருணங்களில் பலவகைகளிலும் சைவ முன்னேற்றச்

சங்கம் (UK) ஆனது தன்து ஆதரவுக் கரங்களை நீட்டி உதவி வந்துள்ளது. அம் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் சிறார்களின் கல்வி அபிவிருத்திக்கும் எதிர்காலத்தில் தனது சேவையை விஸ்தரித்து தன்து பணிகளை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அவர்களுடன் கைகோர்த்து மாமன்றமும் எம் மக்களுக்கான பணிகளில் முன்னின்று உழைக்கும் என்பதையும் குறிப்பிட்டு கூறிவைக்க விரும்புகின்றோம்.

வறுமையாலும் யுத்தத்தின் வடுக்களுடனும் வாடும் எம்மக்களின் பிள்ளைகள் தமது திருமண வயதை எட்டியும் தமது வாழ்வைத் தொடங்க முடியாமல் தவித்து நின்றனர். அந்த வேளையில் ஆண்டவன் அருளினாலும் அம் மக்களின் வேண்டுதலாலும் சைவ முன்னேற்றச் சங்கம் (UK) தனது 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 40 மணமக்களுக்கு இலவச திருமணம் நடாத்திவைக்கும் திட்டத்தை ஆரம்பித்து எமக்கு தெரியப்படுத்தியிருந்தனர். அத்திட்டத்தை எம்முடன் இணைந்து வெற்றிகரமாக முன்னெடுத்ததன் பயனாக 40 மணமக்களுக்கு கடந்த 15-09-2017 அன்று பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் மிகச்சிறப்பான முறையில் திருமணத்தையும் நிறைவேற்றினோம்.

இவ்வாறான பல அரிய தொண்டுகளை அவர்கள் மேலும் மேலும் ஆற்றும் சக்தியையும் வளங்களையும் எல்லாவற்றுக்கும் மேலான இறை அருளையும் எல்லாம்வல்ல சிவகாமி அம்பாள சமேத ஸ்ரீ நடராஜப் பொருமான் வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்**

**கந்தையா நீலகண்டன்**

## நவராத்திரிப் பெருவிழா

இந்து வித்தியாவிருத்திச் சங்கத்துடன் ஏனைய இந்து நிறுவனங்களும் கலைத்துறை விற்பன்னர்களும் இணைந்து வழங்கிய "நவராத்திரிப் பெருவிழா", கடந்த 21-09-2017 வியாழக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆரம்பமாகி தினமும் மாலை 5.30 மணிக்கு பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து வெவ்வேறு நிறுவனங்களின் ஆதரவுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்ற இப் பெருவிழாவில் கொழும்பு நுண்கலைக் கோயில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி - சக்தி இல்ல மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறை பயிற்சி மையத்தின் பண்ணிசை நிகழ்ச்சி, கலாசூரி திவ்யா சுஜேன் அவர்களின் அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி வழங்கிய "நர்த்தகா உற்சவம்", கொழும்பு இந்து மகளிர் மன்றம் வழங்கிய கலை நிகழ்ச்சிகள், ஆரோஹணா இசை நிறுவன இயக்குனர் இசை விரிவுரையாளர் திரு. அருணந்தி ஆரூரன் வழங்கிய இசைக்கச்சேரி, திருமதி பவானி குகப்பிரியாவின் தியாகராஜா கலைக்கோயில் மாணவிகள் வழங்கிய 'பரத கலார்ப்பணம்', பெஃவயர் கல்லூரி (Belvoir College) இந்து மன்ற மாணவ மாணவியரிக் கலை நிகழ்ச்சிகள், இந்து வித்தியா விருத்திச் சங்க கலைநிகழ்ச்சிகள், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் கொழும்பு சங்கம் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் ஆகிய இடம் பெற்றன.

## மாமன்றத்தின் கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிரேஷ்ட உபதலைவரும் மாமன்றக் கட்டடங்கள் குழுத் தலைவரும், தொழில் அதிபருமான திரு.எஸ்.ரி.எஸ்.அருளானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், இந்து மாமன்றத்துடன் இணைந்து பல சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்தவருமான அருளானந்தன் அமிர்தாம்பிகை அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியுமடைந்தோம்.

அமரர் அமிர்தாம்பிகை அருளானந்தன் எமது மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்ததுடன் அவ்வப்போது எமக்கு வேண்டிய உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வந்தார். யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபரும் முன்னாள் செனற்சபை உறுப்பினரும் மாமன்றத்தின் முன்னாள் உபதலைவருமான திரு. திருமதி நீதிராஜா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற பிரபல தொழில் அதிபரும் மாமன்றத்தின் முன்னாள் உபதலைவருமாகிய திரு. திருமதி. சின்னத்துரை அவர்களின் அன்பு மருமகளுமாவார். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமனை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

## மாமன்றத்தின் நூல்வெளியீட்டு விழா

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நடாத்தப்பட்ட இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா, கடந்த ஆவணிமாதம் 31ம் நாள் (16-09-2017) சனிக்கிழமை அன்று மாலை 4.30 மணி முதல் பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு மேல்மாகாண ஆளுநர், மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், ஜனாதிபதி சட்டத்தரணியும் மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவருமாகிய திரு. கனகநாயகம் கனக-ஈஸ்வரன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

திருமதி திலகா விஜயரட்ணம் அவர்கள், இந்து சமய கோட்பாடுகளின் தத்துவங்கள் பற்றி ஆங்கில மொழியில் விரிவாக எழுதியுள்ள "SOME ASPECTS OF HINDUISM" என்னும் நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் தொடர்பான ஆய்வினை Ceylon Today பத்திரிகையின் செய்தி ஆசிரியர் திரு. ஆனந்த் பாலகிட்ணர் அவர்கள் நிகழ்த்தினார்.

நிகழ்வின் இரண்டாவது நூலாக திருமலை நவம் அவர்களின் ஆய்வு முயற்சியில் உருவான, திருமலை மண்ணின் வரலாறு, திருக்கோணேஸ்வரம், கன்னியா வெந்நீரூற்று, கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் ஆகியவை தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்ளடங்கிய "இராவண தேசம்" என்னும் நூல் வெளியிடப்பட்டதுடன் இந்நூல் தொடர்பான ஆய்வினை, மாமன்ற உபதலைவரும், மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குனரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமாகிய கலாநிதி சைவஞானபானு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் நிகழ்த்தினார்.

## கிளிநொச்சி ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகளின் மறைவுக்கு இந்து மாமன்றம் அனுதாபம்



கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தின் குருமுதல்வர் ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றம் நீண்டகாலமாகவே சுவாமிகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தது.மாமன்றம் தனது அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி 2015ஆம் ஆண்டு மூன்று நாள் பெருவிழாவாக யாழ்ப்பாணத்தில் நடத்திய இந்து ஆராய்ச்சி மாநாட்டின்போது மூன்றாவது நாளான 2015 ஆகஸ்ட் 2ஆம் திகதியன்று ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் மாமன்றத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

மகாதேவ ஆச்சிரமம் 1952ஆம் ஆண்டில் கிளிநொச்சி ஜெயந்திநகரில் தவத்திரு வடிவேல் சுவாமிகள் அவர்களால் தாபிக்கப்பட்டது. இவர், யாழ்ப்பாணம் சிவகுருநாத பீடத்தின் (வேதாந்த மடம்) குரு முதல்வராகவிருந்து ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் அவர்களது சீடர்களுள் ஒருவராக விளங்கியவர். ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் சமாதி நிலையடைந்த பின்னர், வடிவேல் சுவாமிகளை கிளிநொச்சிக்குச் சென்று பணியாற்றும்படி யோகர் சுவாமிகள் கேட்டுக் கொண்டார். அதன்படி கிளிநொச்சி சென்ற வடிவேல் சுவாமிகள் தனது குருநாதரான ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் நினைவாக அவரது பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மகாதேவ ஆச்சிரமத்தில் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் சீடர்களாக பலர் இணைந்து கொண்டு இவரது ஆன்மீகப் பணிக்குப் பெரிதும் உதவி வந்தனர். இவர்களுள் ஒருவர்தான் கணேசபிள்ளை அவர்கள். ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சமாதியடைவதற்கு முன்பதாக தனக்குப் பின் ஆச்சிரம முதல்வராகவிருந்து ஆன்மீகப் பணியாற்றும் வகையில் கணேசபிள்ளை அவர்களுக்கு காவி வஸ்திரம் வழங்கி கணேசானந்த மகாதேவ சுவாமிகள் என்ற தீட்ஷா நாமம் சூட்டி பீடாரோகணம் செய்து வைத்தார். 1990ஆம் ஆண்டு ஆனி மாதம் 26ஆம் திகதியன்று ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சமாதியடைந்தபோது மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வராக ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது வரலாற்றுப் பதிவு.

கிளிநொச்சி மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைவசமய மரபுகளைப் பேணும் வகையிலும் பல்வேறு சமய, சமூகப் பணிகளைச் செய்துவந்தார். போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கும், அவர்களுக்குச் சமய, கலாசார விழுமியங்களைப் போதிப்பதற்கும் சைவச் சிறுவர் இல்லத்தை ஆரம்பித்தார். வன்னேரிக்குளத்தில் யோகர் சுவாமிகள் திருவடி நிலையை முதியோர் இல்லத்தை ஆரம்பிப்பதற்கும் சுவாமிகளே காரணமாக இருந்துள்ளார்.

மகாதேவ ஆச்சிரமம் பல ஞானிகளின் திருவடிகள் பதிந்துள்ள இடமாகவும், அவர்களது அருளாசியைப் பெற்றுள்ள வகையிலும் அமைந்துள்ளது. மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வராக இருந்து ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆற்றி வந்த ஆன்மீக, சமய, சமூகநலப் பணிகள் பெரிதும் போற்றுதற்குரியன என்பதுடன் அவை காலத்தால் மறக்கப்பட முடியாதனவாகும்.

சமாதிநிலையடைந்துள்ள ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் ஆத்ம சாந்திக்கு இறையருளை வேண்டி மாமன்றத்தின் சார்பாக பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

## இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- ஸ்ரீ லக்ஷ்மீ சமேத ஸ்ரீமந் நாராயணர் அருள்பொழியும் தீபாவளித் திருநாள்! 4
- சஷ்டியில் ஷண்முகன் தரிசனம் ! 6
- கந்தன் அருள்பொழியும் கார்த்திகை விரதம் 8
- ஸ்ரீரங்கம் - காலவெளியில் ஒரு பயணம் 10
- தமிழறிஞர் விபுலானந்தர் 12
- சிவமூலிகைகளின் சிகரம் வில்வம்... 15
- தோப்புக்கரணம் கொடுக்கும் பலன்கள்.. 16
- யோகா செய்ய நேரமில்லையா? 17
- மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம் - வேம்பு! 19
- இந்து இலக்கியங்களில் விருந்தோம்பற் சிந்தனைகள் 21
- இந்துப் பண்பாட்டு இயங்கியலில் 'தாலி' யின் முக்கியத்துவம் 23
- குட்டிப் பிள்ளையாரும் செம்மாங்கனியும் 25
- திருஞானசம்பந்தர் பாடல்களில் மாயை 27
- Deepavali 31
- Important Fasts in Aipasi - October 31
- தாய்நாடும் சேய்நாடும் போற்றிய நாவலர் 32
- மாமன்றச் செய்திமடல் 34

## கடந்த 16-09-2017 அன்று நடைபெற்ற "Some Aspects of Hinduism", "இராவண தேசம்" ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவின் பதிவுகள் சில...




பிரதம விருந்தினர் மாண்புமிகு கே.சி.லோகேஸ்வரன் அவர்களின் உரை



கௌரவ விருந்தினர். ஜனாதிபதி சட்டத்தரணி திரு.கனக-ஈஸ்வரன் அவர்களின் உரை



அரங்கில் அமர்ந்திருக்கும் விழாவின் அதிதிகளும் பிதிநிதிகளும்...



கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஆற்றும் 'இராவண தேசம்' நூல் ஆய்வு



கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை திரு.பத்மராஜ் அவர்கள் கௌரவித்தவேளை.



ஏற்புரை - 'இரவணதேசம்' நூலாசிரியர் திருமலை நவம் அவர்கள்



திரு.ஆனந்த் பாலகிட்ணர் அவர்கள் ஆற்றும் 'Some Aspects of Hinduism' நூல் ஆய்வு





திரு.ஆனந்த் பாலகிட்ணர் அவர்களை சைவ முன்னேற்றச் சங்க (UK) செயலாளர் திரு.இந்துசேகரன் அவர்கள் பொன்னாடை அணிவித்தும் மாமன்றத்தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் சந்தனமாலை அணிவித்தும் கௌரவித்தனர்.



மாமன்றப் பொதுச் செயலாளர் திரு.வே.கந்தசாமி அவர்களின் நன்றியுரை



சபையோரில் ஒருபகுதியினர்...

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/55/NEWS/2017

சைவ முன்னேற்றச் சங்கம் (UK) மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றம் இணைந்து நடாத்தும் "40ல் திருமணங்கள் 40" திட்டத்தின் 2வது கட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மணமக்கள்.








சைவ முன்னேற்றச் சங்கத்தின் (UK) செயலாளர் திரு. இந்துசேகரன் அவர்களும் அவரது பாரியாரும் மாமன்றத்தின் சக்தி இல்ல மாணவ மாணவியருடன்....



கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் இரண்டாவது குருபீடாதிபதியும் தலைவருமான ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் மகா சமாதி (24-08-2017) அடைந்த நிகழ்வின் பதிவுகள் சில...



இவ்விதழ் இல. 43B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது